உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீகாமாக்ஷிதேவ்யைநம:

காமாக்ஷி லீலா பிரபாவம்.

இஃது

ஸ்ரீ கோளகிமடநிவாஸ பஞ்சாக்ஷர சிவாசாரியர்
மரபில் வந்தவரும், ஸ்ரீ ஏகாம்பரநாதர் பூஜகரும், ஸ்ரீ முத்து
கச்சபேச்வர சிவாசாரியர் குமாரரும்
ஆகிய
ஸ்ரீமத் - பைரவ சிவாசாரியா
முன்னிலையில்

[illegible] - ஏ - ஆலாலசுந்தரம் பிள்ளை
அவர்களால்
மொழிபெயர்க்கப்பட்டு,

ஸ்ரீ காஞ்சி சிவநேசச்செல்வர்களின்
பேருதவியால்

சென்னை:
வித்யா பரிஸ்கர அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

விசுவாவசு ௵ பங்குனி௴

1906.

இதன் விலை அ௵ 12.

உ

விளம்பரம்.

இப்புத்தகம மிகவும் அவசியம வேண்டியவர் ஸ்ரீகாஞ்சிபுரம் ஆடிசன்பேட்டை பண்டாபீஸ் ம-ா-ா-ஸ்ரீ - து. அ. பாலசுந்தர முதலியாரவாகளிடத்திலும், சின்னகாஞ்சிபுரம் வெள்ளாழஞ் செட்டித்தெரு ம-ா-ா-ஸ்ரீ - கு. அப்பாசாமி செட்டியாரிவர்களிடத்திலும், சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை கோவிந்தப்பநாயக்கன் தெரு வித்யா பாஸ்கர அச்சியந்திரசாலை புரொப்ரைட்டர் ம-ா-ா-ஸ்ரீ - மல்லவபுரம்-அ-சோமசுந்தரசெட்டியாரவர்களிடத்திலும, ஷை சென்னை வேப்பேரி ரெண்டால்ஸ் ரோட் 19-நெம்பர் வீடு ம-ா-ா-ஸ்ரீ கா. ஏ. ஆ. ஏகாம்பரம் பிள்ளையவர்களிடத்திலும் வி. பி மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

விகடசக்ரவிநாயக ஸ்தோத்திரம்

ஸ்வகடஜாத மதாச்ரித பம்பர
பாகடகூஜித நாஸிக திக்தடம்
நிகடவாஸிந மேகரசாஸினோ
விகடசக்ர விநாயக மாச்ரயே.

மாதாமஹ மஹாசைலம்
மஹாஸ்தத பிதாமஹம்
காரணம் ஜகதாம்வந்தே
கண்டாது பரிவாரணம்.

ஆம்ப்ரநாத ஸ்தோத்திரம்

ஐச்வர்யம் பரமந்தத்வ மாதிமத்யாந்த வர்ஜிதம்
ஆதாரம் சர்வலோகானாம் அநாதார மவிக்ரயம்
அநந்தானந்த போதாம்பு நிதி மத்புதவிக்ரமம்
அம்பிகாபதி மீசான மனிசம் ப்ரணமாம்யஹம்.

ஸுப்ரசன்னம் மஹாதேவ்யா நித்யகல்யாண சுந்தரம் மஹாப்ரளய பாபக்னம் ரசாலேச மஹம்பஜே.

உமாலிங்கன சக்ராங்க குசகங்கணமுத்ரிதம், லிங்க மேகாம்ப்ர நாதஸ்ய சைகதம் சமுபாஸ்மஹே.

திரிபுரசுந்தரிஸ்தோத்திரம்.

இக்ஷுகோதண்ட புஷ்பேஷு பாசாங்குச லசத்கராம் உத்யத்ஸூர்ய நிபாம்வந்தே மஹாத்ரிபுரசுந்தரீம்.

விச்வகாரண நேத்ராட்யாம் மஹாத்ரிபுர சுந்தரீம், பந்தகாசுர சம்ஹார்த்ரீம் காமாக்ஷீம் தாமஹம்பஜே.

சுவர்ணகாமாக்ஷி ஸ்தோத்திரம்.

ச்வர்ணாங்கீம் ரத்னபூஷாட்யாம் சுகஹஸ்தாம சுசிஸ்மிதாம, காஞ்சி நிவாசினீம்வந்தே காமாக்ஷீம் காமிதார்த்த தாம்

ஆம்பரவிருக்ஷ ஸ்தோத்திரம்

சிவபீஜஸமுத்பூதம் வேதசாகாபி ருஜ்வலம, மருகண்டு தனயாதாரம் ரசாலம்தம் நமா ம்யஹம்.

காமகோடிபீட ஸ்தோத்திரம்

ஜகத்காமகளாகாரம் நாபிஸ்தானம் புவஃபரம, பதாங்கமஸ்ய காமாக்ஷ்யா மஹாபீட முபாஸ்மஹே.

காமகோடிமஹாபில ஸ்தோத்திரம்.

காயத்ரீமண்டபாதாரம் நாபிஸ்தானம் புவஃபரம், புருஷார்த்தப்ரதம் சம்போ பிலாபராந்தந் நமாம்யஹம.

சர்வதீர்த்த ஸ்தோத்திரம்.

ஹரரோம சமுத்பூத சர்வதீர்த்த சமன்வயாத், சாவதீர்த்தா ஹ்வயம் வந்தே கமபாயா பூரிதம்சரஃ.

வேகவதிநதி ஸ்தோத்திரம்.

நமஸ்தேபிரஹ்ம பத்னிதவாம் ஸரிதரூபாம சரஸ்வதீம், சர்வபாப ப்ரசமனீம் வேகவத் யபிதான்விதாம.

காமாக்ஷிலீலா பிரபாவத்தில் வரும் அம்சம் என்பதினளவு:

160-அம்சங்கொண்டது 1-யோசனை. ஒரு யோசனைக்கு மைல்-10. ஒரு மைலுக்கு அம்சம்-16

ஸ்ரீ காமாக்ஷிதேவ்யைநம:

அத்தியாய விஷய சூசனிகா.

முதலத்தியாயம்.

பராசத்தி பலவிதமான பிலரூபமாயும், யந்திரரூபமாயும், பிம்பரூபமாயும், இன்னும் பலரூபமாயு மிருந்து தனது ஆதிக்கியத்தைக் காட்டுகின்ற க்ஷேத்திரங்கள் பலவிருப்பினும் பராசத்திபிலயந்திர பிம்பரூபமாயிருக்கின்ற மகிமையையும், சிவசொரூபமாயிருக்கின்ற அற்புதக் காட்சியையும் விஷ்ணு சொரூபமாயிருக்கின்ற மோகனக்காட்சியையும், விளக்குவது காஞ்சியா யிருத்தலால் இது மேம்பாடுடையதாயிற்றென்பதையும், சிவகாமேஸ்வராங்கஸ்தா, சிவஸ்வாதீனவல்லபா, என்கிற நாமங்களைப் பராசத்தி யுடைத்தாயிருப்பதால் சோதிலிங்க சத்தி சொரூபிணியாயும், விஷ்ணுரூபிணீ, விஷ்ணுமாயாவிலாசினீ என்கிற நாமங்களையு முடைத்தாயிருப்பதால் வரதராஜமூர்த்தியாயும் இருக்கின்றாளென்பதையும், சோதிலிங்க சத்திசொரூபமாயிருக்கின்ற அவசரம் முத்தான்மாக்கள் சர்வமந்திர சர்வஜ்ஞான சித்தியடையும்பொருட்டென்பதையும், வரதராஜமூர்த்தியா யிருக்கின்ற அவசரம் பெத்தான்மாக்கள் மாயா விலாசமாயிருக்கின்ற இஷ்டகாமிய போகசித்திகளையடையும் பொருட்டென்பதையும் விளக்குவது

இவைகளின்றி இவ் வத்தியாயத்தில் காஞ்சிக்கு முதலாவரணத்தி னெல்லையாயுள்ளது,—கிழக்கில் சமுத்திரம் எனவும், தெற்கில் தக்ஷிண பிநாகினி எனவும், மேற்கில் சிலாஹ்ருதமெனவும், வடக்கில் சுவாமி புஷ்கரணியெனவும்;—இரண்டாம் ஆவரணத்தினெல்லையாயுள்ளது,— கிழக்கில் மாவலிபுரம் எனவும், தெற்கில் தேவகிபுரம் எனவும், மேற்கில் விரிஞ்சிபுரம் எனவும், வடக்கில் நாகலாபுரம் எனவும்,—மூன்றாம்ஆவரணத்தினெல்லையாயுள்ளது,— கிழக்கில் திரிவே

ணிசங்கம்நகரம் எனவும், தெற்கில் வியாக்கிரபுரம் எனவும், மேற்கில் க்ஷீராப்திநகரம் எனவும், வடக்கில் நந்திகங்காபுரம் எனவும் கூறப்படும் மூன்றுவரணங்களை யுடைத்தெனவும், சத்திய விரதக்ஷேத்திரமுதலாக எண்ணப்பட்ட ஒன்பது நாமங்களை யுடைததெனவும்,— இவைகளன்றி பாலாற்றின் வரலாற்றையும், — பராசத்திமூன்றுவித சொரூபமானமையையும், அவ்வவற்றின் வரலாறுகளையும் விளக்குவது.

இரண்டாவது அத்தியாயம்.

வரதராஜருடைய க்ஷேத்திரததினெல்லை க்ஷேத்திராங்கினன்னூந் தூககாலய முதல் நரசிஹ்மராலயம் வரையில் எனவும், அவ்வெல்லைக்குள் முக்கியமான தூர்ககாலயம ஒன்றெனவும, சிவாலயம மூன்றெனவும், விஷ்ணுவாலயம் எட்டெனவும, முத்திரைக ளைநதெனவும், தீர்த்தங்கள் நான்கெனவும், இவற்றின் வரலாறுகள் இவை எனவும விளக்குவது.

மூன்றாவது அத்தியாயம்.

வரதராஜப பெருமாள் வீற்றிருக்கின்ற அத்திகிரி, இலக்ஷ்மிதேவி சரஸ்வதிதேவி இவவிருவரும் தங்கள் தங்களுக்கே பெருமையுடைததென்பதை நாட்டிக்கொள்ள இநதிரனை வினவ அப்பொழுது சரஸ்வதியால அவனுக்கு வந்த சாபவுருவெனவும், அந்த அத்திகிரியில் நரசிஹ்மர் ருஹாநரசிஹ்மராய் வீற்றிருததற்குக் காரணம் இது வெனவும, பெருமாள் சந்நிதிக்குப் பின்பக்கத்தில் இரண்டுபல்லிகள் இருக்குங்காரணம் இதுவெனவும் இவற்றின் வரலாறுகள் இவை எனவும் விளக்குவது.

நான்காவது அத்தியாயம்.

அத்திகிரியில் திருமால் வரதராஜமூர்த்தியாய் வருவதற்குக் காரணம் பிரமனுக்குச் சிருட்டிதண்டங் கொடுத்தற்கெனவும், வேகவதி என்னும் நதி சிருட்டிதண்டம் பெறுதற்குப் பிரமன் செய்யத் தொடங்கிய யாகத்தை யழித்தற்கு வந்த சரஸ்வதிதேவி எனவும், அந்தநதியால் யாகத்துக்

கு யாதொரு இடையூறும் வராவண்ணம் வரதராஜர் காத்தவகை இது இது வெனவும், இந்த அத்திகிரியில் வரதராஜப் பெருமாள் வைகுண்ட முதலியவைகளைக் காட்டி அமர்ந்திருப்பதற்கும் ப்ரியமுடையராயிருந்ததற்குக் காரணம் இதுவெனவும் விளக்குவது.

ஐந்தாவது அத்தியாயம்.

வேகவதியாய் வந்தகலைமகள் திருமாலால் அவமானத்தை அடைந்தனளாதலால் அவ்வவமான நிவிர்த்தி அவ்வராலே யடைந்தமையும் நிவிர்த்தியான பின்னர் பிரமதேவனோடு முன்போல் கூடி மகிழ்ந்ததமையும் விளக்குவது.

ஆருவது அத்தியாயம்.

ஏகாம்பரநாதருடைய எல்லை காயாரோகணேஸ்வரராலயம் முதல் சுவேதபெருமாளாலயம் வரையில் எனவும், அவ்வெல்லைக்குள் முக்கியமான ஆலயம் நான்கெனவும், சிவாலயம் எட்டெனவும், விஷ்ணுவாலயம் எட்டெனவும், முத்திரைகள் ஐந்தெனவும், தீர்த்தம் நான்கெனவும், இவற்றின் வரலாறுகள் இவை எனவும் விளக்குவது.

ஏழாவது அத்தியாயம்.

ஏகாம்பரநாதர் இடங்கொண்டிருக்கும் மாவிருக்ஷத்தினுடைய சொரூபம் இதுவெனவும், அது ஓர்பிரளயகாலத்தில் மார்க்கண்டேயருக்காய்வளர்ந்து அவரைக்காத்து அவரைக் காஞ்சியில் வாழச் செய்த விதம் இதுவெனவும், மாங்கனியினுடைய பெருமை இதுவெனவும் விளக்குவது

எட்டாவது அத்தியாயம்.

ஏழாவது அத்தியாயத்தில் சொல்லிய மாவிருக்ஷமூலத்திலிருக்கும் சோதிலிங்கப் பெருமானது சொரூபம் இது வெனவும், அச்சோதிலிங்கப் பெருமானைத் தழுவுவதற்கு உமாதேவியார் ஸ்ரீகயிலாயத்தை விட்டு வந்த காரணம் இது வெனவும், கயிலாயத்தை விட்ட அம்மையார் பதரிகாசிரமத்தை வந்தடைந்ததமையும், அந்த ஆச்சிரமத்திலுள்ள காத்தியாயனமாமுனிவர் அவ்வம்பிகைக்கு யோகதண்டமுதலி

யவை கொடுத்தமையும், அவைகளைப் பெற்றுக் காசிக்கு வந்தபின்னர் அங்கு யாவரையும் வருத்தியிருந்த துவாதச வருடக்ஷாமத்தைப் போக்கினமையும், அதன்பின்னர் காஞ்சிக்கு வந்தபோது யோகதண்ட முதலியன வெல்லாம் சிவபூஜைக்குரிய சிவலிங்க மூர்த்தி முதலியனவாக மாறினமையும், அதன் பின்னர் அம்மையார் காஞ்சியில் அரியதவமியற்றிவந்ததினால் சிவபெருமானார் கங்கையைக் கம்பாநதியாகப்பெருகிப்போகச் செய்தமையும், அவ்வெள்ளத்தை உமாதேவியார்பிரளய பந்தனியைக் கொண்டடக்கினமையும், மீளவும் சிவபெருமானார் பிரளய பந்தனியினுடைய கபாலத்திலடங்கியிருந்த வெள்ளத்தைப் பெருகிப்போகச் செய்தமையும் அவ்வெள்ளத்தைக் கண்டு காமாக்ஷிதேவியார் ஏகாம்பரநாதரைத் தழுவினமையும், தழுவியமாத்திரத்தில் காட்சிகொடுத்துத் திருமணஞ் செய்துகொண்டு யாவருக்கும் அனுக்கிரகஞ் செய்தமையும் விளக்குவது.

ஒன்பதாவது அத்தியாயம்.

சர்வதீர்த்தமானது ஏகாம்பரநாதர் தம்முடைய காலப்பெருவிரலால் உண்டாக்கப்பட்டதென்பதும், இரண்டுமுறை பெருகிவந்த கம்பைவெள்ளம் அதில் வீழ்ந்துள்ளதென்பதும், அந்தச்சர்வதீர்த்தம் காமாக்ஷிதேவியினால் கட்டப்பட்டதென்பதும், பின்னர் அத்தேவி தாம் செய்துவந்த முப்பத்திரண்டறங்களை நடத்திவரக் கணபதியை நியமித்தாரென்பதும், சர்வதீர்த்த மகிமையினால் ஓர் பிராமணனுடையபிதிர்க்கள் நரகத்தினின்றும் கயிலைக்கேகினார்களென்பதும் விளக்குவது.

பத்தாவது அத்தியாயம்.

ஸ்ரீ காமாக்ஷி தேவியினுடைய எல்லை க்ஷேத்திராங்கி என்னுந் துர்க்காலயமுதல் சுவேதப் பெருமாளாலயம் வரையில் என்பதும், அவ்வெல்லைக்குள் முக்கியமான துர்க்காலயம் ஆறென்பதும், விஷ்ணு வாலயம் நான்கென்பதும், சிவாலயம் ஐந்தென்பதும், தீர்த்தம் நான்கென்பதும் அந்தக்

காமாக்ஷிதேவியினுடைய ஆலயத்துக்குள் அன்னபூரணியாலயம், சாஸ்தாவாலயம், அஞ்சன காமாக்ஷிசந்நிதி, சந்தானஸ்தம்பம் என்பன உளவென்பதும் இவற்றின் வரலாறுகள் இந்தன்மையவென்பதும் விளக்குவது.

பதினொன்றாம் அத்தியாயம்.

ஸ்ரீ காமாக்ஷிதேவியினுடைய ஆலயத்துள் பராசக்தி வீற்றிருக்கும் மண்டபம் காயத்திரி மண்டபம் என்பதும், அதற்கு ஆதாரமாயுள்ளது மஹாபிலம் என்பதும், அந்த மஹாபிலத்துக்குரிய மஹிமையினால்வந்த நாமவிவரணம் இவையென்பதும், அவற்றுள் காமகோடி காமகோஷ்டம் என்னும் இரண்டு நாமங்களுக்குள்ள விசேஷணங்கள் இவையென்பதும், பின்னர் பந்தகாசுரனுடைய உபத்திரவம் இந்தன்மைத்தென்பதும், அவ்வசுரனுடைய உபத்திரவத்துக்கு அஞ்சி அங்குவந்த தேவர்களுக்கு அந்த மஹாபிலத்தினுடைய பிரபாவம் இத்தன்மைத்தென்று விளக்கிய விதம் இந்தன்மைத்தென்பதும், அந்தப் பிலப்பிரதக்ஷிண மகிமை இந்தன்மைத்தென்பதும் விளக்குவது.

பன்னிரண்டாம் அத்தியாயம்.

காமகோடி பீடத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ திரிபுரசுந்தரியினுடைய ஆணையையும், தேவர்களுடைய துன்ப நிவிர்த்தியின்பொருட்டுப் பிலத்தினின்றும் தேவி வெளிப்பட்டு வந்து உலகினைப் பஸ்மீகரப்படுத்திய திரிமூர்த்திகளையுண்டாக்கிப் பின் மறைந்துபோனமையையும், பின்னர்த்தேவி பந்தகாசுரப் பிரேதத்தோடு வெளிவந்தமையையும், வெளிவந்து தேவர்களுக்கு அப்பந்தகனைப் புதைத்து தனக்காலயமுண்டாக்கித் தன்னைப் பிரதிஷ்டைசெய்து தெரிசிக்கும் விதத்தைச் சொன்னமையையும், அவர்கள் தன்னைத் தெரிசித்தபின்னர் அவர்களுக்குத் தனவரலாறெல்லாம் தெரிவிக்கின்றமையையும் தேவிசொன்னதுபோல் அத்தேவர்கள் பூஜித்தமையையும், நான்குயுகங்களில் பராசக்தியைப் பூசித்தார் இவரிவரென்பதையும் விளக்குவது.

பதின்மூன்றாம் அத்தியாயம்.

பந்தகாசுரனைப் புதைக்கத் தொடங்கிய பொழுது அந்தப்பள்ளத்தில் தவஞ்செய்திருந்த அசுரனைத் திருமால்

கொல்லத் தொடங்கிய காலத்தில் அசுரக்கூட்டங்கள் பெருவெள்ளமாகத் தோன்ற அவைகளை யொழிப்பதற்கு இரண்டு சிவபூதங்கள் தோன்றி அவைகளை யொழித்துத் திருமாலோடு போர்செய்து தோல்வியடைந்துபோகத் திருமால நின்றார் இருந்தார் கிடந்தார் என்கிற மூன்றுவித கோலங்கொண்டமையும், மூன்றுவித கோலங்கொண்ட திருமால் சிவபூதங்களை இம்சித்தது சிவாபராத மென்றெண்ணி அது நீங்குதற்குச் சிவபெருமானைத் தியானிக்க அவரனுக்கிரகத்தால் பஞ்சதீர்த்தமுண்டாய் அவரபராதத்தைப் போக்கினமையும், பின்னர் அவ்விரண்டு பூதங்களை அத்தீர்த்தத்துக்குக் காவலாக நியமித்து அவைகளுக்கு ஆகார திருப்திக ளுண்டாக்கித் திருமாலையும் அவ்விடத்தில ஓர்திருப்பதியாகக கொண்டிருக்கச் செய்தமையும விளக்குவது.

பதினொன்காம் அத்தியாயம்.

ஸ்ரீ ஏகாம்பரநாதருக்கு வல்லபையாயிருந்த காமாக்ஷி தேவி பிரமாவினுடைய வேண்டுகோளால் சுவர்ண விக்கிரகமாய் நியமிக்கப்பட்ட காரணத்தையும், அந்த அம்பிகையினுடையசவுந்தரியங்களையும், இந்தக்காஞ்சிக்ஷேத்திரத்தில் சிவக்ஷேத்திரங்கடோறும தேவி யில்லாமைக்குக் காரணத்தையும், சிவபெருமானாது நெற்றிக்கண்ணால் எரிந்துபோனமன்மதன் காமாக்ஷிதேவியினிடத்தில் வரமபெற்றுக் கோடிமன்மதர்களாய் வரபபெற்று ருத்திரகோடிகளை வெற்றிகொண்டமையும், மன்மதகோடியர் உண்டான காலத்தில் பூமண்டலத்திலுள்ள சகல சிவக்ஷேத்திரங்களிலும் சத்திரூபமாகிய அம்பிகை யுருவங்களெல்லா மறைந்து போகப் பின்பிரமனால பிரதிஷ்டையான காரணத்தையும், பிரமனை நோக்கிச் சுவர்ண காமாக்ஷிக்கும் ஏகாம்பரநாதருக்கும் திருக்கலியாணம் நடத்த வேண்டிய விதிமுறைகளையும், பராசத்தியையும், தபஸ்காமாக்ஷியையும, சுவர்ணகாமாக்ஷியையும ருத்திரயாமளதந்திரப்படிச செய்யவேண்டிய பூஜையினுடைய பேதமுறைகளைச் சொன்னமையும், பிரமன் தனக்கு ஸ்ரீ சக்கரஸ்தானத்தை மிதித்ததனாலுண்டாகிய கணதோஷத்தைப் போக்கிக்கொண்ட விதத்தையும, பின்னர் பராசத்தியைப் பூசித்தவா வரலாற்றையும விளக்குவது.

அத்தியாய விஷய சூசனை முற்றிற்று.

ஸ்ரீ த்ரிபுரசுந்தர்யைநம:

காமாக்ஷிதேவ்யைநம:

காமாக்ஷி லீலா பிரபாவம்.

முதலத்தியாயம்.

துதி.

காரணி கருமமாற்றுங் கடவுளர் முடிமேற் றங்குஞ்
சீரணி ஞானபாதச் செல்வியே கம்பற் போற்றித்
தாரணி தழைப்பமீளுந் தன்னருட் குலைகயில் வாழும்
பூரணி காமக்கண்ணி பொற்பதஞ் சிரமேற் கொள்வாம்.

பீடத்திரய விவரணம்.

இப்பூமண்டலம் ஐம்பது கோடி யோசனை விசாலமுள்ளது. இதனுள் தேவி சம்பந்தமான பீடங்கள் ஆறாயிரத்து நானூறு. அவற்றுள் அறுபத்து நான்கு பீடங்கள் சிறந்தன. அவற்றுள்ளும் ஐம்பத்தாறு பீடங்கள் சிறந்தன. அவற்றுள்ளும் முப்பத்தாறு பீடங்கள் சிறந்தன. அவற்றுள்ளும் பதினெண் பீடங்கள் சிறந்தன. அவற்றுள்ளும் மூன்று பீடங்கள் சிறந்தன.

அவையாவன:—காமராஜ பீடம், ஜாலந்தர பீடம், ஒட்யாண பீடம்.

இம்மூன்று பீடங்களையும் பூசித்தவர்:-ஹயக்கிரீவர், பிருகு முனிவர், வியாச முனிவர்.

இவருள் காமராஜ பீடத்தில் வாக்பவ கூடத்தைப்பூசித்தவர் ஹயக்கிரீவர். ஜாலந்தர பீடத்தில் மனோபவமென்கிற மத்திய கூடத்தைப் பூசித்தவர் பிருகு முனிவர். ஒட்டியாண பீடத்தில் பராபீஜ சொரூபமான காமரூபத்தைப்பூசித்தவர் வியாச முனிவர். காமராஜ பீடம் காஞ்சி நகரத்திலும், * ஜாலந்தர பீடம் ஜ்வாலாமுகியென்கிற க்ஷேத்திரத்திலும், ஒட்டியாண பீடம் ஜகந்நாதமென்கிற க்ஷேத்திரத்திலும் உள்ளன

காஞ்சிமண்டலத்தி னெல்லை

(முதலாம் ஆவரணம்)

கயகாந்திக்குத் தென்பாகத்தில் (200) யோசனை தூரத்திற்கு மேலுள்ள சமுத்திரகட்டத்தின் ○ அக்கினிதிக்கே கிழக்கெல்லை. அதற்குநிருதியில் (7½) யோசனை தூரத்திலுள்ள தக்ஷிண பினாகினியே தெற்கெல்லை; அதற்கு வாயுவில் (7) யோசனை தூரத்திலுள்ள ‖ சிலாஹ்ருதமே மேற்கெல்லை, அதற்கு ஈசானத்தில் (8) யோசனை தூரத்திலுள்ள சுவாமி புஷ்கரணியே வடக்கெல்லை.

கிழக்கெல்லையாகிய சமுத்திர கட்டத்தின் மகிமை.

கிழக்கெல்லையாகவுள்ள சமுத்திரகட்டம் காஞ்சிப்பதிக்கெல்லையாக வமைந்ததையாலும், சரஸ்வதி தேவிமுன்னொருகாலத்தில் தனக்கு நேர்ந்த ஓர் () தோஷத்தை மாற்றிக்கொள்ள நதியுருவங் கொண்டு இக்கடலிற் சங்கமமாய்ப் பரிசுத்த மடைந்து தன் கணவனோடு சேர்ந்து சமுத்திர ராஜ

---

* ஜாலந்தரபீடமும், ஒட்டியாணபீடமும் வடதிசையிலுள்ளன. ○ காஞ்சி நகரம் எந்திரரூபமாய் நிருமித்திருப்பதாகலான் கோணமாகிய அக்கினிதிக்கையே கிழக்கெல்லையாக எடுக்கப்பட்டது.

‖ சிலை என்றால் கல். ஹ்ருதம் என்றால் மடு. ஆகலான் அது கல்லாறு எனவழங்குகின்றது. () தோஷமென்றது - காஞ்சிப்புராணத்தில சிவாஸ்தானப் படலத்திற் காண்க.

னைப்பார்த்து இத்தீரத்தில் எவரெவர் எவ்வெக் காலங்களில் ஸ்நானஞ் செய்த போதிலும் அவரெல்லாம் பரிசுத்தராய் சிவபத மடைவரென்று வரமளித்தமையாலும் இவ்வெலலைக்கு ஸ்நானஞ் செய்யலாகாதென விதித்த காலங்களில்லையாயின.

தெற்கெல்லையாகிய தக்ஷிணபினாகினியின் மகிமை.

முன்னொரு காலத்தில் அசுரகுருவாகிய பிருகுமுனிவர் சிவானுக் கிரகத்தினால் பூமியிற் கிடந்திருந்த பினாகமென்னும் தனுசை எடுத்துத் தாங்கிய பொழுது கங்கை நதிரூபமாய்ப்பெருக் கெடுத்தோடியது. அதுகண்ட முனிவர் இது பினாகினியினா லுண்டானபடியால் * பினாகினியெனப் பெயர் பெற்று வழங்கக் கடவதென்றும் இதில் ஸ்நானஞ் செய்பவர்கள் புண்ணிய சொரூபிகளாய்ச் சிவலோக மடையக் கடவர்களென்றும் வரமளித்தனர்.

மேற்கெல்லையாகிய சிலாஹ்ருதத்தின் மகிமை.

முன்னொரு காலத்தில் அநுமார் அமிர்தம்போலும் பிழைப்பிக்க வல்ல ஔஷதிகளைப் பறித்தெடுத்து வரும்போது சிலாஹ்ருத தீர்த்தத்தில் அலம்பிப் பின்னர் லக்ஷ்மணரிடத்திற் கொண்டு போய்க் கொடுத்தனர். அலம்பிய காலத்தில் இதில் யாரொருவர் ஸ்நானஞ் செய்கின்றார்களோ அவர்கள் சித்தர்களாய் நெடுங்காலஞ் சீவித்திருந்து பின் தெய்வத் தன்மையடைந்து விஷ்ணுபதத்தை யடையக் கடவர்களென்று வரமளித்தனர்

வடக்கெல்லையாகிய சுவாமி புஷ்கரணியின் மகிமை.

முன்னொரு காலத்தில் விஷ்ணுமூர்த்தி லக்ஷ்மி தேவியைக் கலியாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று விரு

* பினாகினி என்னும் நதியானது பெண்ணையாறு எனவழங்குகின்றது.

ப்பிச் சித்த வேடங்கொண்டு திருப்பதி என வழங்கும் சேஷாசலத்தை வந்தடைந்த காலத்தில் தன்னுடன்வந்த சீடர்களுடைய ஸ்நானபான நிமித்தம் ஓர் தடாகத்தை யுண்டு பண்ணி அதில் விரஜாநதியைப் பிரதிஷ்டைசெய்து தாமும் தமது கல்யாண முடிந்த பின்னர் ஸ்நானஞ்செய்து *சுவாமி புஷ்கரணி என்று பெயரிட்டு இதில் யாரொருவர் ஸ்நானஞ் செய்கின்றார்களோ அவர்கள் இவ்வுலகில் எல்லாப போகங்களையும் அனுபவித்துப் பின்னர் எனது லோகத்தை யடையக்கடவர்களென்று வரமளித்தனர்.

இந்நான் கெல்லைக் குட்பட்ட பிரதேசம் துண்டீரனென்னும் அரசனால் நீதியோடு ஆளப்பட்டமையான் துண்டீரமண்டலமெனப் பெயர் பெற்றது.

(இரண்டாம் ஆவரணம்.)

காஞ்சிக்குக் கிழக்கெல்லையாகிய சமுத்திரத்திற்கு (1) யோசனை மேற்கில் மாபலிபுரம். அதற்கு (5) யோசனைநிருதியில் தேவகிபுரம். அதற்கு (5) யோசனை வாயுவில் விரிஞ்சி புரம். அதற்கு (5) யோசனை ஈசானத்தில நாகலாபுரம் அதற்கு (5) யோசனை ஆக்னேயத்தில் முற்கூறிய மாபலிபுரம.

வரலாறு

பூர்வத்தில் மஹாபலிச் சக்கிரவர்த்தி பரமசிவானுக்கிரகம் பெற்றுப பெருஞ்செல்வ மடைந்து அங்கு வாழ்ந்திருந்தனாதலால மாபலிபுரமெனவும்,—உக்கிரசேன னென்னும் அரசனும் பரமசிவாராதனை செய்து கன்னியாரத்னமாகிய தேவகி என்னும பெண்ணைப் பெற்று அங்குவாழ்ந்திருந்தனாதலால் தேவகிபுரமெனவும்,—அரம்பையும் பரமசிவாராதனைசெய்து இந்திரனுக்கு ஊர்வசிமுதலாயினோரைக்

---

* சுவாமிபுஷ்கரணி என்பது திருப்பதிக்குக் கிழக்கிலுள்ளது.

காட்டினுந் தான் அதிகப் பிரியை யாவதற்குத் தவஞ்செய்யப் பிரமன் சிருட்டிசெய்த புரமாதலால் அது விரிஞ்சிபுரமெனவும்,—உலகங்களுக் கெல்லாம் நாசந் தரும்படியான விடம் நாகத்தினின்றுந் தோன்றிய பொழுது அந்நேர மஹாதேவ ரஞ்சாது கையிலேற்ற விடம் அதுவாதலால் நாகஹலாபுரமெனவும் பெயர் பெற்றன.

இந்நான்கு புரங்களுக்குட்பட்ட பிரதேசம் ஏகாம்பர நாதர் பூஜார்த்தமாய் வந்த பார்வதி தேவியார் வீற்றிருந்தியற்றிய தவத்தினால் பிரகாசமடைந்தமையால் தபோவனமெனப் பெயர் பெற்றது.

இப்பொழுது சொல்லிய நான்கெல்லைக்குள் மாபலிபுரத்துக்கு (3) யோசனை மேற்கில் * திரிவேணி சங்கமநகரம்
அதற்கு $(1\frac{1}{4})$ யோசனை நிருதியில் 0 வியாக்கிர புரவனம்
அதற்கு $(1\frac{1}{4})$ யோசனை வாயுவில் || க்ஷீராப்திநகரம்
அதற்கு $(1\frac{1}{4})$ யோசனை ஈசானத்தில் 0 நந்திகங்காபுரம்
அதற்கு $(1\frac{1}{4})$ யோசனை ஆக்னேயத்தில் முன்னர்க்கூறிய திரிவேணிசங்கமநகரம்

வரலாறு

விஷ்ணுமூர்த்தி தன்னுடைய ஓர் பக்தனுக்குத் திரிவேணி சங்கமத்தில் ஸ்நானஞ்செய்தால் வரும்பலனை அவ்விடத்திலடையும்படிச் செய்தன ராதலால் திரிவேணி சங்கமநகரமெனவும்,—வியாக்கிர பாதருக்கு நடராஜமூர்த்தி பூர்வத்தில் இவ்விடத்திலிருந்த தரிசனங் காட்டின ராதலால்

---

* திரிவேணிசங்கம நகரமென்பது திருமுக்கூடலென வழங்குகின்றது. அது சிவரமென வழங்கும் சிவபுரத்திலுள்ள. 0 வியாக்கிரபுரவனமென்பது திருப்புலிவனம் எனவழங்குகின்றது. இது உத்தரமேரூருக்குப்போகும் வழியிலுள்ளது. || க்ஷீராப்திநகரமென்பது திருப்பாற்கடலெனவும். 0 நந்திகங்காபுரமென்பது தக்கோலம் எனவும் வழங்குகின்றன.

வியாக்கிரபுரவன மெனவும்,—விஷ்ணு மூர்த்தி தன்னுடைய ஓர் பக்தனுக்குத் திருப்பாற் கடலில் தாம் வீற்றிருக்குங் கோலத்தை இங்குக் காட்டினா ராதலால் க்ஷீராப்திநகரமெனவும்,—சிவபெருமானிடத்தில் அன்புள்ள வோர்புலையன் தன் விளை நிலமெல்லாம் மழையின்றிப் பாழ்படக்கண்டு வருந்தியிருப்ப அச்சிவபெருமானார் இரங்கி நந்தி வாயின் வழியாகக் கங்கையை வரச்செய்து பயிரை வளர்பித்துப பின் அவனை அதநீர்த்தத்தில் மூழ்கச்செய்து மோக்ஷமடையச் செய்தனராதலால் நந்திகங்காபுர மெனவும் பெயர் பெற்றன.

இந்நான்கு நகரங்களுக்குட்பட்ட பிரதேசம் முன் பிரமன் செய்த அஸ்வமேதத்திற்குச் சாலையாக வமைந்து விளங்கினமையான் பிரமசாலை யெனப் பெயர் பெற்றது.

இப்பொழுது சொல்லிய விஷ்ணு க்ஷேத்திரத்தில் திரிவேணிசங்கமத்திற்கு (1) யோசனை மேற்கில் பாஞ்சாலிகை என்னுந் துர்க்கை,—அதற்கு (89) அம்சம் மேற்கில் கன்னிகேசர் என்னுஞ் சிவபிரானார்,—அதற்கு (50) அம்சம் உத்தரத்தில் சூரிய புஷ்கரணி தீரத்தில் ஸ்வேதாக்கியர் என்னும் விஷ்ணு மூர்த்தி,—அதற்கு (17) அம்சம் கிழக்கில் சந்திர புஷ்கரணி தீரத்தில் க்ஷேத்திராங்கி என்னுந் துர்க்கை,—அதற்கு (51) அம்சம் ஆக்னேயத்தில் முற்கூறிய பாஞ்சாலிகை என்னுந் துர்க்கை,—என்றெண்ணபபட்டவர் வீற்றிருக்கின்றனர்.

க்ஷேத்திரநாம விவரணம்.

காஞ்சி க்ஷேத்திரத்தை சத்தியவிரத க்ஷேத்திர மெனவும், பாஸ்கர க்ஷேத்திர மெனவும், தைஜஸ க்ஷேத்திரமெனவும், ஹரிஹர க்ஷேத்திர மெனவும், சத்தி க்ஷேத்திர மெனவும், மஹா புண்ணியப் பிரத க்ஷேத்திர மெனவும், கைலாசம், வைகுண்டம், ஸ்ரீபுரமெனவும் வரும் ஒன்பது நாமங்களால் சான்றோர்கள் புகழ்கின்றனர்.

வரலாறு

என்றும்சிவசாநித்தியத்தை யுண்டுபண்ணுகிறதாயும், மஹாசத்திப் பிரபாவத்துக்கு முதலிடமாயும், அந்த மஹாசத்தியின் பிரதான சத்திகளுடைய வைபவங்கள் விளங்கத்தக்கதாயும் சத்தி சொரூபமாகிய விஷ்ணு சத்திக்கு அதிஷ்டானமாயும், நாச மற்ற தாயும், சான்றோர்களாற் குறிப்பிட்ட தாயும் இருப்பதால் சத்திய விரத க்ஷேத்திரமெனவும்,—சிரேஷ்டமான மலைகளாலும் ஆலயங்களாலும சூழப்பட்டிருப்பதால் பாஸ்கரக்ஷேத்திரமெனவும்,—மஹாபிலம், மஹாவிருக்ஷம், புண்ணியகோடி விமானம், என்னுமிவைகளையுடைத் தாயிருப்பதால் தைஜஸக்ஷேத்திர மெனவும்சத்திசிவாத்மகமா யிருப்பதால் ஹரிஹரக்ஷேத்திரமெனவும்,—விஷ்ணுவென்றும் சத்திஎன்றும் சகுணபாவனையால் இரண்டுருவமாகப் பாவிக்கப் பட்டும் மஹாமாயை என்று நிர்க்குண பாவனையால் ஒருருவமாகப் பாவிக்கப் பட்டும விளங்குகின்ற ஆத்ம சிற்சத்தியாகிய மஹாதேவியே ஆகாச ரூபமாயுள்ள பிலசத்தி ரூபமாயும், ஸ்திரீ ரூபமாயுள்ள காமாக்ஷி சத்தியாயும், புருஷரூபமாயுள்ள வரதராஜசத்திரூபமாயும்இருப்பதால் சத்திக்ஷேத்திரமெனவும்,—அழிவில்லாததாயும் நிர்மலஸ்தானமாயும் புண்ணியாதிக்கிய முடையவர்கள் வாழ்தற் கிடமாயும் இருப்பதால் கைலாசம், வைகுண்டம்,ஸ்ரீபுரமெனவும்,—எந்தவிருக்ஷங்களும் தேவவிருக்ஷங்களாயும், கிணறு தடாகம் நதிமுதலிய வற்றிலுள்ள சலங்களும் கங்கா தீர்த்தமாயும், மாநுடரெல்லாந் தேவர்களாயும், சிலைகளெல்லாம் சிவவிஷ்ணு சொரூபங் களாயும், நடப்போருடைய பாததூளிகளெல்லாம் பரிசுத்தத்தைச் செய்யத்தக்கவையாயும், வீசுகின்றகாற்று பாவச் செயலையடக்கும் அங்குசமாயும், இருப்பதன்றித் தேவர்களும் சித்தர்களும மோக்ஷாபேக்ஷையுள்ள சிரேஷ்டமான ருஷிகளும் அந்த க்ஷேத்திரத்தில் தேஜோரூபமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருப்பதாலும் இவ்வண்ணம் யாவும் எவரும் தெய்வரூபமாக

விருக்கின்றபடியினால் புண்ணியப்பிரத க்ஷேத்திரமெனவும் சொல்லப்படும்.

துண்டீரமண்டலத்துள் "சத்தியவிரத க்ஷேத்திர" முதலாகச் சொல்லப்பட்ட ஒன்பது நாமங்களையுடைத்தாயிருக்கிற எல்லையெதுவோ அது காஞ்சித் தலமென்று சொல்லப்படும்.

இந்தஎல்லையின் நடுவில் ஸ்ரீ வித்தியா பரமேஸ்வரியினுடைய ஸ்தன கும்பத்தினின்றும் வெளிப்பட்டதாயும் நாசரகிதமாகிய ஞானத்தைக் கொடுக்கிற அமிர்தசொரூபமாயும் தேகத்திற்குவரும் நரைதிரைமூப்பாதி துக்கங்களைப் போக்கடிப்பதாயும் கிருதயுகத்தில் அமிர்தரூபமாயும், திரேதாயுகத்தில் பால்ரூபமாயும், துவாபரயுகத்தில் நெய்ரூபமாயும், கலியுகத்தில் சலரூபமாயும், இவ்வண்ணம் யுகங்கடோறும் செல்லுகின்ற மகிமையுடைத்தாயும், ஸ்நானஞ்செய்த மாத்திரத்தில் சகல பாவங்களையும் போக்கி முத்தியைக் கொடுப்பதாயும் உள்ள பாலாறு ஒன்று செல்லுகின்றது.

பாலாற்றின் வரலாறு

பூர்வத்தில் பராசத்தியினுடைய பாலுண்டருளிய மகிமையினால் சர்வக்ஞராயும் பண்டிதோத்தமராயும் விளங்குஞ் சுப்பிரமணியர் ஓர்கால் பிரமனைநோக்கி ஞானவித்தையான பிரணவார்த்தத்தைக் கேட்டகாலத்தில் அவன் சொல்லமுடியாது சிறையிடைப்பட்டனன் பின்னர் அப்பிரமன் தானும் அந்தப் பராசத்தியினுடைய க்ஷீரபானத்தை விரும்பி நந்திமலையில் தேவிதீர்த்தக்கரையில் தவம்புரிய சிவபெருமானர் தோன்றினர். அவர்பால் ஸ்ரீவித்தைஎன்னும் மந்திரோபதேசம்பெற்று நூறுவருடம் அதியுக்ரமான தவத்தோடு தேவித்தியானஞ் செய்துவரும்பொழுது மஹாமாயா சொரூபிணியாயும் ஸ்ரீவித்தியா பரமேஸ்வரியாயும் லலிதா ராஜராஜேஸ்வரியாயும் மஹாதிரிபுர சுந்தரியாயும் ஸ்ரீசக்கர ராஜபுர சாம்பிராஜ்ஞையாயும், மஹாகைலாச வாசினியாயும்

விளங்கும் ஸ்ரீமஹாதேவி மகிழ்ந்தவளாய், தனது ஸ்தனமாகியகும்பத்தில் அவரவருக்கேற்ற ஞானங்கள் நிறைந்திருக்கும் அமிர்தமாயும் ஜரைமரணங்களைப் போக்கடிக்கிறதாயும் இருக்கிற பாலாகிய அமிர்தப்பிரவாகத்தைப் பிரமனுக்குப் பிரணவ ஞானத்தையுண்டாகும்பொருட்டு அவனது சரீரமுற்றும் நனையும்படிச் சிரசிற்பொழிய அவன் ஆனந்தபரவசனாய் அந்த ஞானப்பாலையுண்டு உள்ளும் புறமும் நிறையப்பெற்றதிருப்தியடைந்தனன் பின்னர் அவனுண்டமிருந்த அப் பால்வெள்ளமானது அவனது முகமாகிய தாமரையினின்றும் வழிந்து நந்திமலையில் விழுந்து அம்மலையினின்றும் நதிரூபமாய்ப் பூமியிற் பிரவேசித்துப் பெருக்கெடுத்துவந்து தக்ஷணத்திலிருக்கின்ற பாகுநதியையும், உத்தரத்திலிருக்கின்ற குண்டலிநதியையும், இவைகளோடு சமாகமன விருத்தமென்கிற நதிகளையும் தனக்கு இருபக்கத்திலும் அங்கமாகக் கொண்டு அவைகளோடு சமமாகக்கலந்து காஞ்சிநகரத்திற் பிரவேசித்து ஒன்றாய் அவ்வழியேசென்று சமுத்திரசங்கமமாயிற்று. அந்தக்ஷீரபானத்தால் சகலகலாவல்லபமடைந்த பிரமன் அந்நதியை நோக்கி இதில் யாரொருவர் ஸ்நானஞ்செய்கின்றார்களோ அவர்கள் பூர்வஜ்ஞானமுடையவர்களாயும் சர்வவித்யாபாரங்கதராயும் மோக்ஷமடையக் கடவரென்று வரமளித்தனன்.

மஹிமை.

முன்னொருகாலத்தில் அந்தணனொருவன் தன்னுடைய குலதர்மங்களைக் கைவிட்டுப் பாவங்களையே செய்து மரணமடைந்து யமதண்டனைக்குள்ளாய் மீளவும் பூவுலகத்தில் குண்டலினி என்னும் நதியில் தவளையாகப் பிறந்திருந்தனன். க்ஷீரநதி அக்குண்டலினியோடு கலந்து வருகின்றபோது அவன் ஒருதண்ணீர்ப் பாம்பின்வாயி லகப்பட்டு இறக்குங்கால் பூர்வஜ்ஞானமுண்டாய் மோக்ஷமடைந்தனன்.

இப்படியே இந்தக்ஷீரநதியில் வசிக்கின்ற உயிர்களுடைய பரிசத்தாலும் தீர்த்த பரிச முதலியவற்றாலும் முத்

தியடைந்தவர்கள் இவ்வளவினரென்று கணிக்கக்கூடுமோ? கூடாவென்க.

பராசத்தி மூன்றுவித சொரூபமானது.

முன்னொருகாலத்தில்பிரமன் தனது வம்சத்திற்பிறந்திறந்த அசுரர்களுக்கு மீளவும பிராணனையும் அவர்கள் வேண்டும் வரங்களையுந் தானே கொடுப்பதற்கு வேண்டிய சக்தியைப் பெறுதற் கெண்ணி ஸ்ரீபுரநகரமாகிய காஞ்சிக்ஷேத்திரத்தில் பரமாகாசமூலத்தில் வீற்றிருக்குங் காமாக்ஷிசந்நிதானத்தை யடைந்து தேவியைத் தியானித்துத் தவஞ்செய்யத் தொடங்குங்கால் அத்தவத்துக்கு யாராலும் ஓரிடையூறும் வரா வண்ணம் விஷ்ணு மூர்த்தியினுடைய காதினின்றும் வெளிப்பட்ட மது கைடபரென்னும் அசுரர்களைக் காவலாக வைத்துதான் தவஞ்செய்துவந்தனன்.

அசுரகாதகியாகிய பராசத்தி பிரமனுக்குப் பின்பக்கத்தில் இடம் வலங்களிற் காவலிருக்கின்ற அவ்வசுரர்களைச் சங்கரிக்க வெண்ணி, அவ்வசுரர்களுடைய நடுவில் தனது ஆச்சரியமாகிய மாயையினால் விஷ்ணுவடிவங் கொண்டு வந்து சக்கிராயுதத்தினால் அவ்வசுரருடைய சிரங்களையறுத்துத் தள்ளிப் பிலாகாசத்துக்கு ஆக்னேய திக்கிற்சென்று அங்கு நின்றதிருக் கோலமாய்த் தன் சொரூபமாகிய பிலத்தின் முகமாக நின்றனள்.

மது கைடபர் சிரம் அறுபட்டு வீழுகின்ற காலத்தில் பேரிரைச்சலிட அவ்வோசையைக் கேட்ட பிரமன் திடுக்கிட்டு அவ்வசுரரிடம் வேகமாய் வந்து அவர்கள் தலை அறுபட்டு உதிரவெள்ளஞ்செல்ல இரண்டு முண்டங்களும் துடிப்பதைக் கண்டு ஆ! ஆ! இது என்ன ஆச்சரியம் என்று அதிக கோபங்கொண்டு இவர்களைக் கொன்றவன் யாவன் அவனெங்கே? யென்று கண்களைச் சுழலவிட்டுத்திக்குகளைப் பார்க்கின்றபொழுது ஆக்னேயதிக்கில் சக்கரதாரியாய் வி

ஷ்ணு ரூபங்கொண்டு பயந்தோடுவதைப் போல் ஓடுகின்ற தேவியாகிய விஷ்ணுமூர்த்தியைக் கண்டு இவர்தான் அவர்களைக் கொன்றிருக்க வேண்டுமென் றெண்ணி நிச்சயித்து விரைவாக வோடி அவரைச் சமீபித்துக் கொல்ல வுத்தேசித்துக் கோபங்கொண்டு பிரமாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்யத் தொடங்கினன். அதைக்கண்ட தேவியாகிய விஷ்ணுமூர்த்தி பிரமனே! நானா உன்னுடைய காவலாளிகளைக் கொல்லுவேன்? அவர்களைக் கொன்றவர் உருத்திரமூர்த்தியே. அவர் இப்பொழுதுதான் போயினர். அவரை நீ பார்க்க வில்லையா? அவர் உன்னுடைய பின்புறத்திற்றான் ஓடுகின்றார். திரும்பிப் பாரும்பாரும் என்று தமது இரண்டுகரங்களையும் நீட்டினர். உடனே பிரமன் திரும்பிப் பார்த்தனன். அவன் திரும்பிப் பார்ப்பதற்குமுன் விஷ்ணுமூர்த்தியாய்க் கூறிய தேவியே அப்பிரமன் கண்ணுக்குத்தோன்ற உருத்திரமூர்த்தியாய் வாயுதிக்கை நோக்கிச் சென்றனர். அதனையறியாத பிரமன் தன்னெதிரில் நின்ற விஷ்ணுமூர்த்தியைப்பார்த்து நீர் அவர்களைக் கொன்றவராக நானே அனுமானித்து வந்தேனேயன்றி நீர் கொன்றவரன்று என்றுசொல்லிவிட்டு வாயுதிக்கைத் திரும்பிப் பார்த்தனன். அந்தத் திக்கில் காலகால ரூபியாயும், உதிபயங்கரராயும், அகோர ரூபியாயும், சூலபாசபாணியாயும் இருக்கிற பைரவரூபியாய் ஓடுவதைக் கண்டு இவர்தான் கொன்றிருக்க வேண்டுமென்றெண்ணிக் கோபத்துடன் அவரைச் சமீபித்தனன். அங்கு உருத்திரமூர்த்தியாய்த் தோன்றிய தேவி அப்பிரமனைப் பார்த்து, பிரமனே! உனக்கு எதனால் கண் சிவந்திருக்கின்றது? உனக்கென்ன கோபமென்று கேட்கப் பிரமன் ஒன்றுஞ்சொல்லாது நின்றனன். அப்பொழுது உருத்திர மூர்த்தியாகிய தேவி கோபித்தவளைப்போல பாசுபதாஸ்திரத்தைத் தாங்கித் திவ்ய தேஜசோடு ஆகாயத்திற் பிரகாசித்து மறைந்துபோயினள். அதுகண்ட பிரமன் ஆச்சரிய மடைந்து உருத்திரமூர்த்திதான் கொன்றவரென்று சொன்ன விஷ்ணுமூர்த்தியைத் திரும்பிப் பார்த்தனன். அவரும் ஆகாயத்தில் மறைந்

துபோயினர். அதுகண்ட பிரமன்நாம் அக்னிமூலையிற் கண்ட திருமாலையுங் காண்கிலோம், வாயுமூலையிற் கண்ட உருத்திர ரையுங் காண்கிலோம், இவ்விரண் டுருவத்தை யும காட்டியது எதுவோவென்று ஒன்றுந் தோன்றாது நடு க்குற்று இனி நம்முடைய பிராணன் தப்பினுற் போதுமென் று தன்னுலகம் போய்ச்சேர்ந்தனன்.

அதுமுதல் காஞ்சிநகரத்தில் வாயுமூலையிற் காட்டிய சிவரூபமானது ஆம்பர(மா) விருக்ஷரூபமாய் எக்காலத்தும அழிவில்லாமற் றேன்றி ஏகாம்பரமெனவும், அதுபோலவே அந்த வாயுதிக்குக்கு நேராகிய அக்கினிதிக்கிற் காட்டிய விஷ்ணு ரூபமானது பிரமன் அஸ்வமேதஞ் செய்யதொடா டங்கிய காலத்தில் அந்த யாகாக்னியில் திவ்ய தேஜோரூ தோன்றி வரத ராஜமூர்த்தி எனவும், அந்த இரண்டுருவ மாகக்காட்டியது யாதொருசத்தியோ அது அந்த இரண்டி டத்துக்கும் மத்தியிலுள்ள பிலாகாச ஸ்தானத்திற்றேன்றி காமாக்ஷி தேவி எனவும் பிரகாசித்துக் கொண்டு விளங்கு கின்றன.

ஸ்ரீ காமாக்ஷிதேவ்யைநம:

இரண்டாவது அத்தியாயம்.

விஷ்ணு க்ஷேத்திர வரலாறு.

காஞ்சி க்ஷேத்திரத்தின்கண் பராசத்தியானவள் பிரமதேவன்காணும்படி அக்கினிதிக்கில் வரதராஜ மூர்த்தியாய் நின்றனளாதலால் அது விஷ்ணுக்ஷேத்திர மெனவும விஷ்ணுசாலை எனவும பெயர்பெற்றது.

இதற்குப் பெயர் ஐந்து.

அவையாவன:—

1 ஹரி க்ஷேத்திரம் 2 புண்ணிய கோடி க்ஷேத்திரம 3 வைகுண்ட க்ஷேத்திரம் 4 ஹஸ்திசைல க்ஷேத்திரம 5 ○ திரிஸ்ரோத க்ஷேத்திரம் என்ப.

இதன் எல்லை

* சந்திரபுஷ்கரணிதீரத்தில் வீற்றிருக்கும் க்ஷேத்திராங்கி என்னுந்துர்க்கைக்கு (25) அமசம்அக்கினிதிக்கிலுள்ள சத்தியநாதராலயமே,— கிழக்கெல்லை சத்தியநாதராலயத்துககு (25) அம்சம் தெற்கிலுள்ள

○ சிவபெருமானால் தேவலோகத்தினின்றும் பெருகிய கஙகை மூன்றுபிரிவாய் (திரிபதா) என்கிற பெயர்பெற்றுச செல்வதுபோலு ங் காஞ்சியில் தேவியினால் நந்திமலையினின்றும் பெருகிய க்ஷீரநதி யானது பாகுநதி குண்டலினிநதி என்கிற இரண்டுநதிகளோடு கல் நது மூன்றாய் வருதலால் (திரிஸ்ரோதா) என்கிற பெயர்பெற்றது. பாகுநதி என்பது சேயாறு எனவும், குண்டலினிநதி என்பது வேக வதி எனவும் வழஙகுகின்றன. * சந்திரபுஷ்கரணி என்பது வெள் ளைக்குள மென வழஙகுகின்றது.

O பாஞ்சாலிகை ஆலயமே,— தெற் கெல்லை

பாஞ்சாலிகை ஆலயத்துக்கு (32) அம்சம் மேற்கிலுள்ள நரசிஹ்ம ராலயமே,— மேற் கெல்லை

நரசிஹ்ம ராலயத்துக்கு (32) அம்சம் வடக்கிலுள்ள * க்ஷேத்திராங்கி ஆலயமே,— வடக்கெல்லை.

இந்நான் கெல்லைக்குட்பட்ட பிரதேசமே விஷ்ணுசாலை எனப்படும். இவ்வெல்லைக்குள்,—

க்ஷேத்திராங்கிக்கு (32) அம்சம் ஆக்கினேயத்திலுள்ளவர். † வலம்புரிவிநாயகர்

வலம்புரிவிநாயக ராலயத்துக்கு ஓரம்சம் கிழக்கிலுள்ளவர். சுப்பிரமணியக்கடவுள்.

துர்க்காலயம் 4.

ஷை- சுப்பிரமணிய ராலயத்துக்கு (2) அம்சம் தெற்கிலுள்ளவள். பாஞ்சாலிகை. (1)

பாஞ்சாலிகை ஆலயத்துக்கு (15) அம்சம் வாயுதிக்கிலுள்ளவள். க்ஷேத்திராங்கி (2)

க்ஷேத்திராங்கி ஆலயத்துக்கு (10) அம்சம் தெற்கிலுள்ளவள் கம்புதாரணி. (3)

கம்புதாரணி ஆலயத்துக்கு (48) அம்சம் அக்கினிதிக்கிலுள்ளவள் ‡ பாணும்பிகை. (4)

சிவாலயம் 3.

ஷை - பாணும்பிகைக்கு (4) அம்சம் தெற்கிலுள்ளவர் புண்ணிய கோடீசர் (1)

O இவ்வம்மை துரோபதி எனவும். * இவ்வம்மை குதிரை பலி கொண்ட கோயிலாத்தாள் எனவும். † வலம்புரிவிநாயகரும் சுப்பிரமணியக்கடவுளும் வரதராஜர் கோயிலிலுள்ளவர்கள். ‡ இவ்வம்மை கிராமரக்ஷணி எனவும், வேலாத்தாள் எனவும் வழங்கப் படுகின்றனர்.

புண்ணிய கோடீசருக்கு (15) அம்சம் வாயுதிக்கி லுள்ளவர மணிகண்டீசர். (2)
மணிகண்டீசருக்கு (10) அம்சம் வடக்கி லுள்ளவர சத்தியநாதீசர். (3)

வரலாறு

(வல்லபுரி விநாயகரை) பிரமன் தான்செய்யத் தொடங்கிய அஸ்வமேதத்துக்கு வரும் இடையூறுகளை போக்குதற்கும்,— (சுபபிரமணியக்கடவுளை) சாதகாசாரியராகவிருந்ததற்கும்,— (பாலசாலிகையை) சுவாசினி(சுமங்கலி) பூஜைக்கும்,— அஸ்வமேதத்துக்குக் கொண்டுவந்த குதிரையைக் களவிற்கொண்டுபோன அயாசுரனை பலிகொண்ட (க்ஷேத்திராங்கியை) பலி கொள்ளுவதற்கும்,— விஷ்ணுமூர்த்தியை பூஜித்து அவரிடத்தில் சங்கினைப்பெற்ற (கம்புதாரணியையும்) (பாணும்பிகையையும்) யாகத்துக்குக்காவலாக விருத்தற்கும்,— (புண்ணிய கோடீசரை) யாகாரம்பத்தில் பூசிப்பதற்கும்,— (மணிகண்டீசரையும்) இந்திரன் தனக்குவந்த யோனியன் என்னும்பெயர்போய்ச் சஹஸ்ராக்ஷன் என்னும் பெயராவரப் பூசித்த சத்தியநாதீசரையும், அவுந்காதா (உபதிஷ்டா)க்களாக விருந்து மந்திரங்களை பெற்று ஓசைபட உச்சரிப்பதற்கும்,— அவரவரை அந்தந்த ஸ்தானங்களில் அமைத்துக்கொண்டனன்.

விஷ்ணுவாலயம் 8

சத்தியநாதீசருக்கு (12) அம்சம் தெற்கு திக்கிலுள்ளது யதோத்காரிசந்நிதி (1)
யதோத்காரி சந்நிதிக்கு (5) அம்சம் அக்கினி திக்கிலுள்ளது. குகாநரசிம்மர்சந்நிதி (2)
குகாநரசிம்மர சந்நிதிக்கு (5) அம்சம் நிருதி திக்கிலுள்ளது அஷ்டபுஜர்சந்நிதி (3)
அஷ்டபுஜர் சந்நிதிக்கு (5) அம்சம் வாயுதிக்கி லுள்ளது. வித்தியாகுண்டர்சந்நிதி. (4).

விந்தியாகுண்டர் சந்நிதிக்கு (5) அம்சம் தெற்குதிக்கிலுள்ளது ○ நரசிஹ்மர்சந்நிதி (5)
நரசிஹ்மர்சந்நிதிக்கு (7) அம்சம் வடக்குதிக்கிலுள்ளது தீபபிரகாசர்சந்நிதி (6)
தீபபிரகாசர் சந்நிதிக்கு (21) அம்சம் வடக்கு திக்கிலுள்ளது வைகுண்டர்சந்நிதி (7)
வைகுண்டர் சந்நிதிக்கு (5) அம்சம் வடக்கிலுள்ளது பவளவண்ணர்சந்நிதி (8)

வரலாறு.

(யதோத்காரிப்பெருமாள்) பிரமன் செய்யத் தொடங்கியயாகத்தை அழிக்கவெண்ணி (வேகவதி) என்னு நதிருபமாய்வந்த சரஸ்வதியின் கர்வத்தையடக்கும்பொருட்டு நிர்வாணியாய்ச் சயனித்திருந்தவர்,— (குகாநரசிஹ்மப்பெருமாள்) இந்திரன் சாபத்தால் ✻ கஜேந்திரனான காலத்தில் வரதராஜர் சந்நிதியில்வந்து தன்னு இதயமாகிய குகையில் பூஜிக்கபட்டவர்,—(அஷ்டபுஜப்பெருமாள்) மாயை என்னுங்காளியோடு போர்செய்து அவளைக் கிழேதள்ளி சிரசினமேல் வீற்றிருப்பவர்,— (வித்யாகுண்டப்பெருமாள்) முன்சொன்ன சரஸ்வதியின் மானத்தைப் போக்கவந்த காலத்தில்அவளால் பூஜிக்கபட்டவர்,— (நரசிஹ்மப்பெருமாள்) பூர்வத்தில் கபாலிஎன்பவனைக் கொன்று அவனால் விடபட்ட அஸ்திரங்களை விழுங்கி ஜீரணமாக்கிக் கொண்டவர், (தீபப்பிரகாசப் பெருமாள்) பூர்வத்தில் மாயாநலன் என்பவனைத் தீபம்போல் தன் கரத்திற்றுங்கினவர்,— (வைகுண்டப்பெருமாள்) தண்டீரராஜனுக்கு வைகுண்ட தரிசனங்காட்டினவர்,— (பவளவண்ணப் பெருமாள்) பூர்வத்தில் அசுரர்களுடைய ரக்தத்தைப் பானஞ்செய்தவர்.

† முத்திரை 5.

முன்சொன்ன பவளவண்ணர் சந்நிதிக்கு(46)அம்சம்

○ இது சிங்கப் பெருமாள் என வழங்கும் ✻ யானையான காலத்தில். † அடையாளம்.

அக்கினிதிக்கில் வரதராஜப்பெருமாளிடம்.(1)
வரதராஜப் பெருமாளுக்குப் பின்பக்கத்தில (1) அம்சம
கிழக்குதிக்கில் இரண்டுபல்லிகளிடம் (2)
பல்லிகளுக்கு(2)அம்சம தெற்குதிக்கில
இருபத்துநான்குபடிகள்(3)
படிகளுக்கு(1)அம்சம் மேற்குதிக்கில் இலக்ஷ்மிதேவி
வீற்றிருக்கும அர்த்தாசனம் (4)
அந்த அர்த்தாசனத்துக்குச்சமீபம(1) அம்சமாசான திக்கில
புண்ணியகோடிவிமானம்.(5)

வரலாறு.

(வரதராஜப் பெருமாளுக்குப்)பூதேவியாா அளவிறந்த புஷ்பங்கள்கொடுத்து, அவரைவிவாகஞ்செய்து கொண்டனா,— (இரண்டு பல்லிகள்) பூர்வஜன்மத்தில் பிராமணராக யிருந்து சாபத்தால் பல்லிகளாயின,— (24படிகள்) வரதராஜர் சந்நிதிக்குப் போக முன் தேவசில்பியினால் நிர்மிக்கப்பட்டவை;— (அர்த்தாசனம) லக்ஷ்மிதேவி யானவள் தன்னைவரதராஜமூர்த்தி விவாகஞ் செய்துகொள்ள வீற்றிருந்தவிடம,—(புண்ணியகோடிவிமானம்) வரதராஜமூர்த்தி எழுந்தருளியிருப்பதற்கு இந்திரனு லனுப்பப்பட்டது.

தீர்த்தம் 4.

புண்ணிய கோடி விமானத்துக் கு(2) அம்சம் ஈசான திக்கில் அனந்தசரசு—(1)
அனந்தசரசுக்கு(2)அம்சம்வாயுதிக்கில்
பக்தோதயசரசு(2)
பக்தோதயசரசுக்கு (3) அம்சம் வடக்குதிக்கில்
இந்திரதீர்த்தம்(3)
இந்திர தீர்த்தத்துக்கு(25)அம்சம் அக்கினிதிக்கில்
பாஞ்சாலிகைதீர்த்தம்(4)

வரலாறு.

(அனந்தசரஸில்) முன் ஆதிசேஷன் ஸ்நானஞ்செய்து பூமியைத்தாங்கும் வல்லபத்தைப் பெற்றனன்,— (பக்தோதயஸரஸ) விஷ்ணுபக்தர்கள் ஸ்நானஞ்செய்தால் அவர்களுக்குச் சர்வபாவங்களையும் போக்குவது,— (இந்திரதீர்த்தத்தில்) இந்திரன் ஸ்நானஞ்செய்து ஆயிரங்கண் பெற்றனன்,— (பாஞ்சாலிகை தீர்த்தம்) காளிகாதேவியின் பொருட்டு விஷ்ணுமூர்த்தியினது சுதரிசனமென்னும் சக்கரத்தினால் உண்டாக்கப்பட்டது.

ஆக விஷ்ணுக்ஷேத்திரமாகிய இவ்வெல்லையில் விநாயகராலயம் (1) ஸ்கந்தராலயம் (1) துர்க்காலயம் (4) சிவாலயம் (3) விஷ்ணுவாலயம் (8) முத்திரை (5) தீர்த்தம் (4).

இந்த விஷ்ணுசாலையில் இவையெல்லாம் தேவியினுடைய ஆஜ்ஞையினால் எப்பொழுதுங் காணப்பட்டு வருகின்றன. இதில் வசிப்போர்க்கு வைகுண்டவாசபல னுண்டாமாதலால் இது பூலோகவைகுண்டமெனப் பெயர்பெற்றது

தீர்த்தபலன்

அநந்ததீர்த்தத்தில் திருமாலுக்குப்பிரீதியாகிய சநிவாரத்தில் ஸ்நானஞ்செய்வோர்க்குக் காவேரியில் ஸ்நானஞ்செய்தபலனுண்டாகுமென்று ஆதிசேஷனும், பக்தோதயதீர்த்தத்தில் ஏகாதசி திதியில் ஸ்நானஞ் செய்வோர்க்குத் திருப்பாற்கடலில் ஸ்நானஞ்செய்த பலனுண்டாமென்று வரதராஜமூர்த்தியும், இந்திரதீர்த்தத்தில் புதவாரத்தில் ஸ்நானஞ்செய்வோர்க்கு யமுனாநதி ஸ்நானபலமும் இந்திரபதமும் உண்டாமென்று இந்திரனும், பாஞ்சாலிகா தீர்த்தத்தில் திருவோணம் கேட்டை நக்ஷத்திரங்களில் ஸ்நானஞ்செய்தால் விரஜாநதியில் ஸ்நானஞ்செய்த பலனும் சகல ஐஸ்வர்யமு முண்டாமென்று காளிகாதேவியும் வரங்கொடுத்தனர். இந்த, விஷ்ணு க்ஷேத்திரமாகிய பூ வைகுண்டத்தில் வசிப்பவர் விஷ்ணு பதத்தை யடைவர். இதிற் சந்தேகமில்லை.

சர்க்கிரி வரலாறு.

சிந்துதீரத்தில் பாணகுண்டமென்கிற கிராமத்தில் வசிஷ்டகோத்ரஜ்ஞரும் ருக்வேதியருமான கர்க்கிரி என்னும் ஓரந்தணரிருந்தனர். அவர் நித்யகர்மமான சந்தியாவந்தனாதிகளையும், பிதுர்க் காமாதிகளையுங் கைவிட்டுப் பிறர்பொருளைக் கவர்வதிலும் பரதாரகமனத்திலும் எப்பொழுதும் பிறர் போசனத்தையே விரும்புவதிலும் ஏனைய பாபசெய்கைகளைச் செய்வதிலும் மனமூக்க முடையவராயும் சாமர்த்திய முடைய வராயு மிருந்தனர் அவர் சித்திரை மாதத்தில் பார்க்கநதியிலுள்ள நெல்லிமரங்களி லேறி அக்கனிகளைப் பறித்துக்கொண் டிருக்கும் பொழுது காஞ்சி நகரத்தில ஹரிக்ஷேத்திர வாசியாராகிய ஓரந்தணர் அம்மார்க்கமாக மிகுந்த தாகத்தோடு செல்லும்பொழுது "அவருடைய தாகத்தைப் பார்த்து ஓபிராமணரே? நீர் தாகத்தோடு போவதாய்த் தெரிகின்றது,' ஆகையால் நான் நெல்லிக்கனி தருகின்றேன் அதைத் தின்பீராகில் தாகந்தீருமென்று ஒரு பிடியளவு நெல்லிக்கனியைத்தந்து இதோ ஓர்தடாக மிருக்கின்றது என்று தடாகத்தையுஞ் சுட்டிக் காட்டித் தான் தன்னூருக்குச் சென்றனர். நெல்லிக்கனிபெற்ற அப்பிராமணர் அக்கனியை யுண்டு தடாகத்தில் தண்ணீரையும் பருகித் தாகந்தணியப் பெற்று யாத்திரையாகச் சென்றனர்.

சிலகாலங்கழித்து நெல்லிக்கனிதந்த அந்தப்பிராமணர் மரணமடைய, அவரைக் காலதூதர்கள் சமீபித்துக் கொண்டு போவதற்கு நடுங்கினவர்களாய் இவன் மஹாபாவி என்று பேரொலியிட்டு என்செய்வோமென் றேங்கினவர்களாய்க் காலபாசத்தாற் கட்டித் தண்டத்தால் அடித்தடித்து யமலோகத்துக்குக் கொண்டுபோய்விட்டனர். அப்பொழுது விஷ்ணுதூதர்கள் வந்து யமதூதர்களைத் தண்டித்து இவன் புண்ணியசாலி இவனை நீங்களடிக்கவும் பாசத்தாற்கட்டவுமாயிற்றோ இது நன்றாயிருந்தது என்று அவரைக் கட்டிய

பாசத்தை யவிழ்த்து புஷ்பவிமானத்திலேற்றி உபசாரமரியாதைகளோடும் பரமபதங் கொண்டுபோய் நாராயணரிடத்தில் விட்டனர்.

இச்செய்தியை இயமனறிந்து வைகுண்டத்துக்குப் போய் நாராயண மூர்த்தியைக்கண்டு இந்தப்பிராமணன் என்னபுண்ணியஞ் செய்தனன். இவன்செய்த தெல்லாம பாவமே ஆகையால் எனதுலோகத்தில என்வசமா யிருக்கத்தக்கவன் என்றுகூற, நாராயணர் இயமனைப்பார்த்துக்காஞ்சிக்ஷேத்திரத்தில ஆக்னேயதிக்கிலுள்ள பூலோகவைகுண்டத்தில் இந்தப்பிராமணன் ஒரு புண்ணியஞ் செய்திருக்கின்றனன் அது வொன்றனந்தமாய் அவன்செய்த பாவங்களெல்லாம போக்கி இந்த வைகுண்டத்துக்குவரும் புண்ணியசீலர்களுள் ஒருவனாக்கியது அவன்செய்த புண்ணியம் என்னையெனின், முன்சொல்லிய எனது க்ஷேத்திரத்திலிருந்து யாத்திரையால் ஒருபிராமணன் தாகத்தோடு செல்லும் பொழுது அவன் தாகந் தணிவதற்குத் தான் வைத்திருந்த நெல்லிக்கனியிற் சிலகொடுத்து ஓர் தடாகத்தையுங் காட்டினன். பின் அந்தப்பிராமணன் உண்டகனியும பானம் செய்த நீரும் எனக்கே அர்ப்பணமாயிற்று. ஏனென்றால் அந்தவிடத்தில் வசிப்பவரெல்லாம யானேயன்றி வேறில்லை. இனி நீ வந்தவழியைப் பார்த்துக்கொண் டேகலாம் என்று கூற, இயமன் பயந்து நாராயணரையும் அந்தப்பிராமணரையும் பலமுறையும் வணங்கி என்னாலே நேரிட்ட அபராதத்தைப் பொறுத்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு தன்னுடைய உலகம்போய்ச் சேர்ந்தனன்.

இரண்டாவது அத்தியாயம் விஷ்ணுக்ஷேத்திர வரலாறு.

முற்றிற்று.

ஸ்ரீ திரிபுரசுந்தர்யைநம:

மூன்றாவது அத்தியாயம்

—*—

அத்திகிரிவரலாறு.

புண்ணியகோடிகள் வசிப்பதனால் புண்ணியகோடியெனப் பெயர்பெற்ற அத்திகிரியானது பாஞ்சாலிகை என்னும் தீர்த்தத்திற்கு (2) அமசதூரம் வாயுதிக்கி லிருப்பது. அவ்விஷ்ணுக்ஷேத்திரத்திற்கு அலங்காரமாக வுள்ள இந்தக்கிரி முன்னொரு காலத்தில் இந்திரன் சாபத்தாலடைந்த யானையுருவமாதலால் அத்திகிரி எனப் பெயர்பெற்றது.

சரஸ்வதிதேவி இவ்வுலகத்துக்கு வேண்டிய (௬௪) வித்தைகளுக்கும் நாம் மூலகாரணியா யிருப்பதனால் நாமே சிறந்தவள் நமக்குச் சமானமானவர் இங் கொருவருமில்லை என்று ஒருவரையுமதியாது இறுமாந்து உலாவிவந்தனள். இந்தச்சரஸ்வதிதேவியைப்போலவே, இலக்ஷ்மி தேவியும் உலகத்துக்கு வேண்டிய சகல பாக்கியங்களுக்கும் நாம மூலகாரணியா யிருப்பதனால் நாமே சிறந்தவள் நமக்குச் சமானமானவர் எவ்வுலகினுமில்லை என்று ஒருவரையுமதிக்காது இறுமாந்து உலாவிவந்தனள். இவ்விருவரும் ஓர்கால் சந்தித்து அவருள் இலக்ஷ்மிதேவி, சரஸ்வதிதேவியைப் பார்த்து நீ இறுமாந்து வருகின்றனையே உனக்கு என்ன பெருமை யிருக்கின்றது நீ என்முன் இப்படியும் வரலாமோ வென்று கூறினள். அது போலவே சரஸ்வதி தேவியும் இலக்ஷ்மிதேவியைப் பார்த்துக் கூறினள். பின் இருவருக்கும் பெருங்கலகம் விளைந்துசுவர்க்கலோகமடைந்து இந்திரனைப்பார்த்து, இந்திரனே! எங்களிருவருள் யார்சிறந்தவள்? நீ நியாய விரோத மின்றி நடுவு நிலைமையாய் நின்று கூறுவா யென்றனர்." இந்திரன் சரஸ்வதி தேவியைப் பார்த்து

சகல கலாவல்லீ? இலக்ஷ்மிதேவி மண்ணுலகத்தாருக்கும் விண்ணுலகத்தாருக்கும் சகல சம்பத்தையுங் கொடுக்குந் தெய்வமாயிருக்கின்றாள். அன்றியும் விஷ்ணுமூர்த்திக்குப பத்தினி, உனக்கு மாமி, உலகத்தாருக்குத்தாய், ஆகையால இச் செந் தாமரையாளே சிறந்தவள் என்றனன். அது கேட்ட வெண்டாமரையாள் மிகவுங் கோபங்கொண்டு நீ நியாய விரோதமாய்க் கூறினமையால் நானிடுஞ் சாபத்துக் குள்ளாவாய், உனது சம்பத்தை நிலைநிறுத்திக் கொள்வதற் கல்லவா இப்பொழுது இலக்ஷ்மியைச் சிறப்பாகக்கூறினை. நியாயமறியாதவுன்னிடம் யான் வந்தது என்னறியாமையே எனக்கூறித் தன்மனத்தில் இவ்விந்திரன் மிக அகங்காரியாயும் துஷ்ட சித்த முடையவனாயும மூமூடனாயும் இருக்கின்றான். இவனை இப்படியாக்கியது இவன் படைத்திருக்கும தன கர்வமல்லவா வென்றெண்ணி இவனை எவ்விதத்திலாவது நமதுசாபத்துக் குள்ளாக்க வேண்டியதென் றாலோசித்து இந்திரனை நோக்கி ஓ இந்திரா? நீ பெற்றிருக்கும் ஐஸ்வரிய மதத்தினால் என்னைச் சிறந்தவளென்று கூறுவதற்கு உனக்கு நாவெழாமற் போயிற்றல்லவா! அப்படியால் நீ மத முடைய யானையாகக் கடவாயென்று சபித்துப போயினள்.

அதுகேட்ட, இலக்ஷ்மிதேவி இந்திரனைப்பார்த்து ஓ இந்திரா! உனக்கு இச்சாபந்தீரும் உபாயமொன்றைக்கூறுகின்றேன். என்னையெனின், வரதராஜர் வீற்றிருக்கும் ஹரி க்ஷேத்திரத்தை யடையப பெறுவையானால் இந்த யானைவடிவம் நீங்கும். நீ அந்த ஹரிக்ஷேத்திரத்தை யடைவதற கோருபாயங் கூறுகின்றேன். பூலோகத்தில் சிம்ஹாசலமென்று ஒரு பர்வதமிருக்கின்றது அப்பர்வதத்திற்குச்சமீபத்தில் தண்டகாரண்ய மென்றொரு ஆரண்யமுள்ளது," அவ்வாரண்யத்தில் விஷ்ணு பக்தனான பிரகலாதனென்பவனொருவனிருக்கின்றான். அவனிடத்தில் நீ சென்று (௯உ) எழுத்தோடுகூடிய நரசிம்ஹமந்திரத்தை உபதேசமுறையாகக்

கேட்டு ஏகாக்ரசித்தனாய்த் தியானஞ் செய்வையாயின் பூர்வஜ்ஞானமும் வரதராஜ க்ஷேத்திரத்தை யடையும் புண்ணியமும் வன்மையும் பெற்று அந்த ஹரி க்ஷேத்திரத்தை யடைந்து நரசிம்ஹ மூர்த்தியினால் கஜவடிவம் நீங்கப்பெறுவாயென்று அநுக்ரஹஞ் செய்து சென்றனன். அவ்வாறே யானைவடிவ மடைந்த இந்திரன் காஞ்சியில் ஹரிக்ஷேத்திரத்தையடைந்து நரசிம்மமூர்த்தியைத் தனது இருதயத்தில் தியானஞ்செய்ய அவர் அவனது இருதயத்தினின்றும் வெளிப்பட்டு அந்தக் கஜரூபத்தைத் தனது கைகளால் இரண்டாகப்பிளந்தனர். உடனே இந்திரன் சாபத்தினின்று நீங்கித் தன்னுருவத்தைப் பெற்றுச் சென்றனன். நரசிம்ஹமூர்த்தி இந்திரனுடைய அந்தக் கஜரூபத்தைப் பர்வதமாக அநுக்கிரகஞ் செய்து கிழித்த இருதயமாகிய விடத்தைக் குகையாகக்கொண்டு அதில் யோகிகளைப்போல் யோகாரூடராய் வீற்றிருந்ததனால் குஹாநரசிம்ஹ ரெனப் பெயர் பெற்று விளங்குகின்றனர். வரதராஜ மூர்த்தியும் அந்த யானைவடிவாகிய மலையின்மேல் வீற்றிருந்ததனால் அத்திகிரிநாதரென்று பெயர்பெற்றனர். அம்மலையும் அத்திகிரி எனப் பெயர்பெற்றது

இந்திரன் குஹாநரசிங்கமூர்த்தியினால் சாபவிமோசனமுண்டாய்ச் செல்லும்பொழுது அத்திகிரியினின்றும் இரண்டு சிறுபிள்ளைகள் வரக் கண்டனன். அவ்விருவரும் அதிசுந்தரமுடையவர்களாயும் வேதசாரமே பிழம்பாய்த் திரண்டிருப்பதுபோல் பேரொளி பெற்றிருக்குந் திருமுகமண்டலமுடையவர்களாயும் இருப்பதைப்பார்த்து அதிசயித்து அவர்களை நோக்கி ஓ சிறுவர்களே ? நீங்கள்யாவர் ? உங்களாச்சிரமமெது? இவ்வழியாய்வருங் காரணமென்னை? இம்மலையிலெப்பொழுது ஏறினீர்கள்? இவை எனக்குத் தெரிவியுங்களென்றனன். ஐயா! நாங்கள் சிருங்கிபேரருடைய பிள்ளைகள் எங்கள் குலம் பிராமணகுலம். எங்களுக்குப் பெயர்

ஹேமன். சுக்லன் எங்கள் சூத்திரம் வைகானசசூத்திரம். எங்கள் ஆச்சிரமம் பிரமசரியாசசிரமம். எங்கள் ஆசாரியர் கௌதமமுனிவர். யாங்கள் வியாகரண சூத்திரங்களிலும் மீமாம்ஸா சாஸ்திரங்களிலும் வல்லவர்கள். இதுவரையில் எங்கள் மரபு முதலியவற்றைக் கூறினோம்.

இனி வந்ததற்குக்காரணம் கூறுகின்றோம். கொங்கண தேசத்தில் எங்களாசிரியருடைய ஆச்சிரமம். அவர் விஷ்ணு மூர்த்தியின் பூஜைநிமித்தம் எங்களைப்பார்த்துத்தீர்த்தமும் சமித்துங் கொண்டுவரும்படிக் கட்டளையிட்டனர். யாங்கள் அவர்கட்டளைப்படி ஓர் சுத்தமான பாத்திரத்தில் தீர்த்தத்தை நிரப்பிப் பரிசுத்தமான விடத்தில் மூடாமல் வைத்துவிட்டுச் சமித்துக்களுக்காக ஓர் மரத்தின்மேலேறிச் சமித்துக்களை யொடித்துக்கொண்டு கீழிறங்கி தீர்த்தத்தையும் எடுத்துக்கொண்டு ஆச்சிரமத்தை யடைந்து ஆசிரியர் முன் தீர்த்தத்தை வைத்தோம். அப்பொழுது அத்தீர்த்தத்தினின்றும் ஒரு சிறிய பல்லி துள்ளி வெளியே விழுந்தது. நாங்கள் தீர்த்தத்தை மூடாமற் கொண்டு வந்து வைத்ததையும் அதினின்றும் பல்லி வெளியே குதித்ததையும் ஆசிரியர் கண்டு அறிவிலிகளே என்னகாரியஞ் செய்தீர்கள். நீங்கள் தீர்த்தத்தை மூடாமல் வைத்தபடியினாலல்லவா அதிற்பல்லி விழுந்தது. இனி இத்தீர்த்தம் பூஜைக்காகா. நீங்களுடைய பூஜைக்கு விக்கினஞ் செய்தவர்களானீர்கள் என்று கோபித்துப் பல்லிகளாகப் போகக்கடவீர்கள் என்று சபித்தனர்.

இந்திரனே? நாங்கள் அச்சாபத்தை யேற்றவர்களாய்வரதராஜர் வீற்றிருக்கின்ற இந்த மலையருகிலுள்ள விருக்ஷத்தில பல்லிகளாய் வாழ்ந்திருந்தோம். உன்னுடைய கஜரூபத்தை நரசிஹ்மமூர்த்தி பிளக்கின்றகாலத்தில் உனது துதிக்கையினால் நாங்கள் வாழ்ந்திருந்த மரத்தை முறித்தனை அப்பொழுது இந்த அத்திகிரியினுடைய பின்பக்கத்திற்றுள்ளிப் பாய்ந்தோம்.

உடனே சாபம் நீங்கப் பெற்றோம் இனிப் போய்வருகின்றோமென்று சொல்ல, இந்திரன் மகிழ்ந்து அச்சிறுவர்களை நகைமுகத்துடன் விடைகொடுப்ப அவர்கள் தங்களிடம் போய்ச் சேர்ந்தனர். பின் சாபம் நீங்கிய மகிமை விளங்கப் பொன்னினாலும் வெள்ளியினாலும் இரண்டு பல்லியுருவங்களமைத்து மேலே பிரதிஷ்டை செய்து இவ்விடத்தில இவ்விரண்டு பல்லிகளையும் கையினால் பரிசித்து இவ்விடத்தினின்றே நின்று யாரொருவர் இந்த அத்திகிரியைத் தெரிசனஞ் செய்கின்றார்களோ அவர்கள் ஏகாதசியில் அகோராத்திரம் ஹரிநாமசங்கீர்த்தனஞ் செய்தலையும் விரதபலனையடையக்கடவா என்று வரமளித்துச் சென்றனன். ஆதலான் ஹேம சுக்கிரர்களுடைய சாபம் நீங்குமாறு செய்த அத்திகிரியைத் தெரிசிக்கப் பெற்றவர்களும் பரமபதத்தையடைவார்கள்.

மஹிமை.

பூர்வத்தில சரயுநதிக்கரையில் வசிக்கும் பரத்துவாச குலத்திற் பிறந்த சுக்லவேதியனென கணு என்னும் பிராமணனொருவன் சகல சாஸ்திரசம்பன்னனாயும் தனுர்வித்தையிற் சிறந்தவனாயும் பிராஹ்மணவேடத்தில் சிறிதுங் குறைவில்லாதவனாயு மிருந்தனன். அவன் பூர்வ ஜன்மத்தால பாவகன்மத்திலாசையுடையவனாய் எப்பொழுதும் யாத்திரைசெய்வதிலேயே மிக விருப்புடையவன்போல் யாவருக்கும் புலப்படுத்தி யாத்திரார்த்தமாய்ச் செல்பவரோடு தானுஞ்சென்று மலைவனம் துர்க்கம் முதலிய மற்றவானவிடங்களிற் போகுங்கால் தான் கற்றிருக்கும் வில்வித்தையினுடைய சாமர்த்தியத்தினால் ஒருவரையும் விடாது கொன்று அவர்கள் பொருள்களைக் கொள்ளைகொண்டு தன்னிடஞ்சென்று மனைவி மக்களுடன் வாழ்ந்திருந்தனன். ஓர் நாள் இவன் முன்போல் யாத்திரார்களைக் கொலைசெய்கின்ற பொழுது அவர்களில் நைமிசாரண்யவாசியான் ஒரு வீரனிருந்தனன. அவ்வீரன

இவ்வேதியன் செய்கையைக்கண்டு மனம்புழுங்கி அவனைப் பிடித் திறுகக்கட்டி நீ என்செய்கின்றாய் ? இந்தக்கொலைத் தொழிற்கா இந்தப் பிராமணவேடமென்று அவனை யிகழ்ந்து கூறி நீ கொலைத்தொழில் பூண்டவனாயினும் பிராமணகுலத்திற் பிறந்தவனாதலால் உன்னைக் கொலைசெய்தல் பழுதென்றுகூறி ஓர்கத்தியை எடுத்து அவனது யக்ஞோபவீதத்தையும் சிகையையும் அறுத்துப் பின்னர் அவனைக் கட்டியுநட்டவிழ்த்து இவ் வழியே யோடிப்போவாய் இனி இவ்வழி ஒருபொழுதுந்திரும்பாதே என் றச்சுறுத்தி ஓட்டிவிட்டனன். அந்தப்பிராமணன் அவனிறுக்கிய இறுக்கினால் சரீரம் புண்பட்டு ஓடிப்போவதற்கு முடியாமல் பையப்பைய நகர்ந்து தக்கோலம் என்கிற ஊரையடையும்பொழுது பூர்வபுண்ணிய வசத்தால் இந்த அத்திகிரியைக்கண்டு மரணமடைந்தனன். அந்த அத்திகிரியினுடைய தெரிசனவிசேடத்தால் விஷ்ணு தூதர்கள் வந்து அவனைத் திவ்ய விமானத்தி லேற்றிக்கொண்டு விஷ்ணுலோகம் போய்ச்சேர்ந்தனர்.

மூன்றாவது அத்தியாயம் அத்திகிரி வரலாறு முற்றிற்று

உ

ஸ்ரீ காமாக்ஷிதேவியைநம

நான்காவது அத்தியாயம்

வரதராஜ மூர்த்தி வரலாறு.

சங்குசக்ர கதா தாரியாய் ஸ்யாமளவர்ணராய் சர்வாபரண பூஷிதராய் நீலமணிபோற் சுந்தரராய் செந்தாமரைக் கண்ணராய் ஸ்ரீவத்ஸராய் ஸ்ரீதரராய் ஸ்ரீமானும் பத்மா

சுஷராய் பத்மநாபராய் இரத்னகர்ப்பராய் கிரீடகுண்டல தாரியாய்ச் சவ்யாபசவ்ய பாகங்களில் ரமா பூமியாகிய மங்கைய ரிருவர் சாமரைக ளசைக்கப் புண்ணியகோடி விமானத்தில வீற்றிருந்து பிரமனுக்கும் தனது பக்த ஜனங்களுக்கும் சர்வா பீஷ்டங்களையுங் கொடுக்கும் வரதராஜமூர்த்தி பிரம னுக்குச் சிருட்டி தண்டங்கொடுத்த வரலாற்றைக் கூறுகின் றோம்.

நான்றான் சிறந்தவளாமென்று வாதாடி முன்னொருநாள் சரஸ்வதி இலட்சுமியாகிய அவ் விருதேவியரும் அவ்வளவி லொழியாது மிகவுங் குரோதத்தையே மேற்கொண்டு பிரம னிடஞ்சென்று எங்களிற் சிறந்தவள் யாவள் என்று கேட்ட னர் பிரமனும் இந்திரனைப்போலவே இலக்ஷுமியே சிறந்த வளென்றுகூறினன் அதுகேட்ட சரஸ்வதி கோபமடைந்து இந்திரனைச் சபித்தோம் இவர் கணவராயிருப்பதால் சபிக் கலாகாதென் றெண்ணிப் பிரமதேவன் கையிலிருக்கும் விஷ் ணுமூர்த்தியினால் கொடுக்கப்பட்ட தன்னம்சமாகிய சிருட்டி த்தண்டத்தைப் பிடுங்கித் தன் சரீரத்தி லொடுக்கிக்கொண்டு அவ்விடத்தில் இல்லாமற் சென்றனள்.

பிரமனுக்குப் பின் சிருட்டிசெய்யும் வன்மையற்றுப் போகவே சர்வ சராசரங்களுந் தோன்றுதலிலவாயின அது கண்ட பிரமன் சிந்தாகுல மடைந்து நம்முடைய பத்தினி என்னசெய்தாள்! நாம் வைத்திருந்த தண்டம் அவளுடைய அம்சமாயிருந்தபடியினாலல்லவா அதனைப் பிடுங்கிக்கொண் டனள் ஆயினும் அத்தண்டத்தைக் கொடுத்தவள் இவளல் லவே விஷ்ணுமூர்த்தியல்லவா நமக்குக்கொடுத்தவர், அதனை யவர்பாற் பெறுவோம் என்றெண்ணி இனி இந்தச் சரஸ்வதி யால நமக்காவதென்னை? அவளுடைய முகத்தையும் பார்க்க க்கூடாதென்று குரோதங்கொண்டு இமயமலையையடைந்து விஷ்ணுமூர்த்தியை நோக்கித் தவஞ்செய்து வந்தனன்.

விஷ்ணுமூர்த்தி இவனது தவத்துக்கிரங்கிப் பிரசன்ன ராய்ப் பிரமனே! யாது வேண்டித் தவஞ்செய்கின்றனை

என்று வினவ, பிரமன் என்றந்தையே! சிருட்டி நிமித்தம் உம்மால் கொடுக்கப்பட்ட தண்டத்தை வாணி தன்வன்மையால் அபகரித்துக் கொண்டனள். அதுமுதல் சிருட்டித் தொழில் நின்றுவிட்டது. இனி அத்தண்டமின்றி எவ்வாறு சிருட்டிசெய்வே னென்றனன் திருமால் நீ நூறு அஸ்வமேதம் இளாவிருதகண்டத்திற் செய்வையாயின் அத்தண்டங்கிடைக்கும் அங்கு நூறு செய்ய முடியாதாயின், நூறு அஸ்வமேதபலனை ஒரு அஸ்வமேதஞ் செய்வதினாலேயே யடையக் கூடுமான ஒருக்ஷேத்திர மிருக்கின்றது, அது காஞ்சியாம் அவ்விடத்திற் சென்று உத்தமோத்தமமாகிய அத்திகிரியின் முன்பிரதேசத்திலிருந்து ஒரு அஸ்வமேதஞ்செய்தால இளாவிருத கண்டத்தில் நூறு அஸ்வமேதஞ்செய்த பலனுண்டாகும இதிற் சந்தேகமில்லை. ஆகையால அஸ்வமேதம நூறாவது ஒன்றாவது முன்குறித்த விடங்களிற் செய்வாயாகில அந்த ஓமகுண்டத்தில் நான்வெளிப்பட்டுவந்து சிருட்டித்தண்டந் தருகின்றேன் இதிலையமில்லை. இனி நீ இளாவிருத கண்டத்திலாவது, காஞ்சியில் விஷ்ணு க்ஷேத்திரத்திலாவது செய்வாயாக உன்னுடைய இஷ்டம் என்று அநுக்கிரகஞ் செய்து மறைந்துபோயினர்

பிரமன் மகிழ்ந்து ஒரு அஸ்வமேதமே செய்ய வுத்தேசித்து அதிகவிரைவாய் அத்திகிரியையடைந்து அத்திகிரிக்கு மேற்பக்கத்தில் நரசிம்ஹருடைய சந்நிதியில் தேவசிலபியைக்கொண்டு விதிப்படி யாககுண்டமமைத்து ஒரு வருடஞ் செய்யத்தக்க இந்தயாகம் நிர்விக்கினமாய் நிறைவேற வேண்டுமென்று விக்னேஸ்வரப் பிரார்த்தனைசெய்து விதிமுறையாக அந்தயாகத்துக் குரிய லக்ஷண மமைந்துள்ள அஸ்வத்தைக்கொண்டு வந்து அபிஷேக அலங்காரங்கள் செய்து நீலமாயும் சுவர்ணமயமாயு முள்ள வஸ்திரங்களால் அலங்கரித்து அதன்மத்தகத்தில் பொன்பட்டங்கட்டி நேத்திரபட்டந்தரித்து யதேச்சையாகப் போகும்படிச் செய்து யக்ஷ கந்தர்வ ராக்ஷசர்களால் யாதொரு தீங்கும் வராவண்

ணைங்காத்து அதனைமீட்டுக்கொண்டுவரச்செய்து யாகசாலையிலுள்ள யூபஸ்தம்பத்திற் கட்டி அதன்காதில் "தத்சக்ஷுஸ" என்னும் மந்திரத்தினால் நேத்திர பட்டத்தை யவிழ்த்து தன்னுடையபீடத்தில் தர்மபத்தினியை ஆவாகித்துக்கொண்டு பின்னர் சுப்பிரமணியக்கடவுளைச் சாத்கராகவும், மணிகண்டீசரை உத்காதாவாகவும், வருணனைச் சோமமாகவும், யமதர்மராஜனைச் சஸ்த்ரமாகவும், சாதான்ஹிகரைப் பௌத்ரோகித்ராகவும், இருடிகள் முதலான தேவகந்தர்வ யக்ஷ கின்னர அப்சர சித்த சாத்யர்களை ஏனைய தொழில்களுக்காகவும், கணத்யக்ஷர் க்ஷேத்திர பாலகர் யோகினிஹா முதலியோரை யாக ரக்ஷார்த்தமாகவும் அந்தந்த ஸ்தானங்களில் அவரவரை யேற்படுத்திக்கொண்டு யாகஞ்செய்ய எத்தனித்து "ஷட்பர்யவாம்சகை:" என்ப நாதிமந்திரங்களால் கவாஸ்நானங்களாகிய ஷடங்கங்களில் அவ்வவ் வங்க தேவதைகளைப் பூசித்து அந்த வபைகளை யெடுத்து யாகாங்க தேவதைகளை யுத்தேசித்து ஓமஞ் செய்யத் தொடங்கினன்.

இச்செய்தியைச் சரஸ்வதிதேவியறிந்து பத்னியுக்தராகச் செய்யவேண்டிய யாகத்தைப் பத்னியில்லாமலே செய்யத்துணிந்தது மிகநன்று, இவ்விதியை எங்குக்கண்டனர்! இதுதானோ இவர்விதியென்று பொய்படைத்ததற்கு லக்ஷணம்! இதுயாருடைய கற்பனையோ! என்று பலவாறுகவெண்ணி அடங்காத குரோதங்கொண்டு ஆ! ஆ! இவரை விட்டேனோ! யாகத்தைமுடிக்கச் செய்வேனோ!! அப்படிமுடிக்கச் செய்யவிடுவேனாயின் நானுங் கலைமங்கையாவேனோ! என்று பல வீரமொழிகள்பேசி மஹாகோபங்கொண்டு தனது மாயையினால் அளவிடப்படாத அக்னிரூபியாயிருக்கின்ற மாயா அநலனை யுண்டாக்கிப் பிரமன் யாகசாலைக் கேவினள். அதுகண்ட விஷ்ணுமூர்த்தி அவ்வநலனை ஓர்கையில் தீபம் போலேந்திக்கொண்டு தீபப்பிரகாசராயினர். பின் கபாலா

ஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்ய அதனைச் சிம்ஹரூபமாய்ப் பக்ஷித்து நரசிம்ஹராயினர். அதன்பின் அனேக அசுரர்களை யேவ அவர்களைக்கொன்று உதிரபானஞ்செய்து செந்நிறமடைந்து பவளவண்ணராயினர். அதன்பின்னேவிய காளியைத் தனது எட்டுத் திருக்கரங்களாலும் பிடித்திறக்கிப பூமியிற்றள்ளி அவள் சிரசின்மேல் அட்டகாசமாய் வீற்றிருந்து அஷ்டபுஜராயினர். பின்னர் சரஸ்வதி தன்னால் விடப்பட்டதும், விடப்பட்டவரும் விஷ்ணு மூர்த்தியினால் பாழ்பட்டுக்கண்டு இனிநாமே செலவோம் இந்தவிஷ்ணு என் செய்வார் பார்ப்போ மென்றெண்ணி, முன் மஹாதேவியை வெருட்ட அதிகவேகமாய்ப் பெரும் வெள்ளங் கொண்டு வந்த கம்பைநதியும், நந்திமலையினின்றும் பெருவெள்ளமாய்ப் பெருக்கெடுத்துச் சமுத்திர சங்கமமாவதற்குச் சென்ற க்ஷீரநதியும், இப்பொழுது ஒன்றாகத்திரண்டு வருவதென்றெண்ணுமாறு மஹாப் பிரளயத் தோடும் அதிகவேகமாய் யாகசாலையை நோக்கிவந்தனள். அதுகண்ட விஷ்ணுமூர்த்தி இவ்வெள்ளம் சாக்ஷாத் சரஸ்வதியென்றே அறிந்து இவளைச் சுலபமாய் வென்றுவிட வேண்டுமென் றெண்ணினவராய் அவ்வெள்ளம்வரும் வழியிடையில் நிர்வாணியாய்க் குறுக்கே நன்றாய் கைகால்களை விரித்துப் படுத்துக்கொண்டனர்.

அவ் வலங்கோலத்தை வெள்ளரூபமாய் வருகின்ற சரஸ்வதிகண்டு இப்படியுஞ் செய்வாருண்டோ! இதுவா ஆண்பிள்ளைத்தனம்! இவர்தான் ஆண்பிள்ளைத் தன்மையைவிட்டாலும் நாம பெண்தன்மையை விடலாமாவென்று நாணங்கொண்டு அவ்வழிச் செல்லாது பிலத்தை யடைந்தனள்.

இச்செய்தியை யறிந்த பிரமன் மனமகிழ்ந்து விஷ்ணுமூர்த்தியி னுடைய கருணையைப் பாராட்டித் தான் செய்துகொண்ட சங்கற்பப்படி ஒருவருஷமும் நிறைவேறினமையால் பூர்ணாகுதி செய்து யாகத்தைப்பூர்த்தி செய்ய வெண்

ணி யாகத்தில்ஓமஞ்செய்துவந்த யாதொரு திரவியங்களோ அந்தத் திரவியங்களுடைய சேஷங்களை 0 யவாம்சங்களோடும * கவாம்சங்களோடுஞ் சேர்த்து நெய்யோடுகூட்டிச் சிருக்கில்வைத்துச் சுருவத்தை மேலேமூடிக் கிழக்குமுகமாக நின்று விஷ்ணுமூர்த்தியைத் தியானித்து மந்திரங்களை மனசாகவுச்சரித்துப் பூர்ணாகுதி செய்தனர். உடனே அவ் வோமகுண்டத்தி னின்றும் விஷ்ணுமூர்த்தி சிருஷ்டி தண்டத்தோடும் வெளிப்பட்டுச் சிருட்டி தண்டத்தைப் பிரமனுக்கு அநுக்கிரகஞ்செய்ய நின்றருளினர்.

அவர் நின்றருளியகாலம் சுவேதவராக கல்பம் ஐந்தாவது வைவஸ்வதமநு கிருதயுகம் நரசிம்ம ரவதார காலம் யுவ௵ வைசாகமீ மேஷத்தில் சூரிய னிருக்கிறகாலம் சுக்லபக்ஷ சதுர்த்தசி அஸ்த நக்ஷத்திரம் சூரியோதய காலமாகிய சுபதினமாகும் அக்காலத்தில் அவரது தெரிசனங்கண்ட பிரமன் பூமியில் தண்டாகாரமாக விழுந்து அஞ்சலியஸ்தராய் நின்று சிருட்டி தண்டத்தை அவரால கொடுத்தருளப் பெற்றுக்கொண்டு தேகபரவசனாய் ஒருமுகூர்த்தகாலம் நின்றனன். அதற்குள் இந்திரன் விஸ்வகர்மாவினாலே அந்த அத்திகிரியில் இருபத்து நாலுபடிகளையும் அதன்மேல் ஓர்புண்ணிய விமானத்தையு மமைத்து அதில்பல்லிகளுடைய முத்திரையுநெரிய ஆலய முண்டாக்கினன். தேகபரவசனாய்நின்ற பிரமன் கண்களைவிழித்துப் பார்க்க அந்த வரதராஜமூர்த்தி புண்ணியகோடி விமானரூடராய்க் காக்ஷி கொடுக்கக்கண்டு முன்போல் பரவசமுற்று வரதராஜருடைய ஸ்ரீபாதத்தில் தன்முடியைப் பொருந்தவைத்து ஆனந்தக் கடலில் மூழ்கிக் களித்தனன். தேவர்களும் முனிவர்களுமயாகாக்னியிற் றோன்றிய உஷ்ண சாந்தியின்பொருட்டு நெய்யினால் ஒருமுகூர்த்தகாலம திருமஞ்சனஞ் செய்து அறுசுவையோடு கூடிய மஹாநிவேதனத்தை நைவேத்தியஞ்செய்

0 யவாம்சமாவது யாகநிவேதனத்துக்காக வைக்கும் அன்னம்.
* கவாம்சமாவது குதிரையி னிடத்திருந்து எடுக்கும் வபை.

வித்துப் பின் பிராஹ்மணர்களைப் போஜனஞ் செய்வித்து அவர்களுக்கு வேண்டியவாறு ஆடை யாபரண சுந்த புஷ்ப தாம்பூலாதிக ளெல்லாங் கொடுத்து மகிழ்வித்தனர். உற்சவ த்தின்பொருட்டு விஸ்வகர்மா வரதராஜருடைய அநுக்கிரக த்தைப்பெற்ற கஜேந்திரனைப்போல ஓர்யானையைத் தந்த னன். இந்திரன் முத்துக்குடை தந்தனன். பிரமன் நவர த்னமயமாகிய மகுடந்தந்தனன். இவ்வாறு யாவரும் யானை முதலியவை யெல்லாந் தந்தபின்னர் அன்று மாலைக்காலத் தில் வரதராஜமூர்த்தி திவ்யாலங்காரத் தோடுங் கஜாரூட ராய் வீதியில் திருவோலக்கமா யெழுந்தருளிவர உற்சவத தை நடத்தி முன்போல் விமானத்தில் வீற்றிருக்கச் செ ய்து பின் அபீஷ்டவரதா வரதாவென்று தோத்திரஞ்செ ய்து இந்தக் காஞ்சியில் பிரசன்னராயிருந்து பக்தர்களுக்கு அநுக்கிரகஞ் செய்து வரவேண்டுமென்று பிரார்த்திததுக கொண்டு விடைபெற்றுத் தங்கள் தங்கள் பதங்களுக்குச்செ ன்றனர் பிரமதேவன் வரதராஜருடைய நாபிஸ்தானத்தில் மாணிக்கரூபமாய்ப் பதிந்து பிரகாசித்தனன்.

பின்னர் வரதராஜமூர்த்தி தனது பக்தனான பிரமனை ப்பார்த்துத் தேவர்களுடைய வேண்டுகோளின்படி இக்கா ஞ்சிக்ஷேத்திரம் வைகுண்டத்தைப் பார்க்கிலும் அதிபாவன மாயிருப்பதால் எனக்கு அதிரம்யமாயிருக்கிறது. ஆகையா ல் இவ்விடத்தில் எனக்கு வருடந்தோறும் சித்திரைமாசம் எனது ஜன்ம நக்ஷத்திரமாகிய திருவோண நக்ஷத்திரத்தில் நெய்யினால் சஹஸ்ரதாரையில் அபிஷேகமும் பூசையும் உற்சவமும் பிராமண போஜனமும் செய்விக்கின்றவர்கள் யாரோ அவர்கள் என்னால் பெறக்கடவனவாகிய அபீஷ்ட ங்களைப் பெறக்கடவர் என்று வரமளித்தனர்.

மஹிமை,

யமுனாதீரத்தில் கோகுலக்ஷேத்திரத்தில் வாதராயண கோத்திரத்தில் யஜுர்வேதியான பானுவர்ண னென்னும்

பிராமணன் யாத்திரைமூலமாய் இந்த அத்திகிரியையடைந்தனன். அன்று வரதராஜருக்கு கிருதாபிஷேகமாக விருந்தமையான் அவ்வபிஷேக மகோற்சவத்தைக் கண்டு களிதளுப்புகழ்ந்து தன்னூரை யடைந்து சிலகாலம் வாழ்ந்திருந்து மரணமடைந்தனன். அவனைத் தேவகணங்கள் கொண்டுபோய்ச் சுவர்க்க பட்டாபிஷேகஞ்செய்ய, அங்குசில காலம் வாழப் பெற்றுப் பின்னர் அவ்விடத்தினின்றும விஷ்ணு கணங்களால் சூழப் பெற்று வைகுண்டபதத்தை யடைந்து வாழ்ந்திருந்தனன்

நான்காவது அத்தியாயம் வரதராஜ மூர்த்தி வரலாறு.

முற்றிற்று.

உ

ஸ்ரீ திரிபுரசுந்தர்யைநம:

ஐந்தாவது அத்தியாயம்.

வேகவதி வரலாறு.

முன் சரஸ்வதி வரதராஜரால் அவமதிக்கப்பட்டு நாணங்கொண்டு கீழ்நோக்கிப் பிலத்தையடைந்தபின்னர் விஷ்ணு சாலையில் ஸ்ரீ வரதராஜ க்ஷேத்திரத்துக்கு மூன்று அம்சம் தெற்கில் வேகவதியென்கிற நதிரூபமாய்ச் செல்லத்தொடங்கினாள். அந்தக் கலைமகளுருவாகிய நதியானது உற்பத்தியானகாலத்தில் பிரம லோகத்தினின்று நந்திசைலத்தை யடைந்து அதினின்றும் பாலாற்றில் அந்தர்க்கதமாய்க் கலந்து இருபது யோசனைதூரம் வந்து ஹரிக்ஷேத்திரத்துக்கு மேற்கில் ஒன்றரையோசனை தூரத்தில் அந்தப்பாலாற்றுக்கு

வேறாகப் பிரிந்து மறுபடியும் அந்தவிஷ்ணுசாலைக்குக் கிழக்கில் மூன்றரையோசனை தூரத்தில் முன்போல் பாலாற்றிற் போய்க்கலந்து சமுத்திரசங்கம மாயிற்று. அது இந்தப்புண்ணியகோடி க்ஷேத்திரத்தில் பிரவேசித்துச் சென்றபடியால் புண்ணியகோடியெனவும் பெயர் பெற்றது.

வேகவதி புண்ணியகோடியெனப பெயர் பெற்ற கலைமகளானவள் விஷ்ணு மூர்த்தியினால் தனக்கு வந்த பரிபவம் நீங்கப்பெற்றுப் பேறுபெற்ற வரலாறு இனிவருமாறு.

நதிரூபமாய்ச் சென்ற சரஸ்வதி தேவியானவள் பின்னர் விஷ்ணுமூர்த்தியைத் தியானிக்க அவர் பிரசன்னராயினர். அவரை நோக்கி ஓ நாராயணரே! நான் நதிரூபமாய் வரும்பொழுது நீர் நிர்வாணியாய் என்முன் எதிர்ப்பட்டீரல்லவா? அதனால் எனக்குமானபங்கமும் பதிவிரதாபங்கமும் வந்துவிட்டது இதிற் சந்தேகமில்லை. ஸ்திரீகளுக்கு இவ்விரண்டுந்தானே அங்கமும் லக்ஷணமும்? இவைபங்கப்படுமானால் இருந்தாலென்! இறந்தாலென்! ஆகையால் எனக்கு அவ்விரண்டையும் நீர்தரவேண்டும், தராவிடில் நான்பிராணனைவிடுவேன் என்றனள். அதுகேட்ட விஷ்ணுமூர்த்தி மனமிரங்கி, ஓ சரஸ்வதீ! நீ எனது அம்சம். பிரமன்கையிலுள்ள சிருஷ்டி தண்டம் உன்னுடைய அம்சமாக என்னாலுண்டாக்கபட்டது. இங்ஙனமிருக்க இவற்றை மறந்து அத்தண்டத்தை உன்னுடைய சுதந்தரமாகப்பிடுங்கி உன்னிடத்தில் ஒடுக்கிக்கொண்டு அகங்காரத்தோடு வந்தனையன்றோ? அதனால் உன்னைமானபங்கஞ்செய்து இப்பிலத்திலொடுக்கிப்பிரமனுடைய யாகத்தையுமுடித்து அவனுக்கு வேறு சிருஷ்டிதண்டமும் கொடுத்தேன். இப்பொழுது நீ அகங்காரத்தை விட்டு என்னைத் தியானித்து எனக்குக் கற்பு வரவேண்டுமென்று பிரார்த்திக்கின்ற படியால் யான்சொல்லுமுபாயத்தை மறுக்காது செய்வையானால் கற்புடையவளாவையென்றனர். அதுகேட்ட சரஸ்வதி கற்பிணையே பெண்ணல்

மாக வெண்ணினு ளாகலான் அவர்மொழிக் கிணங்கி அவ்வு பாயத்தைக் கூறுவீரென்றனள்.

விஷ்ணுமூர்த்தி ஓ சரஸ்வதி! நீ முன்போல் நதியுருவாகவே வெளிப்பட்டு முன்வந்தவழியே சென்று க்ஷீரநதியோடு கலப்பையாயின் கற்புநிலையழிந்த பாவம்போய்விடும். பின் அந்நதியோடு சமுத்திரசங்கம மாவாய். சங்கமமாகிச் செல்லுகின்ற உன்னழகைப் பிரமன்கண்டு உன்னிடத்திற் கொண்டிருந்த குரோதநீங்கி மகிழ்ச்சிகொண் டுன்னைக்காண ச சமுத்திரசங்கமஸ்தானத்தில் பிரசன்னமாவான். காஞ்சி க்ஷேத்திரத்துக்குக் கிழக்கெல்லையாயுள்ள சமுத்திர கட்ட சங்கமத்தினாலும், பர்த்தாவினுடைய தெரிசன விசேஷத்தினாலும் உனக்குச் சர்வதோஷமும் நிவர்த்தியாய்ப் பரிசுத்த தையடைவாய். பின்னர் பிரமன் உனக்கு அர்த்தாசனம (தன்னாசனத்திற்) பாதிகொடுத்துத் தழுவிக்கொள்ளுவனென்று அனுக்ரகஞ்செய்து சென்றனர்.

சரஸ்வதிதேவி அவராணையின் படியே க்ஷீரநதியோடு கலந்து அதிவேகமாய்ச் சென்று சமுத்திரசங்கம மானபொழுது பிரமன் மகிழ்ந்து தேவியையழைத்து அர்த்தாசனங் கொடுத்துக் கலைமகள் மகிழக் கலியாணஞ் செய்துகொண்டு 'ஹே, சரஸ்வதி! நீ அதிவேகமாய் நதிவடிவங்கொண்டுவந்த படியினால் இந்தநதி வேகவதியென்று வழங்கக்கடவது. இதில் ஸ்நானஞ் செய்கின்றவர்களுடைய பாவம் அதிவேகமாய்ச் செல்லக்கடவது. அவர்களுக்குப் புண்ணியம் அதுபோலும்வர்ரக்கடவது என்று வரமளித்து கலைமகளோடுசத்தியலோகமடைந்து சிருஷ்டித்தொழிலைச் செய்துவந்தனன்.

மஹிமை.

சிறந்த கங்கா தீரவாசியும் காசியகோத்ரஜனும் சாம வேதியுமான தௌமியநாதனென்னும் வேதப்பிராமணன்பாக்யவந்தனுயும வித்வானுயுமிருந்தும் பரதாரகமனனு யிருந்தனன். அப்பாவத்தினால் கிழத்தனம்வந்த காலத்தில் குஷ்ட முதலிய பலவியாதிகளினாற் பீடிக்கப் பட்டு மனநொந்து

இதற்கு விமோசனமு முண்டாகுமோ வென்று பெரியோர்களைப் பணிந்துகேட்டனன். அவர்கள் மனமிரங்கி, ஓ அந்தணனே! நீ வேக வதியில் ஸ்நானஞ் செய்தால் தீரு மென்றனர். அப்படியே அவ்வந்தணன் வேகவதியை யடைந்து மூன்றுகாலம் ஸ்நானஞ் செய்ய அவனைப் பற்றி யிருந்த வியாதி யெல்லாந் தீரப்பெற்று பரிசுத்த னாய்த் திடசரீரத்தோடு தனது தேசம்போய்ச் சேர்ந்து தனதான்யாதி சகல சம்பத்துடன் வாழ்ந் திருந்து அந்தியத்தில் விஷ்ணு பதமடைந்தனன்.

ஐந்தாவது அத்தியாயம் வேகவதி வரலாறு

முற்றிற்று.

ஸ்ரீ காமாக்ஷிதேவையுநம.

ஆறுவது அத்தியாயம்.

சிவ க்ஷேத்திர வரலாறு.

காஞ்சி க்ஷேத்திரத்தின்கண் வாயுதிக்கில் பராசக்தியானவள் மஹா ருத்திரமூர்த்தியாய்ப் பிரமன்காணும் வண்ணங் காட்சி கொடுத்தருளினாராதலால் அது சிவக்ஷேத்திரமெனவும், உருத்திரசாலை எனவும் பெயர்பெற்றது.

இதற்குப் பெயர் ஐந்து.

அவையாவன:—

1 உருத்திரசாலை 2 † உருத்திர கோடி 3 கயிலாயம் 4 ஏகாம்பரம் 5 மஹாஸ் மசானம் என்ப

---

† ருத்திரம் என்னும் பதத்துக்கு இலிங்கமெனப் பொருளாகலானும், இலிங்க மூர்த்தங்கோடி அவ்விடத்தி லுளவாகலானும் அப்பெயரெய்தியது.

இதன் எல்லை.

சுவேதப்பெருமாளுக்கு (50) அம்சம் தெற்கி
லுள்ள காயா ரோகணேஸ்வரராலயமே,—தெற்கெல்லை.
காயாரோக ணேஸ்வரராலயத்துக்கு (32) அம்சம மேற்கி
லுள்ள கன்னிகேஸ்வர ராலயமே,—மேற்கெல்லை.
கன்னிகேஸ்வர ராலயத்துக்கு (25) அம்சம் வடக்கி
லுள்ள் கயிலாசநாத ராலயமே,— வடக்கெல்லை
கயிலாய நாதருக்கு (25) அம்சம் கிழக்கி
லுள்ள சுவேதப்பெருமா ளாலயமே,— கிழக்கெல்லை.

இந்நான்கெல்லைக் குட்பட்ட பிரதேசமே உருத்திரசாலை எனப்படும் இவ்வெல்லையில் ஒரு சிவலிங்கார்ச்சனை செய்தால் கோடி லிங்கார்ச்சனை செய்த பலனுண்டாகும். அதுவுமன்றி அவ்வெல்லையில் ஒரு க்ஷணகாலமாவது அதில் அரையாவது வசிக்கப்பெற்றால் எல்லாப் பாவங்களும் ஒழிந்து போம்.

இவ்வெல்லைக்குள்,—

முன்சொன்ன காயாரோகணருக்கு (44) அம்சம் வடக்கி
லுள்ளவர். விகட சக்கர விநாயகர். (1)
விகட சக்கர விநாயகருக்கு (1) அம்சம் வடக்கி
லுள்ளவர். மாவடி வைகுஞ் சேவ்வேள். (1)

துர்க்கை ஆலயம்.—4.

மாவடி ஸ்கந்தபபருக்கு (1) அம்சம கிழக்கு திக்கில்
பிரளயபந்தினிஆலயம். (1)
பிரளய பந்தினிக்கு (10) அம்சம தெற்கு திக்கில்
சம்பத்கரீஸ்வரி ஆலயம். (2)
சம்பத்கரீஸ்வரிக்கு (10) அம்சம் மேற்கு திக்கில
ரேணுகாம்புஜ வல்லிஆலயம் (3)
ரேணுகாம்புஜ வல்லிக்கு (25) அம்சம தெற்கு திக்கில்
வீரவரேஸ்வரி ஆலயம். (4)

வரலாறு

(பிரளயபந்தினி) என்னுந்துர்க்கை கம்பாநதிப் பெருக்கைத் தேவியினது ஆஞ்ஞையினால் தடுத்துத் தனதுகபாலத்திலடக்கினவள்,-(* சம்பத்கரீஸ்வரி) என்னுந்துர்க்கை கஜாசுரனென்பவனைக் கொன்று ருஷிகளைக் காத்தவள்,— (ரேணுகாம்புஜ வல்லி) என்னுந் துர்க்கை சம்புக னென்னும் அந்தகப் பிராமணனுக்குக் கண்கொடுத்தவள்,— († வீரவரேஸ்வரி) என்னுந் துர்க்கை வீரபத்திர மூர்த்தியினுடைய கோபத்தைத தணிவித்தவள்.

சிவாலயம். 8.

முன்சொன்ன வீரவரேஸ்வரிக்கு(10) அம்சம் கிழக்கிலுள்ளவர். காயாரோகணேஸ்வரர். (1)

காயாரோக ணேஸ்வர ருக்கு (36) அம்சம் வடக்கிலுள்ளவர் சுரஹரீஸ்வரர். (2)

சுரகரீஸ்வர ருக்கு (10) அம்சம் நிருதியிலுள்ளவர். அநேக பத்தேஸ்வரர் (3)

அநேக பத்தேஸ்வர ருக்கு (1) அம்சம் வாயுவிலுள்ளவர். கைலாச நாதர். (4)

கைலாச நாதருக்கு (6) அம்சம் தெறகிலுள்ளவர். ‡ பச்சிமேஸ்வரர். (5)

பச்சி மேஸ்வரருக்கு (24) அம்சம் ஈசானத்திலுள்ளவர் § காசிவிஸ்வேஸ்வரர். (6)

விசுவேஸ்வர ருக்கு (3) அம்சம் வடக்கிலுள்ளவர் ஓணகாந் தீஸ்வரர். (7)

ஓணகாந் தீஸ்வரருக்கு (10) அம்சம் கிழக்கிலுள்ளவர். $ கச்சிமயா னேஸ்வரர். (8)

---

* அரசாத்தம்மை கோயிலென வழங்கும். † வீரகாளியம்மை கோயிலென வழங்கும். இது பிள்ளைபாளயத்திலுளது. ‡ திருமேற்றளிஎனவழங்கும் இதுவும் பிள்ளைபாளயத்திலுளது. § இவரிடம்சாவ் தீர்த்தக் கரையின் மேற்பக்கம். $ இவரிடம் ஏகாம்பரர் கோயிலில்

வரலாறு.

(காயா ரோகணேஸ்வரா) யயாதி ராஜனுக்குச் சரீரத்தோடு முத்தி கொடுத்தவர்,— (சுரஹரீஸ்வரா) தேவர்களுக்குவந்த மஹேஸ்வர சுரத்தைப் போக்கி யவர்,— (அநேக பதேஸ்வரர்)விருத்திராசுரனைக்கொல்ல இந்திரனுக்கு வச்சிராயுதங் கொடுத்தவர். முதற் கடவுளாகிய விநாயக மூர்த்தியினால் பூசிக்கப்பட்டவர்,—(கைலாசநாதர்) துண்டீரராஜனுக்குக் கைலாச பதவியைக் கொடுத்தவர்,—(திருமேற்றளிநாதர்) வாலகில்யர்களுக்கு அபயங் கொடுத்து ரக்ஷித்தவர்,— (விஸ்வேஸ்வரா) கங்காநதியின் பாவத்தைச் சர்வதீர்த்தத்தினாற் போக்கியவர்,— (ஓணகாந்தீஸ்வரர்) ஓணனென்பவனும் காந்த னென்பவனும்வழிபட, ஓணனென்பவனுக்கு வாளாயுதமும், காந்த னென்பவனுக்குச் சூலாயுதமும் கொடுத்தவர்,—(கச்சிமயானேஸ்வரர்) பண்டா சுரனைச்சங்கரிக்கு நிமித்தம் தமது சத்தியினால் உலகங்களையெல்லாஞ்சாம்பலாக்கினவர்.

விஷ்ணு ஆலயம். 3.

முன்சொன்ன கச்சி மயானேஷ்வரருக்கு நிருதி திக்கிலுள்ளது பாண்டவப்பெருமாள்சந்நதி (1)

பாண்டவப் பெருமாள் சந்திக்கு ஈசான திக்கிலுள்ளது

* சந்திரகிரீவப்பெருமாள்சந்நதி (2)

சந்திர கிரீவப் பெருமாளுக்கு ஈசான திக்கி லுள்ளது.

சுவேதப் பெருமாள் சந்நதி. (3)

வரலாறு.

(பாண்டவப் பெருமாள்) பாண்டவர் களுக்கு வெற்றியுண்டாகத் தூதுசென்றவர்,— (சந்திர கிரீவப் பெருமாள்) ஏகாம்பர நாதருடைய சடையிலுள்ள சந்திர காந்தியைத் தமது கண்டத்தில் தாங்கப் பெற்றவர்,— (சுவேதப் பெருமாள்) அந்தகார னென்னும் அசுரன் எங்கும் இருளை விளைவிக்க

* ஏகாம்பரநாதர் சந்நதி முதற்பிரகாரம் ஈசானத்தில்.

அவ்விருளைச் சந்திர வர்ணமாய்ப் பிரகாசிக்கின்ற தம்மொளியாற் போக்கினவர்.

முத்திரை 5.

முன்சொன்னசுவேதப்பெருமானுக்கு (1) அம்சம் நிருதியில்
கள்ளக் கம்பரிடம். (1)
கள்ளக் கம்பருக்கு (2) அம்சம் மேற்கில்
மார்க்கண்டேய ரிருக்குமிடம். (2)
மார்க்கண்டேய ரிருக்கு மிடத்துக்கு (2) அம்சம்வடக்கில்
ஏலவார்குழலியா ரிருக்குமிடம். (3)
ஏலவார்குழலியா ரிருக்கு மிடத்துக்கு (2) அம்சம் ஆக்னேயத்தில்
வெள்ளைக்கம்ப ரிருக்குமிடம் (4)
வெள்ளைக்கம்ப ரிருக்கு மிடத்துக்கு (2) அம்சம்கிழக்கில
வீரபைரவ ரிருக்குமிடம் (5)

வரலாறு

(கள்ளக்கம்பர்) ஏகாம்பரனுர் களளவடிவங்கொண்டு அன்பாக் கருளியபின் இலிங்க ரூபமானவர்,— (மார்க்கண்டேயர்) சிவாஞ்ஞையினுல் மார்க் கண்டேயரால் பூஜிக்கப்பட்டவர்,— (ஏலவார்குழலியார்) தேவசில்பியினுல் நிர்மிக்கபபட்டு ஏகாம்பர நாதரோடு சமாசனத்தில் சமமாய் வீற்றிருபபவர். இவ்வம்பிகை கங்கா தேவியினுடைய அம்சம்,— (வெள்ளக்கம்பர்) காமாக்ஷிதேவியார் பொருட்டுச் சிவனுருடைய நெற்றிக் கண்ணிற் றேன்றிய கங்கை பின்னர் லிங்க ரூபமாய்த் திரண்டமூர்த்தம்,—(வீரபைரவர்) ஏகாம்பரநாதருடைய கட்டளையினுல் கச்சிமயானத்தைக் காப்பவர்;

தீர்த்தம் 4.

முன் சொன்ன வீரபைரவருக்கு (1) அம்சம் வாயுவில்
சிவகங்கைதீர்த்தம். (1).
சிவகங்கை தீர்த்தத்துக்கு (5) அம்சம்ஆக்னேயத்தில்
மங்களதீர்த்தம். (2)
மங்கள தீர்த்தத்துக்கு (8) அம்சம் நிருதியில்
சுரஹரதீர்த்தம். (3)

சுரஹர தீர்த்தத்துக்கு. (9) அம்சம் வாயுவில
பாண்டவதீர்த்தம்.(4).

வரலாறு.

(சிவகங்கை தீர்த்தம்) பிரமாண்டத்தினின்றும் வெளிப்பட்டு வந்தது. சகலபாவங்களையும்போக்கடிப்பது,—(மங்கள தீர்த்தம்) அங்காரகனது அக்கினி ரூபத்தைப் போக்கியது,— (சுரஹரதீர்த்தம்) தேவர்கட்கு வந்த மஹேஸ்வர சுரத்தைப் போக்கியது,— (பாண்டவதீர்த்தம்) பாண்டவதூதப் பெருமானால் உண்டாக்கப் பட்டது.

தீர்த்தபலன்.

(சிவகங்கையில்) சோமவாரத்தில் ஸ்நானஞ்செய்வோருக்குக் கங்கா நதியில ஸ்நானஞ்செய்த பலனுண்டாமென்று உமாதேவியாராலும,—(மங்கள தீர்த்தத்தில்) மங்களவாரத்தில ஸ்நானஞ்செய்தால் சரஸ்வதிநதியில் ஸ்நானஞ்செய்த பலனுண்டாமென்று அங்காரகனாலும் (சுரஹரதீர்த்தத்தில்) எந்தவாரத்திலாயினும் ஸ்நானஞ்செய்தால் கபிலா நதியில ஸ்நானஞ்செய்த பலனுண்டாமென்று தேவர்களாலும் (பாண்டவதீர்த்தத்தில்) திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஸ்நானஞ்செய்தால் கிருஷ்ணாநதியில் ஸ்நானஞ்செய்த பலனுண்டாமென்று பாண்டவர்களாலும் வரங் கொடுக்கப்பட்டன.

ஆக சிவக்ஷேத்திரமாகிய இவ்வெல்லையில் விநாயகராலயம் (1) ஸ்கந்தராலயம் (1) துர்க்கைஆலயம் (4) சிவாலயம (8) விஷ்ணுவாலயம் (3) முத்திரை (5) தீர்த்தம (4)

இந்த ருத்திரசாலையில் இவையெல்லாம் ஏகாம்பரநாதருடைய ஆஞ்ஞையினால் எப்பொழுதுங் காணப்பட்டு வருகின்றன. இதில் வசிப்போர்க்குக் கைலாசவாசபலனுண்டாகுமாதலால் இது பூலோககைலாச மெனப் பெயர்பெற்றது.

மஹிமை.

கிருஷ்ணாதீரத்தில் ஏலாபுரத்தில் ருக்வேதியும் கௌதமகோத்ரஞ்ஞனுமான கௌசிகனென்னும்பிராமணன்சதி,

கர்மஹீனனாய்த் துராசார சம்பன்னனாய்ப் பூமியில் நிக்ஷேபங்களைக் காண்பதற்கு எங்கும் உலாவி மார்க்கங்களில் யாத்திரையாய்ச் செல்லுகின்ற லட்சணமுள்ள பாலர்களைத் தன்னிடத்திற் கழைத்துப்போய் அவர்களுக்கு வேண்டிய அன்னோதகங்களையும் திரவியங்களையுங்கொடுத்துப்பாதுகாத்து வந்து ஆறேழுமாதமாவது ஒருவருடமாவது கடந்தபின் நிக்ஷேபங் காணுமிடங்களிற் பலிகொடுத்து அத்திரவியங்களையெடுத்துக்கொள்வன். இவ்வாறு செய்துவருநாளில் காஞ்சிக்ஷேத்திரத்தி லிருந்து ஓரந்தணன் யாத்திரையாக மார்க்கத்தில் வரும்பொழுது அவனது தாகவேட்கையைக் கண்டுமனமிரக்கமுடையவனாய் நீர்மோர்கொடுத்தனன். சில நாள் கழிந்தபின்னர் அவன்மரணமடைய அவனை இயமன் பாசத்தாற்கட்டித்தனதுலகத்திற் கொண்டுபோயினன். சிவகணங்கள் அவனைமீட்டுக்கயிலாயத்திற்சேர்த்தனர். இதன் காரணமறியாது இயமன்கைலாயஞ்சென்று சிவபெருமானை வணங்கி இக்கொடுமையாளனிங்குவருவதற்குக் காரணமென்னையோவென்று வினவ, சிவபெருமானார் ஓ இயமனே! இவன் மகாபாதகனாயினும் ஒரு சிறுபுண்ணியத்தால் பல பெரிய பாவங்களைப்போக்கவல்ல ருத்திர சாலோயி னின்றும் வந்த ஓர்பிராமணனுக்குத் தாகந்தணிவித்ததனா லிங்குவரப் பெற்றனன் நீ செல்லக்கடவாயென்று விடைகொடுத்தனர்.

ஆறுவது அத்தியாயம் சிவக்ஷேத்திர வரலாறு.

முற்றிற்று.

உ

ஸ்ரீ திரிபுரசுந்தர்யைநம:

ஏழாவது அத்தியாயம்.

ஆம்பிர விருக்ஷ பிரபாவம்.

சைவமுனிவர்களாற் சூழப்பட்ட புண்ணியகரமான அநேக விருக்ஷங்கள்நெருங்கிய ஆரண்யத்தில்உருத்திரகோடி

சாலையில் பாண்டவதீர்த்தத்திற்கு(கச)அம்சம் உத்தரத்தில் வேதம் மா விருக்ஷரூபமாய் வளர்ந்தோங்கி நிற்கின்றது. அது சிவபீஜத்தினின்றுந் தோன்றியதாயும், ஸ்ரீகாமாக்ஷிதேவியினால் ஏகாம்பரதருவென்கிற திவ்வியநாமத்தால் துதிக்கப்பட்டதாயும், வேதசாகைகளே கிளைகளாகவுள்ள புண்ணிய சொரூபமாயும், பதினான்கு வித்தைகளே மல்லிகைக்கொடிகளாகப் படர்ந்திருப்பதாயும், சலப்பிரளயத்தில் மிதந்து வந்த மார்க்கண்டேயமுனிவரைக் காத்ததாயும், புராணாதிகளால் புகழ்ந்துரைக்கப்பட்ட சிறப்புடையதாயும் விளங்குவது.

மார்க்கண்டேயமுனிவரைக்காத்தவரலாறு.

ஓர்கால் கைலாசத்தில் அதிவிசித்திரமா யலங்கரித்திருந்த அந்தப்புரத்தில் போகமூர்த்தியாய் உமாதேவியாரோடு அர்த்தாசனத்தில் வீற்றிருக்கும்பொழுது சிவபெருமானுக்குமிகவும் பிரியரூபிணிகளாய் (கூச)கலைகளினின்றுந் தோன்றிய சத்திகோடிகள் அகங்காரங் கொண்டவர்களாய்ச் சிவபெருமானைச் சமீபித்து, எங்கள் நாயகரே ! நீர் பார்வதிக்கு அர்த்தாசனங் கொடுத்திருப்பது போல எங்கட்குங் கொடுக்கவேண்டு மென்று பிரார்த்தித்தனர்.

சிவபெருமான் அவர்களைப்பார்த்து இவ்விடத்திலுள்ள புருஷரெல்லாம் என்னுடைய அம்சத்திற் றோன்றினவர். ஸ்திரீகளெல்லாம் கவுரியம்சத்திற்றோன்றினவர். ஆகையால் புருஷர்களுக்கு யான் தலைவன், பெண்களுக்குக் கவுரிதலைவி. இம்முறையினால் கவுரியை நோக்க நீங்களெல்லாந் தாழ்ந்தவர்கள், தாழ்ந்தவர்களாகிய வுங்களுக்கு யான் சமாசனம் கொடுக்கத்தக்கதன்று, என்னோடு சமமாக சமாசனத்திலிருக்கத்தக்கவள பார்வதி யொருத்தியே என்றனர். அவ்வார்த்தையைக்கேட்ட சத்திகோடிகள் சிவபெருமானைப் பார்த்து என்னகூறினீர்? இது பக்ஷபாதமல்லவா! உம்மைப்போலும் இவ்வளவு முழுமோசமாகப் பேசினவரை யாங்கள் எங்குங்கண்டதில்லை. ஆ ? ஆ ? யாங்களா கவுரியம்சத்திற் றோன்

றினவர்கள் இந்தக் கவுரியல்லவா எங்க ளம்சத்திற் றோன்றி னவள்? இதனையறியார்போன்று எங்களுக்குச்சமமான ஆசனங் கொடுக்கமாட்டேனென்றது அடாது, எங்கட்கே கொடுக்கவேண்டும். அன்றியும் இப்பார்வதிக்குப் பெண்களுக்கிருக்க வேண்டிய சாகசகுணமுதலியன விருக்கின்றனவா? டன்மதனுடைய லீலையிற் சிறந்தவளா? நாயகன் குறிப்பு முதலியவற்றை யறியும் நுண்ணறிவுடையவளா? கல்வியறிவில்மிகுந்தவளா? உருவமுதலாக எண்ணப்பட்ட ஆறுகுணங்களால் நிறைந்தவளா? அந்தோ! ஒன்றுமில்லை, இருக்குமாயின் எங்கட்கு அந்தமான்மியத்தைத் தெரிவியுமென்று சத்திகோடிகள் கூறிய வாய்மொழிகளைக்கேட்டு அவர்க ளகங்கார மடங்குமாறு ஓர்விளையாட்டாக அவர்க ளணிந்திருந்த தவஸ்திரங்கள் நழுவிப்போகும்படிசெய்தனர். உடனே அச்சத்திகளெல்லாம நிர்வாணிக ளாய்ப்போக நாணமுற்றுப பூமியில்தண்டாகாரமாகப பணிந்தார்கள். அதனைப் பார்வதியார்கண்டு அச்சத்திகோடிகள்எழுந்திருந்து கழன்றுபோன ஆடைகளை எடுத்து உடுக்குமளவும் தமதுநாயகருக்கு ஆந்நிருவாணகோலந் தோன்றுதிருக்க அவருடையநேத்திரங்களை ஒருமுகூர்த்த காலம் மூடியிருந்தனர். அபபொழுது சூரிய சந்திராக்கினிக ளுடைய பிரகாசம்போய் எங்கும் இருண்மயமாய் எல்லாவுயிர்களுஞ் செயலற்று இரு ளுருவாகவே யிருந்தன. அக்காலத்தில் சலபபிரளயமும் உண்டாயிற்று. அநதக் கோரமாகிய வெள்ளத்தில் அழிவில்லாதவ ராகிய மார்க்கண்டேயமுனிவர் எல்லாவுயிர்களும் முழுகுவதைப் பார்த் ததிசயித்து இனி யாம் என்செய்யக்கடவோமென்று அந்தப் பிரளயத்தில் நீந்திவருகின்றபொழுது, ஒருபற்றுமில்லாது இவ்வெள்ளத்தில் நீந்திவருகின்ற நமக்கு ஓ ராதாரம் வேண்டுமென்று இச்சைகொண்டு சதாசிவ ஈசான ருத்திர ஹரிப் பிரஹ்மாதி காரணரும், தேவியினுடைய திவ்யதிருமேனியில் ஆசையுள்ளவரும், நாசரகிதரும், மஹாத் திரிபுரசுந்தரிக்கு நாயகரும், நிர்க்குணருமான சாம்பஸ்வரஸ்ரத்

தியானஞ்செய்து, ஓ கஜமேஸனே ! எனக்கு ஆகாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று பிரார்த் தித்துச் சிரமத்துடன் வரும்பொழுது, உருத்திரசாலையில்சிதரூபராயும் யாவராலுங் காணக்கூடாத தேஜோ ரூபராயும் இருக்கின்ற ஏகாம்பரநாதரானவர்கருணையுடையவராய் அவரைரக்ஷிக்கும்பொருட்டுத் தம்முடைய சொரூபமாகவும் நான்கு வேதங்களையே நான்கு கிளைகளாகவு முடைய மாவிருக்ஷத்தை ஓர் க்ஷணத்துக்குள் தளிர் பூங் கனிகளோடு பிரளய சலத்துக்குமேல் வளர்ந்தோங்கச் செய்தனர்

அது கண்டமுநிவர் இது நம்பெருமான் கருணையேயாமென்று அம் மா மரததின்மேலேறிய பிரளய சலத்தைப் பார்த் தாசசரிய மடைநது தனக் காதரவாய் நின்ற அவ்விருக்ஷத்தைச் சிவசொரூப மாகப் பாவித்து இது நம்மைப் பாதுகாக்க வந்த கருணைவடிவென்று நிச்சயித்து அங்கிருநத வண்ணமே அதன் மூலமளவும் சோதி சொரூபமாகக காணப்படுந் துவாரத்தைக் கண்டு அவ்வழியே நுழைந்து அங்கு ஒளிப்பிழம்பாய் விளங்கும் பெரிய நகரத்தைக் கண்டு இதுவென்ன ஆச்சரியம்! இந்த லயகாலத்திலும் யாதொரு நாசமில்லாமல சலமத்தியில் சோதி சொரூபமாய் விளங்குகின்றதே என்று அதனடியி லிறங்கவும், அவ்விடத்தில் சிவகுமாரரான ஷண்முகக் கடவுள் அம்மரத்திற் பழுத்திருக்கும் கனிகளைப் புசித்துக்கொண் டிருப்பதைப் பார்த்து மிகவும் ஆச்சரியங்கொண்டு வணங்கி, ஓ ஷண்முகக்கடவுளே ! இந்த க்ஷேத்திரத்தின் பெயரென்னே ? இந்த விருக்ஷம் எத்தன்மைத்து? தேவரீர் இப்பழங்களைப் புசித்துக்கொண்டு இங்குவசிக்குங் காரணமென்னே ? யாருடைய மகிமையினால் இநதஜலப்பிரளயத்திலும் இந்நகரமழியாதிருக்கின்றது ? இவையாவும் என்பால்கருணைகூர்நது அருளிச்செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க, ஆறுமுகக்கடவுள் ஓ மார்க்கண்டேயனே ! இது காஞ்சிக்ஷேத்திரமென்று சொல்லப்படும். இந்த க்ஷேத்திரத்தைப் பிரளயங்க ளுண்டாகுந்தோறும் மஹாதேவி தனது தேஜோன் மயமாகியபிரகாசத்

தினால் அழிவுறாவண்ணம் காப்பாற்றி வருகின்றா னாதலால் இது பிரளயஜித்தெனப் பெயர்பெற்றது. இந்த விருக்ஷம் சாக்ஷாத்சங்கரருடைய சொரூபமாயுள்ளது; மஹாதிரிபுரசுந்தரிக்கு நாயகராகியகாமேஸ்வரரே இந்த விருக்ஷபீஜமாயுள்ளவர். அதனாற்றான் இங்கிருக்கும் எனதுகடவுளுக்குஏகாம்பரரெனத் திருநாமம். அவருடைய கருணை உன்னிடத்திலிருந்தபடி யினாற்றான் இந்த வெள்ளத்தில் அந்த ஏகாம்பரம் உனக்கு ஆதரவாயிற்று. இந்த விருக்ஷத்தின் கனியை யாரொருவர் பக்தியாகப் புசிக்கின்றார்களோ அவர்கள் வேதவித்யா குருவாகின்றனர். ஆகையால், நான் இப்பழத்தை நாடோறும் புசித்து வருகின்றேனென்றருள்செய்ய, மார்கண்டேயர் நமஸ்காரஞ்செய்து அம்மரத்தினடியில் தாமிருந்து அதன் கனியையுண்டு இந்தக் கனியை எவனொருவன் புசிக்கின்றானோ அவன் கோடி லிங்கார்ச்சனைப்பலனை யடைவானென்று வரங்கொடுத்தது வாழ்ந்திருந்தனர்.

மஹிமை.

துங்கபத்திராதீரத்தில் சிருங்கிசைலத்தில் வசிக்கின்றகிரௌஞ்சனென்னும் பிராமணன நாடோறும் சிவபக்தசிரோன்மணிகளாகிய பிராமணோத்தமர் பூசிக்கும் சுவர்ணலிங்கங்களை யபகரித்து அதனை விற்றுச் சீவனஞ் செய்துவந்தனன். அப்பாவத்தால் அவனுக்குப் பதினாறுபிள்ளைகள் அலிகளாய்ப்பிறந்தன. அவனப்பிள்ளைகளைப்பார்த்துமிகவுந்துக்கித்து அவ்வலிரூபத்தை நிவர்த்திக்கப் புண்ய க்ஷேத்திரங்கடோறுஞ் சென்று தெரிசித்துக்கொண்டு வருங்கால், இந்த ருத்திர சாலையை யடைந்து மா விருக்ஷத்தைப் பார்த்து அதனடியில் ஒரு க்ஷணகாலமிருந்து தன்னிளைப்பை மாற்றிக்கொண்டு தன்னகரமடைந்தனன். மாவடியில் வாசஞ்செய்த புண்ணியவிசேஷத்தால் அப்பிள்ளைகள் புருஷரூபமடைந்தனர். அதனைப்பார்த்து இனி நம்முடைய குலம்விருத்தியடையும் இவ்வாறு விருத்தியடையச் செய்தது ருத்ரசாலையென் நிச்சயித்து ஆனந்தபரவசனாய் இளைப்பாறுவதற்குத் தங்கியிருந்த புண்ணியமே இவ்வளவு பெரும்பேற்

றைத் தருமாயின் அந்தக்ஷேத்திரத்தில் எப்பொழுதும் வசி ப்போமாயின் நமக்குவரும்பலனை என்னவென்று மதிப்போ மென்று புளகாங்கிதங்கொண்டு அக்கணமே புறப்பட்டு கா ஞ்சிநகரத்திலுள்ள ருத்திரசாலையையடைந்து அவ்விடத்தில் நாடோறும் செய்யும்படி விதித்திருக்கும் ஒழுக்கங்களிற் றவ ருது நடந்து சிவ பூஜையிற் சிறந்தவனாய் வாழ்ந்திருந்து தே காந்தத்தில் சிவலோகமடைந்தனன்.

ஏழாவது அத்தியாயம் ஆம்பிரவிருக்ஷ பிரபாவம்.

முற்றிற்று.

உ

காமாக்ஷிதேவ்யைநம:

எட்டாவது அத்தியாயம்.

ரசாலேச பிரபாவம்.

வேதசொரூபமாகிய ஆமபிரவிருக்ஷத்திற்குக் கீழ்பால் அவ்விருக்ஷ மூலத்தில் சாக்ஷாத் சங்கரர் கதலி குசும (வா ழைப்பூபு)போல் ஒரு அஸ்தப்பிரமாணஞ்சோதிசொரூபரா யஉமாலிங்கனத்தினால் குசகங்சண சேர்பிதராய்ப் பிரஹ்ம விஷ்ணு ருததிர மஹேஸ்வரராகியசதுர்மூர்த்திகளுக்கு மத யராயுள்ள சதா சிவானுக்கிரக மூர்த்தியாய் அகண்ட சச்சி தானநத தேஜோமயராய் மான்மழு வரதாபய அஸ்தங்களா ற் பிரகாசிக்கின்றவராய் தவள மேனியராய் நித்ய கல்யாண சுநதரராய் வியாக்ர சர்மதரராய் கஜசர்மோத் தரீயராய்ப் பஸ்மோததூளித விக்ரஹராய் திரிநேத்திரராய்சந்திரசேகர ராய் சர்ப்பங்களாலும் கங்கையாலும் பிரகாசிக்கின்ற சடா மகுடதரராய்ச் சவ்யதக்ஷணங்களில் உமா தேவியுங் கங்கா தேவியும் நின்று வீசப்பட்ட சாமரைகளை யுடையவராய் ருத்திர கோடீஸ் வரராய் ஏகாம்பரமூலத்திலுள்ளவராய் ஸ்ரீகாமாக்ஷி தேவியார் துர்திக்க மகாப் பிரளயத்தைப் போக்கி

அவர் வேண்டியாங்கு பாணிக்கிரகணஞ் செய்து கொண்டவராய் நித்தியகலியாண சுந்தரராய் விளங்குகின்றார்.

உமாதேவியார் முன்சத்திகோடிக ளுடையமானத்தைப் பாதுகாத்தற்பொருட்டு சிவபெருமானுடைய நேத்திரங்களைப் புதைத்த ஒருமுகூர்த்த காலத்துக்குள் பிரளயகோரமாய்க் காணப்படும் சர்வசங்கார காலத்தில் உலகமெல்லாம் அழிவுறுதல்போ லழிந்து சிருட்டியாதிகள் மாறி உயிர்களியற்ற வேண்டிய தருமங்க ளெல்லா மொழிந்துபோன அககாரணத்தால் பாவம் மேலிட்டு அப்பாவங்க ளெல்லாங் கருமைநிறங்கொண்டு தேவியாரது நித்தியசுந்தரமாகிய தேஜோரூபத்தைக் கருநிறமாக்கியது. அச்சமயத்தில் தேவியார இறைவன் கண்ணைப பொத்தியிருந்த கைகளை நீக்கித்தமது திருமேனி மாறுபட்டிருத்தலைப பார்த்து நடுக்கமுற் றதிசயித்து மனவருத்தமுற்று இதன்காரணம்யாதோவென்று சிவபெருமானைப பலமுறை பணிந்து ஹே! தேவதேவா!! மஹாதேவா! கருணாகரா! சங்கரா! சொர்ணம்போற்பிரகாசிக்கும் என்மேனி பாவரூபமான கருநிறமடைந்து பார்ப்பதற்குச் சகியாத கோரமாகக் காணப்படுங்காரணம் என்னையோவென்று வினவினர் சங்கரர் ஓ தேவியே! இதுகருமைநிறமன்று நீ என்னுடைய கண்களை மூடியதனால் வந்த உயிர்களின் பாவத் திரட்சியாமென்றுகூறத் தேவிகேட்டு உளம் நடுங்கி, ஹே! தேவ தேவனே!! ஜகந்நாதனே! சரணாகத வத்ஸலனே! கருணாநிதியே! யான்செய்தசர்வாப ராதங் களையும் கிருபையினால் க்ஷமித்தல் வேண்டும் என்று துதித்து, இதற்கு யான் செய்து கொள்ளத்தக்க பரிகாரமென்னையென்று கண்ணீரரும்பிமீளவுங்கேட்ப, சங்கரர் நீ விரைவாய்ப் பதரிகாச்சிரமத் துக்குச் சென்று அங்கு ஒரு குழந்தை வடிவங் கொண்டிருப்பாயாக, அவ்விடத்தில் புத்திரப்பேறு வேண்டிய காத்தியாயன முனிவன் வருவான், அவ னுன்னைப் பார்த்தவுடன் புத்திர காமந்தீர்ந்து மகிழ்ச்சியடைந்து ஞானதிருஷ்டியினா லுன்சொரூபத்தையு மறிந்து தன் னாச்சிரமத்துக்

குக் கொண்டுபோய் (8) வருடம் உன்னைச் சீராட்டியும் பூஜித்தும் வருவான். பின்னர் என் ஞாக்ஞையினால் *.யோகதண்டம், ஜபமாலை, தீபஸ்தம்பம், இரண்டுகுடம், விசிறி, இரண்டு சாமரை, வித்யாதாரம், வியாக்ராசனம், புத்தகம், வறுத்தபயறு, கங்கைமணல், கங்காதீர்த்தம், குடை இவைகளைத்தருவான். அவைகளை நீபெற்றுக்கொண்டு உடனே மழையின்றி வறுமையடைந்திருக்குங் காசிக்குச்சென்று அன்னதானத்தா லவ்வறுமையைப்போக்கி அன்னபூரணியென்று பெயர்பெற்று யாவரும் புகழப் பன்னிரண்டுவருடம அவ்விடததிலிருந்து எத்திசையினுமிக்க தென்றிசையை நோககிச செல்லக்கடவாய் அப்படிச செல்லும்பொழுதுபுலித்தோல் சோமவிருத்தமாயும், குடம் ஆதாரபீடமாகிய அதன் சூததிரமாயும், மணல் இலிங்கரூபமாயும், ருத்திராக்ஷமாலிகை பில்வமாலையாயும், குடை நாகாபரணமாயும், யோகதண்டம் திரிசூலமாயும், சாமரைகள் இரண்டுபெண்களாயும், விசிறி கிளியாயும், குடம் குடதீபமாயும, புத்தகம காமதேனுவாயும், வித்யாதாரம் ஊசியாயும், வறுத்தபயறு முளையோடுகூடினதாயும், கங்கை பாலாயும் † எந்தவிடததில் மாறுகின்றனவோ ‡அந்தவிடத்தைக் காஞ்சி க்ஷேத்திரமென் றறிவாயாக

* யோகதண்டம்சாக்ஷமாலாம் தீபாதாரம் கடதவயம்,வ்யஜனம் சாமரந்த்வம் வித்யாதாரஞ்ச புஸ்தகம்,— வியாக்ராசனம் தப்த முத்கம் கஙகா ஸைகத மேவச, கஙகாதீர்த்தஞ்ச சதரஞ்ச க்ரிஹீத்வாச மனோன்மனி,— இவற்றால்யோகதண்ட முதலியன தந்தமை காணக.

† யத்ரவியாக்ராசனம் சோம வ்ருத்தம் ததஸூதரகம் கடம், சைகதம் லிஙகரூபஞ்ச ஜபாக்ஷா பில்வமாலிகா,— நாகபூஷண கம் சத்ரம் த்ரிசூலம் யோகதண்டகம்; சாமரம் யுவதீயுக்மம் வ்யஜனம் சுகரூபகம்,— கடதீபத்வயம் வன்னி ரூபங்கீதனுஸ்ச புஸ்தகம், வித்யாதாரம் சூசிகாஞ்ச தப்தமுத்கஞ்ச சாஙகரம், கஙகாதீர்த்தம் பயோரூபம், பவேத் யத்ர மனோன்மனி, இவற்றால் வியாக்ராசன முதலியன மாறினமைகாண்க.

‡ தத்காஞ்சீநகரம்வித்தி தத்ரசோம சவ்ருக்ததகே,— ருத்ரே

அவிடத்தில் சோமசூத்திரத்துடன்கூடிய அவ்விலிங்கத்தை நாடோறும் க்ஷீரத்தாலபிஷேகித்து நாகாபரணத்தில் எழுந்தருளச்செய்து பில்வமாலையைச்சாத்தி முளைத்த பயறை நிவேதனஞ்செய்து தியானித்து, *பக்கங்களில் இரண்டுஸ்திரீகளைக் காவலாகவைத்து கோக்ஷீரத்தைப் பானஞ்செய்து கிளியைக் கையிற்பிடித்துக்கொண்டு பஞ்சாக்னியை வளர்த்தி அதன்மத்தியில் ஊசியை நாட்டி அதன் முனையில் நின்று என்னைத்தியானித்துத் தவஞ்செய்து வருவாயாக. அப்பொழுது நான் உனக்குப் பிரத்யக்ஷமாகிக் கலியாணஞ்செய்து கொள்ளுகிறேன். அக்கணமே நீ கருமை நிறம் நீங்கப்பெற்று சொர்ணரூபத்தை யடைவாயென்று கூறிய வாய்மொழிகளைக்கேட்டு பிரதக்ஷிண நமஸ்காரங்கள்செய்து விடைபெற்று அவராணையின்படியே பதரிகாச்சிரமத்திற்சென்று காத்தியாயன முனிவரை மகிழச்செய்து அவரால் யோகதண்ட முதலியவை பெற்றுக் காசியையடைந்து அன்னதானஞ் செய்து காசிராஜனுக்கு மோக்ஷமளித்து ஸ்ரீ காஞ்சியை யடையவேண்டுமென்றெண்ணி வரும்பொழுது, யோகதண்ட முதலியவை மாறினமைகண்டு இதுதான் ஸ்ரீ காஞ்சிக்ஷேத்திரமென்று தெளிந்து ஒவ்வொரு மாவிருக்ஷத்தினடியிலும் பெருமானைத் தேடித்தேடிக் காணாமல், முடிவில் ஒரு மாவிருக்ஷத்தினடியில் கைலாசத்தில் தமது நாயகரால் சொல்லப்பட்ட வண்ணமே இருக்கக்கண்டு ஆனந்த பரவசத்தோடு ஆச்சரியமடைந்து பூசித்துத் தவஞ்செய்து வந்தனர். அநேக நாட்சென்றும் அவர் அருள் புரியாமையால் உக்கிரமான தவத்தைச் செய்துவரும் நாளில் ஒருநாள் திரந்த

தத்ஸைகதம் லிங்கம் பில்வமாலா சமன்விதம், நாகபூஷண சம்யுக்தம் நித்யம் க்ஷீராபிஷேசிதம்.— முத்கான் குரஞ்ச நைவேத்தியம் கிருத்வா தியாத்வாது சாம்பவி,— இதனால் பூஜிக்கவேண்டிய முறைமை கூறினமைகாண்க.

*பார்ஸ்வயோர் வனிதே ஸ்தாப்ய கோக்ஷீரைஸ் ஸமயாசனே:— கரேத்ருத்வா சுகஸ்ரேஷ்டம் பஞ்சாக்னௌ சூசிகோபரி, ஸ்தித்வா மாம்த்யாயதீ பக்தயா, தப குருசதுஸ்சரம்,—இவற்றால் தவஞ்செய்யு முறைமை கூறினமைகாண்க.

யாத்திரையாய் வருகின்ற நாரதமுனிவர் அவ்விடம் வந்த பொழுது நைஷ்டிக தவத்தோடுங் கூடியிருக்கின்ற கௌரியைப்பார்த்து, அவரைத் தவஞ்செய்யும் காரணங்கேட்டு மிகவும் அன்புடையவராய், ஹே அம்பிகே! உனக்குக் காமேஸ்வரராகிய பெருமானார் சீக்கிரத்தில் பிரத்தியக்ஷமாகும் வண்ணம் ஓர் மந்திரத்தை யுபதேசிக்கின்றேனென்று பஞ்சபாணமந்திரத்தை யுபதேசித்து விடைபெற்றுத் தென்திசையைநோக்கிச் சென்றனர்.

அதன்பின்னர், அம்பிகை அம்மந்திரத்தைத் தம்முடைய ஜன்மநக்ஷத்திரமாகிய பூரநக்ஷத்திரந்தொடங்கி ஆறுமாதகாலம்வரையில் விடாது ஜபித்தது தவஞ்செய்துவர, அப்பஞ்சபாணமந்திரோச்சாரணையினாலுண்டாகிய அக்கினி கைலாயத்திற் பரவி வீசிற்று. அப்பொழுது சிவபெருமானார் இவ்வக்கினிஜுவாலை தேவியினாற் செய்யப்பட்ட காமமந்திரத்தினாலுண்டாகிய அக்கினியென்றும், இது வொருவராலுந் தடுக்கமுடியாதென்றும், ஆலோசித்து அவரவர்வேண்டியாங் கருணைபுரியுங் காமாரியாகிய சிவபெருமானார் அம்மையார் வேண்டியவாறே பஞ்சபாண மந்திரங்கட் குட்பட்டுக் காமமேலிட்டவர் போன்று யோகினி கணங்களோடு கூடி லீலா விநோதம் புரிந்தும் அடங்கப் பெறாதவராய்ச் சற்றே திருவுளத்துட் பரிபவமுற்றுத் தமது திருமுடியில் வசிக்குங் கங்கையைப் பெருக்கி அவ்வெள்ளத்தில் மூழ்கிச் சிறிது சுகமுற்று மீளவும் அக் கங்கையைப்பார்த்து, உனது உருவமாகிய ஜலத்தில் மூழ்கியும் எனக்குண்டாகிய காமாக்கினி சிறிதேனுந் தணியவில்லையாகலான் நீபார்வதிதவமபுரியுமிடத்திற்கு மஹாபிரளயரூபிணியாய்ச் சென்று அவளது மந்திரஜபத்தைத் தடுப்பாயென்ன, உடனே கங்கையானவள் அப்பெருமானுடைய ரோமங்களிலிருக்கும் மூன்றரைக்கோடி தீர்த்தங்களையும் ஆகர்ஷித்துக்கொண்டு அத்தீர்த்தங்களுடன் கலந்து வியாபகராய்வரும் சிவபெருமானாரை இருதய கமலத்திருத்தித் தியானஞ்செய்து மிகவும் சீக்கிர

சொரூபிணியாய் அதிவேகமாய்ப் பேரலைகளோடு நந்திசைலமென்கிற மலையையடைந்து அங்கிருந்து ஏகமுகமாய் மஹாதேவி தவம்புரியுமிடத்தை நோக்கிவந்தனள். அதனை உமாதேவியார் பார்த்துக் *கம்பம் கம்பமென நடுக்கமுற்று அப்பிரளயத்தைத் தடுக்க வெண்ணித் தமது தோழியருள் ஒரு சக்தியைப்பார்த்து, ஹேதோழி! இவ்வெள்ளத்தைப் பார்த்தனையா? இதனைப் பார்க்கும் பொழுதே எனக்கதிக பயங்கரமாக விருக்கின்றது. இதனை நீ பந்தனைசெய்வாயென்றேவ, அந்தக்காளி அவ்வெள்ளத்துக் கெதிரேநின்று தன்கையிலிருந்த விஸ்வபக்ஷணமென்னுங்கபாலத்தில் அப்பெருவெள்ளத்தைவெளியேபோகவிடாமல் அந்தக்ஷணமே உள்ளடக்கினள்.

பின்னர், அம்பிகை தனக்குவந்த விக்கினத்தைப் போக்கிய அத் தோழியினிடத்தில்அதிகப்பிரீதியுடையவராய் நீ (மஹாபிரளய பந்தனி) என்று யாவராலும் புகழப்படுவாயென்று அருள்செய்தனர். பின்னர் காமேஸர் கபாலத்திலடங்கியிருந்த வெள்ளத்தை ஆயிரமுகத்தோடு மஹாப்ரளயமாய் வெளியே வரச்செய்தனர். உமாதேவியார் கபாலத்திலடங்கியிருந்த வெள்ளம் பெருகிவருவதைக்கண்டு இது பிரளயபந்தனியினால் தடுக்கமுடியாதென்று பயந்து தனது சகோதரராகிய விஷ்ணுமூர்த்தியை நினைக்க, அவர் உமாதேவியார்க் குண்டாகிய பயத்தைப் போக்கும் பொருட்டு பூமியிற்பாதங்களும் ஆகாயத்தில்முடியுமாகவிருக்கும்பேருருக்கொண்டு தனதுகண்டத்தில் சந்திரகிரணம் விளங்க, அவ்வெள்ளத்தைத் தடுப்பார்போன்றுநின்றனர். அவரைக் கண்ட உமாதேவியார் தமது நாயகராகிய சந்திரசேகரரென நிச்சயித்து நடுக்கமுற்றபொழுது, சந்திரகண்ட விஷ்ணுமூர்த்தி கௌரியைப்பார்த்து, யான் சந்திரசேகரனன்று, அவரருளாற் சந்திரகலை கண்டத்தில் வீசப்பெற்று சந்திர கண்டனென்று இங்குவாழ்கின்ற உனது தமயனென்று தன்

* பயம் பயம் என்று.

னைத் தெரிவித்து ஓ சங்கரி! இந்தவெள்ளம் வெள்ளமன்று இதுசாக்ஷாத் சங்கரருடையசொரூபம். அவர் உன்னைச் சோதிக்கும்பொருட்டு இவ்வாறுவந்தனர் ஆகையால் நீ பக்தியுடன் அவரையே துணையெனநம்பி உன்னால் பூஜிக்கப்பட்டு வரும் இந்தச் சைகதலிங்கமூர்த்தியைச் சரணமடைந்து ஆலிங்கனஞ்செய்து கொள்வையேயாயின் அக்கணமே கங்காதரராகிய சங்கரர் பிரசன்னராய்க் கருணைகூர்ந்து மகிழ்ந்து, பிரளயத்தைமாற்றிக் கலியாணசுந்தரராய் உன்னை விவாகஞ் செய்து கொள்ளுவர். இதுநிச்சயமென்று கூறி ஏகாம்பரநாதருடைய எதிரில் முன்போல் தானிருக்குமிடத்தில் சந்திரகண்டராய் நின்றனர்.

அந்தவிஷ்ணுமூர்த்தி சென்றவுடன் வெள்ளம் பெருக்கெடுத்துவரத் தலைப்பட்டது அதைக்கண்டதேவியார் இவ்வெள்ளம் எமது பெருமான்மேல் வருதற் கையமென்னையா இனியான் என்செய்வேனென்று இலிங்கமூர்த்தியைப் பார்த்து எம்பெருமானே! அன்பர்க்கெளியானே! அடியாரிடர்களையும் அண்ணலே! சிவனே! சிவனே!! எனக்கு நீ பேகதியென்று திண்ணிய அன்புடன் தேகபரவசராய்த் தமது இருகரங்களாலும் மார்பிறுக ஆலிங்கனஞ்செய்து தழுவினர். எம்பெருமானும் பிராட்டியாரது முலைத்தழும்பும் வளைத்தழும்புந் தமது திருமேனியிலழுந்தப்பெறவே அதுகாறும் அடங்கப்பெறாத பேரவா அடங்கப்பெற்று காமேசராய் அப்பிராட்டியார் தமது அர்த்தாசனத்திலிருக்க வீற்றிருந்தனர். அப்பொழுது உமாதேவியாரும் தாமடைந்திருந்த காளிம வடிவநீங்கிக் கவுரநிறம்பெற்றமையால் புதிய கலியாணத்தை விரும்பினர். சிவகணங்களும் ஏனையவிருடிகளும் அம்மையப்பருடைய பேரழகைக்கண்டு கலியாணகோலத்தைக் காணப் பேராசைகொண்டனர்: இவர்கள் குறிப்பறிந்த பெருமான் விஷ்ணுமூர்த்தியை நோக்கி நீ எங்களிருவருக்குங் கலியாணமகோற்சவம் நடத்தக்கடவாயாக. நமது கவுரியும் கலியாணகோலத்தில் விருப்புடையவளாயிருக்கின்றாள், முன்னர் அகஸ்திய முனிவருக்கும் இவ்விடத்தில் வரு

டந்தோறுங் கலியாண மஹோற்சவந்தெரிசனந் தருகின்றே மென்று வரங்கொடுத் திருக்கின்றோம். ஆகையால் கலியாணம் நடத்துவதற்கு வேண்டிய பிரயத்தினங்களைச் செய்வாயாகவென்று கட்டளையிட்டனர்.

விஷ்ணுமூர்த்தி அக்கட்டளையை ஏற்றுப பிரமனுதிதேவர்களைப் பார்த்து ஓதேவர்களே! இந்தக் கலியாணத்தை முடிக்கவேண்டிய கடமைப் பாடுடையவர் நீங்களேயன்றி யான் எஃது செய்வேனென்று யாவர்க்கும் பிரியமான பலவார்த்தைகள் சொல்லி நீங்கள் யாவரும் நமமுடைய உலகங்களிற சென்று ஆடையாபரண கந்த மாலை முதலியன யாவும் அதிசீக்கிரமாகக் கொண்டுவந்து சேர்க்கவேண்டுமென்று சொல்ல யாவருங் கைகொட்டிக் கூததாடி அவரவருந் தங்கள் தங்கள் பதங்களுக்குச் சென்று எல்லாத் திரவியங்களையுங் கொண்டுவந்து நாடுநகரமுதலியனவெல்லாம் அலங்கரித்துப் பெருமானுக்கும் பெருமாட்டிக்குங் கலியாண மஹோற்சவமென்று எங்கணும்பேரிகைமுழக்கி துவஜா ரோகணமுதலியன வெல்லாம் வேதாகம விதிபபடி செய்வித்து ஒன்பது நாளுஞ் செய்யவேண்டிய விழாவையும் முறையாக நடத்திப் பந்தாநாளாகிய உத்திரதினத்தில் ஏகாம்பரநாதரையும் காமாக்ஷிதேவியையும், விஷ்ணுமூர்த்திலக்ஷ்மிதேவியோடும்நானென்ன புண்ணியஞ்செய்தேன் நானென்ன பாக்கியஞ்செய்தேனென்று தோத்திரஞ்செய்து புகழ்ந்துகொண்டே அலங்காரஞ்செய்து கலியாணமண்டபத்தில் சகல வாத்தியங்களுமுழங்கவீற்றிருக்கச்செய்து இலக்ஷ்மிதேவியானவள் க்ஷீரஞ்சொரியவிஷ்ணுமூர்த்தி ஏகாம்பரநாதருடைய திருவடிவிளக்கிப் பட்டாடையால்ஒற்றிப் பாததீர்த்தமுண்டு மனங்களித்து மதுபர்க்கத்தைமந்திரத்தையுச்சரித்துக்கொடுத்துப் பெருமான்திருக்கரத்தின்மேல் கவுரிதிருக்கரத்தைவைத்து மந்திர நீர்வார்த்துத்தத்தஞ்செய்யப்பெருமானுங்காமாக்ஷியைப்பாணிக்கிரஹணஞ்செய்தனர். பின்னர் பிரமதேவன் சங்க துந்தபி முதலிய பலவாத்தியங்கள் சத்திக்கவும்

வேதமுதலியன கோஷிக்கவும், கற்பகமலர் முதலியன மாரியாகப்பொழியவும், அவ்வேகமபவாணரைக்காமாக்ஷிதேவியாருடைய கண்டத்தில் மாங்கலிய சூத்திரத்தைச் சாத்தியருளச்செய்தனன். அக்காலத்தில்தேவ யக்ஷ கின்னர கிம்புருட சித்த சாத்தியர்முதலிய யாவரும ஜயஜயவென்றுமுழக்கமிட்டுப் பலபலவாகத் தோத்திரஞ்செய்து ஆனந்தபரவசமுற்றிருக்குஞ் சமயத்தில் திருமால் அந்தணர் முதலிய யாவருக்கும் பாயசான்ன வகைகளோடும் பக்ஷியவுங்ககளோடும் சமாராதனை நடத்தி அதன் பின்னர்க் கந்தம் புஷ்பமாலை தாம்பூலம் தக்ஷிணை முதலியன அவரவர்க்குக்கொடுத்து மகிழ்ந்திருப்பத் தேவதச்சனாகிய விசுவகர்மா திரிபுரதகனகாலத்தில்பெருமான் ஆரோகணித்த பூரதம் போலும்சுவர்ணமயமான ரதமும், இந்திரன் படிகத்தினாற்செய்த வெள்ளிக்குடையும், பிரமன்சடாமகுடம்போன்றஇரத்னமயமாகியமகுடமும் ஏகாம்பரநாதருக்குமுன்னே கொண்டுவந்து வைத்து எங்கள் செல்வமே! மனோன்மணியாகிய காமாக்ஷியுடன் இந்தக் கலியாண சுந்தரகோலத்தோடும் இவ்வந்திப்பொழுதில் இந்த ரதத்தில் ஆரோகணித்து எங்களாற் கொடுக்கப படும் முடியையுந் திருமுடியிற் சூடி இந்திரன் குடைபிடிக்க பாசுபதர்களாய் விளங்கும் தேவசமூகங்களாகிய அடியார்களெல்லாம் பரமானந்தவெள்ளத்தில் மூழ்கப் பவனிவரவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அவ்வண்ணமே வீதியில் பவனிவந்து ஆஸ்தானமண்டபத்தி லெழுந்தருளியிருந்து யாவரையும் பார்த்து அன்பர்களே! ஆகாசகங்கையாகிய மந்தாகினி தீரத்திலுள்ள கைலாசபர்வதத்தில் சதாசிவமூர்த்தியாய் எவ்வண்ணம் பிரசித்தியாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றோமோ அவ்வண்ணம் இந்தக் காஞ்சீ க்ஷேத்திரத்தில் கம்பாநதிதீரத்தி லிராநின்ற மாவிருக்ஷத்தினடியில் காமாக்ஷிசமேதனாய் ஏகாம்பரநாதனென்கிற நாமத்தோடு வீற்றிருந்து என்னைச் சரண்புகும்யாவருக்கும் தெரிசனமாத்திரத்தில் சகலகாமியங்களுந் தருவேன்! நீங்களும்

ம் ஸ்ரீகயிலாயத்தைக் காட்டிலும் இவ்விடத்தில் அதிகப் பிரீதியுடையவர்களாய் என்னுடைய சந்நிதானத்தில் வசித்துக் கொண்டு வருடந்தோறும் வரும் பங்குனியுத்திரத்தில் இந்தக் கவுரிகலியாணத்தை யுத்தேசித்து மஹாபிஷேக சகிதமான மஹாபூஜையும் அலங்கார சகிதமான மஹோற்சவமும அறுசுவையோடு கூடிய சிறந்தவுணவுகளால் பிராஹ்மணபூஜையும் செய்துவரவேண்டு மென்று ஆஞ்ஞாபித்து அவ்விடத்தில் கலியாண கோலத்துடன் வீற்றிருந்தனர்

ஏகாம்பரநாதர் இவ்வண்ணம் அநுக்கிரகஞ் செய்த பின்னர் கலியாணகோலத்தோடிருக்கின்ற எட்டுவயதுள்ள கவுரியாகிய காமாக்ஷிதேவியானவள் தன்னுடைய நாயகராகிய சூதநாதரைத் துதித்துப் பின்னர் பக்தானுக்கிரக இசசையோடு அங்கிருந்த யாவரையும் பார்த்து மிகுந்த பிரீதியுடையவளாய்ப் பங்குனியுத்திரதினத்தில் இவ்வாலயத்தில் எங்களிருவருக்கும் கலியாணத்தைப் பக்தியோடுயார்செய்விக்கின்றார்களோ அவர்கள் சகலா பீஷ்டங்களையும் கோடிகன்னிகாதானபலனையும் அடைவார்கள் என்று தனதுகருணைநிறைந்ததிருக்கண்களால் அநுக்கிரகஞ்செய்து அந்தச் சூதநாதருடைய வாமபார்சுத்தில் வீற்றிருந்தனள்.

அதன் பின்னர் பாசுபதர்களாயிருந்தவரெல்லாம் ஆனந்தக் கடலில்மூழ்கினவர்களாய் ஒருவரையொருவர் பார்த்து சர்வசத்தியாய் விளங்குகின்ற மஹாசத்தியே இந்தக் காமாக்ஷிதேவியாயும், அந்த மஹாசத்தி நாதராகிய மஹாதேவரே இந்தச்சூதலிங்கநாதராயும் பிரகாசித்துக் கொண்டு கலியாணவரதரென்றும், முத்திபிரதரென்றும், ஏகாம்பரநாதரென்றும் யாவராலும்புகழப்பெற்று விளங்குகின்றாரென்று போற்றிப் பரசிவபதத்தை யடைந்தனர்.

மஹிமை.

காவேரி நதிக்கரையிலுள்ள திருப்பனங்கா டென்னுந் திவ்ய க்ஷேத்திரத்தில் யஜுர்வேதியாகிய சம்புவென்னும்

ஓர் வேதியனிருந்தனன். அவன் காஞ்சிநகரத்தின் பெருமை யையும் பங்குனி உத்திர மஹோற்சவ மகிமையையுங் கேட்டுத் தான் தரிசிக்கவேண்டுமென் றெண்ணிக் காஞ்சிநகரத்தை யடைந்து கலியாண மஹோற்சவத்தைக் கண்டு களித்து எம்பெருமானே இவ் வைபவத்தை வருடந்தோறும் யான் கண்டு களித் துய்யுமாறு அருள் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டு தன் தேசத்திற்குப்போய் பதினாயிரம் வருடம் ஜீவித்திருந்து பின்னர் சிவகணங்கள் விமானங்கொண்டுவர ஸ்ரீ கைலயங்கிரிக்குச் சென்று அங்குசிவ கணங்களுடன் வாழ்ந்திருந்தனன்; பின்னர் ஆயிரந் தலைமுறை அவ்வேதியன் வம்சத்தில்வந்தவர்களெல்லாம் ஏகாம்பரநாதருடைய கலியாணவைபவத்தைக் குடும்பசமேதராய் வந்து தரிசித்துத் தங்கள் தேசம் செல்லும் நியதியிற்றவறு திருந்து முடிவில் ஒவ்வொருவரும சிவகணங்களா லழைக்கப்பட்டுச் சிவலோகஞ் சென்றனர்.

எட்டாவது அத்தியாயம் ரசாலேசப்பிரபாவம்
முற்றிற்று.

உ
ஸ்ரீகாமாக்ஷிதேவ்யைநம:

ஒன்பதாவது அத்யாயம்.

[*]

சர்வதீர்த்த வரலாறு.

மகா புண்ணியகரமாயும், சகல பாவங்களையும் போக்கடிக்கிறதாயும் சகலதீர்த்தங்களும் தன்னிடத்தில் அடங்கியிருக்கப் பெற்றதாயுமுள்ள சர்வதீர்த்தமானது பூர்வத்தில் சிவபெருமான் தேவியை நீங்கி யிருந்தகாலத்தில் தமக்குண்டாயிருந்த காமாக்கினி யானது பின்னர் அத்தேவி தழுவத்தணிந்து, வளைச்சுவடோடு முலைச்சுவடும் பிரகாசித்தவராய்ப் பிரீதியடைந்து, முன் தமது சடைமுடியி னின்றும்

பெருகச்செய்த வெள்ளத்தைக் கண்டு உமாதேவியார் பய முற்ற படியினால் அந்தவெள்ளத்தை யடக்கி அவரதுபய த்தைப்போக்குதற்குத்தமதுபாதத்தைப்பூமியிலூன்றினதா லுண்டாகியதீ யாதொரு தடாகமோ அத் தடாகமாகும்.

அதில் ஆயிரமுகமாகப் பெருக்கெடுத்து வந்த வெ ள்ளமானது நந்திமலை, பாலாறு, திருப்பாற் கடல் என்கிற இம்மூன்று சம்பந்தங்களை யுடையதாயும், வராகபுரம், பிக்ஷ புரம், அம்பிகாபுரம் என்கிற இம்மூன்று புரங்களுடைய மார்க்கத்தையுடையதாயும் சூக (மா) மூலம், சிவமூலம் எ ன்கிற க்ஷேத்திரபிரஸ்த சம்பந்தங்களை யுடையதாயும் செ ல்லுகின்றபோது சமுத்திர காமினியாகச்சென்று க்ஷீரநதி யோடு கூடிக்கலந்து நல்ல பெருவெள்ளமாய்ப் பெருகி யாவர் கண்ணுக்குந் தோன்றாதிருக்கும் வண்ணம் பூமியில் அந்தர்வாகினி (கீழ்வழி)யாய் வந்து பாத்திரத்து ளிருந்து வீழுஞ் சலம்போல அதில் வீழப்பெற்றதாயுமுள்ளது அச் சர்வதீர்த்தம்.

காமாக்ஷிதேவியைத் திருமணம் புணர்ந்தபின்னர்முன் தமது ரோமகூபத்தினின்றும் பெருகியமூன்றரைக் கோடி தீர்த்த சமூகமாகிய வெள்ளமானது (பிரளயபந்தனி) என் னுந் தார்க்கையினுடைய கபாலத்தில் அடங்கியிருந்த படி யினால் அந்தக் கபாலவெள்ளத்தையும் அதில் வீழ்ந்திருக் கச் செய்தனர்.

இவ்வண்ணம் சிவபெருமான் சர்வதீர்த்தமுண்டாக்கிய பின்னர் காமாக்ஷிதேவியைப்பார்த்து அத்தீர்த்தத்தைக் கா ட்டி ஹே தேவி! நீ என்னைப்பூஜித்து வந்த காலத்தில் உன் னைப்பயமுறுத்தி உன்னால் கம்பையென்று பெயர்பெற்றநதி யானது 'இத்தடாகத்தில்' வந்துகலந்திருக்கின்றது *பிரளய

* உமாதேவியார் சிவபெருமானார் தம்மைத்தழுவுவதற்கு முன் கங்கைபெருகி மூன்றரைக் கோடி தீர்த்தங்களோடு கலந்துவந்து பிரளயபந்தனியினுடைய கபாலத்திலடங்கி அதினின்றும் ஆயிரமுக மாய்ப் பெருகிய பெருவெள்ளமும், திருமணம் புணர்ந்த பின்னர்

பந்தனியி னுடைய கபாலம் வற்றிப் போயிற்றென்று சொல்லியபோது அதனைத் தேவியார்கேட்டு புன்னகையரும்பி அத்தீர்த்தத்தின் மகிமை இத்தன்மைத்தென வறிந்து அதில் ஸ்நானஞ் செய்ய விருப்பமுடையவராய் அத்தீர்த்தத்தைப் படி முறைகளாலும், மண்டப வரிசைகளாலும், அழகுபெறச்செய்து சங்கற்பங்கூறி ஸ்நானஞ்செய்து அந்தீர்த்தத்தினின்றும் எழுந்திருக்கும் பொழுது யவ்வன முடையவராயும் சௌந்தரிய முடையவராயும், பிரகாசிக்கின்ற மங்களசொரூபமுடையவராயும் விளங்கினர்.

பின்னர் தமது உருவத்தைக்கண்டு மகிழ்ந்து அத்தீர்த்தக்கரையினின்று இருக் யஜுர் சாமவேதியர்களான அந்தணர்களுக்குக் கோதான இரணிய தானங்களும் சூரியசந்திரரிருக்கும் வரையில் சாஸ்வதமான ஜீவனஞ்செய்யப் பூதான கிருகதானங்களுஞ்செய்து அவ்விடத்தினின்றும் புறப்பட்டுக்காமகோட்டத்தையடைந்து தருமசாலைகள் ஏற்படுத்தி மகாதிரிபுரசுந்தரியாயும் மஹாசத்தியாயும் ஆதிசத்தியாயும் இருக்கின்ற தேவியை ஆராதித்து மீண்டுந் தருமசாலைக்குத் திரும்பிச் சிரேஷ்டமான (௩௨) தருமங்களையுஞ் செய்து அந்தருமம் எக்காலமும் நடந்துவர வேண்டுமென்னு மெண்ணமுடையவராய் அக்ஷயபாத்திரம் காமதேனு கற்பகவிருக்ஷம்சிந்தாமணி என்னுமிவைகளைப்பிரதிஷ்டை செய்து அவைகளைக்கொண்டு அம்முப்பத்திரண்டு தருமங்களையும் யுகங்கடோறும் அழிவின்றிச் சரிவர நடத்த அரசாணையின்றி யமையாவாதலின் என்றும் அழிவில்லாதவராகிய கணபதியை அரசராகநியமித்து முடிசூட்டி அவரிடம் ஒப்புவித்து, பின்னர் காமகோடிபீடத்தில் வசிக்கும் திரு

பிரளய பந்தனியினுடைய கபாலத்தி லடங்கியிருந்தவெள்ளமும் சர்வதீர்த்தத்திற் கலந்திருக்கிறதெனக் கொள்க. இரண்டு முறையாய்வந்த வெள்ளத்திற்கும் கம்பை யென்றே பெயர். இந்தக்கம்பையின் வரலாற்றை முன்சொன்ன எட்டாவது அத்தியாயத்திலும் இந்த ஒன்பதாவது அத்தியாயத்திலுங் காண்க.

ரசுந்தரியைப் பிரதக்ஷணமாகவந்து வணங்கிப்போற்றி வி டைபெற்று காஞ்சிநகரத்துக் கதிபதியாயிராநின்ற கச்சபே ஸ்வரமூர்த்தியிடஞ் சென்று அவரையும் விதிவத்தாய்ப் பூ சித்து பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து விடைபெற்று சர்வ தீர்த்தத்துக்குப்போய் அந்தத்தீர்த்தத்தைமூன்று பிரதக்ஷ ணஞ்செய்து அத்தீர்த்தகரையினின்று தீர்த்தஸ்நானத்தை யுத்தேசித்துயாத்திரையாகச்சென்று சகலதீர்த்தங்களிலும் ஸ்னானஞ் செய்தவர்களுக்கு என்ன பலனுண்டாகுமோ அ ந்தப்பலன் இந்தத்தீர்த்தத்தைத் தரிசித்தமாத்திரத்தி லுண் டாகுமென்றும், விதித்திருக்கும் பலபுண்ணிய காலங்களில் பலபுண்ணிய தீர்த்தங்கடோறும் ஸ்நானஞ்செய்தால் யா தொரு பலன்களுண்டாகுமோ அந்தப்பலன்களை இதில ஸ்நானஞ்செய்பவர் அடையப் பெறுவார்களென்றும் வரங் கொடுத்துத் தனது நாயகரிடஞ்சென்று வணங்கி அவரது வாமபாகத்தையடைந்து நித்யகல்யாணியாய் விளங்கினர் அதுமுதற்கொண்டு காஞ்சியில யாத்திராவாசிகள் சர்வதீர் த்ததைத் தெரிசித்துமஸ்னானஞ் செய்தும் அவ்வப் பலன் களைபெற்று வருகின்றனர்

மஹிமை.

—நாமபிரபாணிதீரத்தில் அகஸ்தியகோத்ரஜனும் சாமவேதியனுமாகிய சோமனென்னும ஓர் வேதியன் மதங்க (சண்டாள) குலத்தளான அழகிற் சிறந்த வோர் பெண்ணை மோகத்தால சங்கமஞ்செய்து ஓர பிள்ளையைப்பெற்றனன். பின்னர் இவ்வேதியனால் பிதுர்த்தேவதைகளை யுத்தேசித்து ச செய்யப்பட்ட ஸ்ரார்த்தாதிகளைத்தும் கிருமிரூபமாகப் போயின். சுவர்க்கத்திலுள்ள பிதுர்த்தேவதைகள் நரகமடை ந்தனர். இவைகளையெல்லாம் அந்தப்பிராமணனறிந்து மிக்க வருத்தமுற்று தீர்த்தயாத்திரை செய்யப் புறப்பட்டு அங்க ங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்துகொண்டு முடிவில் ருத்திரசாலையை யடைந்துசர்வதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய் தமாத்திரத்தில் அந்தப் பிராமணனுடைய பிதுர்க்களைவ

ரும் இப்புண்ணிய விசேடத்தால் கோரமான நரகத்தினின்றும் நீங்கிச் சுவர்க்கமடைந்தனர். பின்னர் இவன் செய்யப்பட்ட சிரார்த்தாதிகளைப் பிதுர்க்கள் திருப்தியுடையவர்களாய் ஆகாரமாகக் கொண்டார்கள்.

ஒன்பதாவது அத்தியாயம் சர்வதீர்த்தப்பிரபாவம் முற்றிற்று.

உ

ஸ்ரீ காமாக்ஷிதேவ்யைநம:

பத்தாவது அத்தியாயம்.

காமகோட்டபிரபாவம்.

காஞ்சி க்ஷேத்திரத்தில்(காமகோட்டமென்பது) வாயு ஆக்கினேயதிக்குகளில் திருவுருவங் கொண்டுவிளங்கும் சிவ விஷ்ணு சொரூபங்கள் தானேயாகியபராசத்திக்கு இருப்பிடமாயும், சர்வான்மாக்களுக்கும் சர்வகாமங்களைக் கோடிகோடியாகக் கொடுத்தருளும் ஆற்றலுடையதாயும் விளங்குதலால் அந்தக்ஷேத்திரம் காமகோட்டமெனப் பெயர்பெறறது.

இதற்குப்பெயர் ஐந்து

அவையாவன:—

1. ஸ்ரீபுரம், 2 பத்மநாபகம், 3. சீவன்முத்திபுரம், 4 காமகோட்டம், 5. காமகோட்டி.

இதன் எல்லை

சுவேதப்பெருமாளுக்கு க்ஷேத்திராங்கிஆலயமே	(17) அம்சம்கிழக்கிலுள்ளது கிழக்கெல்லை.
க்ஷேத்திராங்கிஆலயத்துக்கு அஸ்திசிஹ்மாலயமே	(15) அம்சம் தெற்கிலுள்ளது தெற்கெல்லை,
அஸ்திசிஹ்மாலயத்துக்கு காயாரோகண்ஆலயமே	(15) அம்சம் மேற்கிலுள்ளது மேற்கெல்லை

காயாரோகணத்துக்கு (13) அம்சம் வடக்கிலுள்ள
சுவேதப்பெருமாளாலயமே வடக்கெல்லை.

இந்நான்கெல்லைக் குட்பட்ட பிரதேசம் பஞ்சபாணநிகேதனமெனவும், காமகோட்டமெனவும் பெயர்பெறும். இது ருத்திரசாலைக்கும், விஷ்ணுசாலைக்கும் மத்தியிலுள்ளது.

இவ்விடத்தில் எவர்கள் இஷ்டதேவதா மந்திரங்களை ஜபிக்கின்றார்களோ அவர்கள் அந்தமந்திரங்களில்வரும் அக்ஷரம் ஒன்றுக்குக் கோடிபலனையும், முத்தியையும், யாவர் யாதொருகாமங்களை விரும்புகின்றார்களோ அவர்கள் அக்காமங்களையும் கோடியாக அடைவார்கள்.

இவ்வெல்லைக்குள்,—

முன்சொன்ன க்ஷேத்திராங்கிக்கு (30) அம்சம் தெற்கில்
* சங்குபாணிவிநாயகர். (1)
சங்குபாணிவிநாயகருக்கு (3) அம்சம் மேற்கில
குமரகோட்டப்பெருமான். (2)

வரலாறு.

தேவசில்பியினால் காஞ்சிநகரத்தைப் பிரதிஷ்டைசெய்ய ஆரம்பிக்குங்காலத்தில் வாஸ்துசாந்திசெய்து, சங்குபிரதிஷ்டைசெய்ய நிமித்தம் பூஜிக்கப்பட்டவர் (சங்குபாணிவிநாயகர்) பிரமதேவனைத்தாரகமந்திரம்வினவிச்சிறையிலடைத்துவிட்டுத்தாமே சிருஷ்டிசெய்யுங் கர்த்தராய் அக்கோலங்கொண்டவர் (குமரகோட்டப்பெருமானர்.)

துர்க்கை ஆலயம்.—6.

குமரகோட்டத்துக்கு (24) அம்சம் தெற்குதிக்கிலுள்ளவள்
† உக்கிரவாசினி. (1)
கருக்கினிலமர்ந்தவளுக்கு (10) அம்சம் வடக்குதிக்கிலுள்ளவள்
தாந்தோனி. (2)

---

* இவர் உலகளந்தப் பெருமாள்கோயிலுக்குத்தெற்கிலுள்ளசங்கபாணிப்பிள்ளையாரென வழங்கப்படுவர். †கருக்கினிலமர்ந்தாளென்றும், மகேவதை யென்றும் வழஙகப்படுவள்.

தாரதோணிக்கு (5)அம்சம் வடக்கு திக்கிலுள்ளவள் * பஞ்சசந்திகை. (3)
பஞ்சசந்திகைக்கு (5)அம்சம் வாயு திக்கிலுள்ளவள் தீர்த்தமாலினி (4)
தீர்த்தமாலினிக்கு (20)அம்சம் வடக்குதிக்கிலுள்ளவள் † ஹேமாசனை. (5)
பொன்னேரியம்மைக்கு (21)அம்சம் தெற்குதிக்கிலுள்ளவள் ‡ பீடவர்த்தினி. (6)

வரலாறு.

(உக்கிரவாசினி) பிரமனாற் பூஜிக்கப்பட்டவள்;—(தாரதோணி) சிவபெருமானைப் பூசித்துத் தனுர்வித்தையில் மிகவும் பண்டிதையானவள்;—(பஞ்சசந்திகை) தேவர்கள் தங்கட்கு நேர்ந்தவிக்கினங்களைப் போக்கிக்கொள்ளுவதற்குவேண்டியபலிகளைக் கொடுக்கும்பொழுது அவைகளையேற்று, அவர்கட்கு வேண்டிய இதங்களைச்செய்து (ஹிதகாரணி) எனப் பெயர்பெற்றவள்; (தீர்த்தமாலினி) நீலையென்னும் ஸ்திரீ தனக்குண்டாகிய கர்ப்பத்தைக் காக்கப் பூசிக்கப்பட்டவள்;—(ஹேமாசனை) கோரக்ஷிசித்தரென்பவருக்கு விசேடமான செல்வத்தைக் கொடுத்தவள்; (பீடவர்த்தினி) திரிசிரனைச் சங்கரித்துக் காமகோட்டி பீடத்தைக்காத்தவள்.

விஷ்ணு ஆலயம் 4

முன்சொன்ன பீடவர்த்தினிக்கு (6) அம்சம் வடக்கில் $தூர்வாவர்னப்பெருமாள். (1)
தூர்வாவர்னப்பெருமாளுக்கு (12) அம்சம் அக்கினியில் § திரிவிக்கிரமப்பெருமாள். (2)
உலகளந்தப் பெருமாளுக்கு (4) அம்சம் வாயுவில் மதுப்பெருமாள். (3)
மதுப்பெருமாளுக்கு (2) அம்சம் ஈசானத்தில் காளாங்கப்பெருமாள். (4)

---

* சீச்சபேசராலயத்தி லுள்ளவள். † பொன்னேரியம்மையென வழங்குவள். ‡ காளியம்மையென வழங்குவள். $ பச்சைவண்ணர் பெருமாள். § உலகளந்தப்பெருமாள் என வழங்குவர்.

MAHAMAHOPADHYAYA
... U. V. SWAMINATHA IYER LIBRARY

வரலாறு.

(துர்வாவர்ணப்பெருமாள்) மன்மதனுக்கிய புத்திரனைப் பெறுதற்குலக்ஷுமிதேவியினாற்பூசிக்கப்பட்டவர்,—(திரிவிக்கிரமப்பெருமாள்)பூவுலகைத்தாங்கும்வல்லமையைப்பெறுதற்கு ஆதிசேஷனாற் பூசிக்கப்பட்டவர்,— (மதுப்பெருமாள்) ஓர்காலத்தில் காஞ்சிமண்டலத்தில் தேன்மாரி பொழிவித்தவர்;—(காளாங்கப்பெருமாள்) சந்தானவிர்த்தியுண்டாக மஹாகாளர் என்னும் சிவபெருமானைப் பூசித்தவர்.

சிவாலயம். 5.

முன்சொன்ன காளாங்கப்பெருமாளுக்கு (1) அம்சம் சமீபத்தில்	மஹாகாளராலயம். (1)
மஹாகாளராலயத்துக்கு (35) அம்சம ஈசானத்தில்	பட்டாரகேஸ்வரராலயம். (2)
பட்டாரகருக்கு (39) அம்சம் தெற்கில்	பணாதரேஸராலயம். (3)
பணாதரேஸருக்கு (5) அம்சம் வடக்கில்	பணீஸ்ராலயம். (4)
பணீஸருக்கு (24) அம்சம் தெற்கில்	* கச்சபேஸராலயம். (5)

வரலாறு.

(மஹாகாளேஸர்) முருகக்கடவுள தனக்குப் பிள்ளையாகவரவேண்டுமென்று ஆதிசேஷனாற்பூசிக்கப்பட்டவர்,—(பட்டாரகேஸ்வரர்) ஜகதாத்மா என்பவருக்குக் கவித்துவத்தைத் தந்தவர்; (பணாதரேஸர்) பூர்வத்தில் ஓர்பிளயகாலத்தில் பனிரண்டு சூரியர்களால் நீலவர்னத்தையடைந்த படங்களையுடைய சர்ப்பங்களுக்கு முத்தியைக் கொடுத்தவர்,—(பணீஸர்) கத்துரு புத்திரர்களான சர்ப்பராசாக்களைக் கருடபயத்தினின்றுங் காத்தவர் (கச்சபேஸர்) பிரமன், கச்சபமா (ஆமையா)ய்வந்ததிருமால்' சரஸ்வதி, சூரியன்' சாஸ்

* சுயாயம்புவாயுள்ள இலிங்கமூர்த்தி.

தா, சண்டிகை, சுப்பிரமண்ணியர், சனற்குமாரர் என்பவர்களால் பூசிக்கப்பட்டவர்.

தீர்த்தம். 4,—

காமாக்ஷிதேவிஆலயத்துக்குள் ஷேதேவிக்கு (1)அம்சம் மேற்குதிக்கில் பஞ்சதீர்த்தம். (1)

பஞ்சதீர்த்தத்துக்கு (24)அம்சம் தெற்குதிக்கில் காயாரோகணதீர்த்தம். (2)

காயாரோகணதீர்த்தத்துக்கு (21)அம்சம் வடக்குதிக்கில் * இஷ்டசித்திதீர்த்தம். (3)

இஷ்டசித்திதீர்த்தத்துக்கு (15)அம்சம் வடக்குதிக்கில் † சக்கரதீர்த்தம். (4)

வரலாறு.

(பஞ்சதீர்த்தம்) சதாசிவமூர்த்தியினது பஞ்சமுகத்தினின்றுந் தோன்றியது;— சிவபூதங்களிரண்டிக்கு முத்தியையும், பிருதிவிமுதலிய பஞ்சபூதங்களுக்குவேண்டிய சித்திகளையுங் கொடுத்தது;— (காயாரோகண தீர்த்தம்) யயாதிமகாராஜனைச் சரீரத்தோடு சுவர்க்கலோகம்போகச்செய்தது (இஷ்டசித்திதீர்த்தம்) சனற்குமாரமுனிவருக்குச் சாபத்தால்வந்தஜெட்டகசரீரத்தைப் போக்கியது,— (சக்கரதீர்த்தம்) சார்த்தவீரியனுக்குச் சாபசரீரத்தைப் போக்கி நிசரூபங் கொடுத்தது.

தீர்த்தபலன்,—

பஞ்சதீர்த்தத்தில் சுக்கிரவாரத்தில் ஸ்நானஞ்செய்வோருக்குக்கோதாவிரியில் ஸ்நானஞ்செய்தபல னுண்டாகுமென்று சதாசிவமூர்த்தியும், காயாரோகணதீர்த்தத்தில் குருவாரத்தில் ஸ்நானஞ்செய்வோருக்குசிந்துநதியில்ஸ்நானஞ்செய்தபல னுண்டாகுமென்று தௌமிய முனிவரும், இஷ்டசித்திதீர்த்தத்தில் ஆதிவாரத்தில் ஸ்நானஞ் செய்வோருக்கு நரு

* இது கச்சபேசராலயத்திலுள்ளது. † பொன்னேரியம்மைகோயிலுக்கு எதிரிலுள்ளது,

மதையில ஸ்நானஞ்செய்த பலனுணடாகுமென்று சனற்குமாரமுனிவரும், சக்கரதீர்த்தத்தில் தேஷி ஜன்மநக்ஷத்திரத்திலும், பூர்வ பல்குனியிலும், ஸ்நானஞ் செய்வோருக்குக் கண்டகியில் ஸ்நானஞ்செய்த பலனுண்டாகுமென்று கார்த்தவீரியனும் வரங்கொடுத்தனர்.

ஆக காமகோட்டமாகிய இவ்வெல்லையில் சங்குபாணி விநாயகராலயம்—1; குமரகோட்டப் பெருமானாகிய முருகக்கடவுளாலயம் 1; துர்க்காலயம்—6; விஷ்ணுவாலயம்—4; சிவாலயம்—5; தீர்த்தம்—4.

கச்சபேஸ்வர ராலயத்துக்கு (5) அம்சம் ஈசானத்திலுள்ள ஸ்ரீகாமாக்ஷிதேவியினுடைய ஆலயத்துள் அன்னபூரணி முதல் சந்தானஸ்தம்பம் வரையில் சொல்லப்பட்டவையெல்லாம் இருக்கும் இடங்கள் இனிவருமாறு.

காமாக்ஷிதேவிவீற்றிருக்கும் இடத்துக்கு	நிருதியில் அன்னபூரணிஆலயம்.
அன்னபூரணி ஆலயத்துக்கு	வாயுவில் சாஸ்தாஆலயம்.
சாஸ்தாவாலயத்துக்கு	ஈசானத்தில் அஞ்சனீகாமாக்ஷி.
அஞ்சனகாமாக்ஷிக்கு சமீபம்	கிழக்கில் சந்தானஸ்தம்பம்.

வரலாறு.

(அன்னபூரணி) பூர்வத்தில் காசிக்ஷேத்திரத்திலுண்டாகிய துவாதசவருடக்ஷாமத்தை அன்னதானத்தாற் போக்கினவள். இவ்வம்பிகையை அன்னவிர்த்தியை வேண்டினோர் அவரது ஆலயத்தில் (தர்மத்துவாரம்) என்று பெயர் பெற்றுள்ள முன்னேகாணப்படும் சிறிய துவாரத்தை விட்டு அவரது வலப்பக்கத்திலுள்ள சிறிய துவாரத்தை யடைந்து அந்தவிடத்தில் தமது கைகளைவிரித்து மூன்று ஜாண் அளந்து மூன்றுதடவையும் (பவதிபிக்ஷாந்தேஹி) என்று பிரார்த்தித்

து வேண்டுவராயின் அவர்பசித்திருந்துவாழும் தாழ்வற்றுப் பித்துண்டுவாழும் பெருவாழ்வை வேண்டியவாறு பெறுவர். (சர்ஸ்தா) சுப்பிரமண்ணியக்கடவுளைப்போல் தேவியினுடைய திருமுலைப் பாலை அவ்விடத்திலுண்ணப்பெற்றனர். (அஞ்சனகாமாக்ஷி) விஷ்ணுமூர்த்தியினுடையசாபத்தால் வந்தவிருத்தரூபத்தைக்காமாக்ஷிதேவியினுடைய கடாக்ஷத்தால்நீங்கப்பெற்று அம்மையைப் போல் சர்வானுக்ரஹமூர்த்தியாய் சாந்துகாமாக்ஷி என்று வாழ்கின்றனள். (சந்தானஸ்தம்பம்) ஸ்ரீகாமாக்ஷிதேவி அனுக்கிரகத்தால் வைவஸ்வதமநு மூன்று பிரதக்ஷணஞ்செய்து புத்திரனைப் பெறும்வரம்பெற்று அயோத்தியையடைந்தனன்.

காமகோட்டமாகிய சத்திசாலையில் இவையெல்லாம் காமாக்ஷிதேவியினுடைய ஆஞ்ஞையினால் எப்பொழுதுங் காணப்பட்டு வருகின்றன. இதில் வசிப்போர்க்குக் கைவல்லியமாகிய முத்திநகர வாசபல னுண்டாகுமாதலால் இது பூலோக ஸ்ரீபுரமெனப் பெயர்பெற்றது.

மஹிமை.

கங்காதீரத்தில் குண்டிலினி நகரத்தில் ஸ்ரீவத்ஸ கோத்திரஜனும் ருக்வேதியுமான ஜகந்நாதனென்னும் ஓர் பிராமணன் வேதகிருத்தியங்களை யொழித்து துஷ்கிருத்தியங்களைக் கைக்கொண்டு பசு அஜம் மச்சம் இவைகளைக் கொன்று வியாபாரம் நடத்தி அவைகளைத் தானுந்தின்று வாழ்ந்துவருங்காலத்தில், யாத்திரார்த்தமாய்க் காஞ்சியிலிருந்து வந்த பிராமணனுக்குச் சிறிதுபொருள் தந்தனன்.

அந்தக் காஞ்சிப் பிராமணன் அச்சிறிது பொருள்கொண்டு தனக்குவேண்டிய ஆகாராதிகளைச் செய்துகொண்டு காசியையடைந்தனன். பின்னர் ஜகந்நாதன் விஷக்கடியாலிறக்க அவனை யமதூதர்கள் மிக்ககோபத்தோடு பாசத்தாற் கட்டி அக்கினிமயமாகிய தண்டங்களால் மோதி மண்டையைப்பிளந்து அக்கினிச்சுவாலை வீசும் மார்க்கமாய் இயமனிடம் அதிவேகமாய்க் கொண்டு செல்லும்பொழுது தேவியா

ஞ்ஞையால் அவருடைய கணங்கள் அத்தூதர்களைக்கொன்று விமானத்திலேற்றி தேவிசமீபத்திற் சேர்ந்தனர். இயமனிவைகளைக்கேட்டு அம்பிகையினிடத்திற்சென்று வணங்கி நரகவேதனையை யனுபவிக்கவேண்டிய இம்மஹாபாவியை அடியேன்வச மொப்புவித்தல் முறைமையென்று பிரார்த்தித்தனன். அதுகேட்ட தேவி என் க்ஷேத்திரத்திலிருந்துயாத்திரையாகப்போனவோர்பிராமணனுக்குச் சிறிதுபொருளீந்தவினன் அது எனக்குப் பிரீதியாயிற்று. அதனால் சகல பாபங்களினின்றும் நீங்கினன். இனி இவ்வந்தணனை உன்வசமொப்புவித்த லடாதென்றுகூற இயமன் யான்கேட்ட பிழையைப்பொறுக்கவேண்டுமென்றுபலமுறையும் வணங்கித்தன துல்கம்போய்ச்சேர்ந்தனன்.

பத்தாவது அத்தியாயம்காமகோட்டப்பிரபாவம்
முற்றிற்று.

உ

ஸ்ரீ காமாக்ஷிதேவ்யைநம:

பதினொன்றும் அத்தியாயம்.

பிலாகாசபிரபாவம்.

பிலாகாசமானது இஷ்டசித்தி தீர்த்தத்திற்கு மூன்றும்சம் ஈசானத்தில் ஸ்ரீகாமாக்ஷிதேவி வீற்றிருக்கும் ஆலயத்தில் உள்ளது.

இந்தமஹாபிலம் எவ்வளவு விசாலமுள்ளதோ அவ்வளவுவிசாலமாகக் காயத்திரிசொரூபமான மண்டபம் அதனைமறைத்து அதற்கு மறைவிடமாக விருக்கின்றது.

அந்தமண்டபத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறஅந்தப்பிலமானது நாதபிந்து யுக்தமான பரமாகாசவடிவமாயிருப்பதால் (நாதபிந்து சம்ஞ்ஜிதம்பரமம்வியோமம்) என்றும், அந்தப்பரமாகாசம் பிரமத்துக்குச் சரீரமாயிருப்பதால் (ஆகாசசரீரம்பிரஹ்மா) என்றும், அந்தப் பிரஹ்மசொரூபமாகிய பரமசிவத்துக்கும் அதுவேசரீரமாயிருப்பதால் (சம்பு

சரீரம்) என்றும், நிஷ்களசகள சொரூபமாயிருக்கிற பரசிவத்தியானத்தால் அடையத்தக்க மோக்ஷத்தைப் பிரத்யக்ஷமாகக் கொடுப்பதால் (பிரத்யக்ஷம்மோக்ஷதம்பரம்) என்றும், ஞானவான்கட்கு சித்சொரூபத்தை விளக்குவதால் (தேவசிந்நப:)என்றும், உலகத்துக்குக் காமவிலாஸமாயிருப்பதால் (ஜகத்காமகளாகாரம்)என்றும்,பூமிக்கு நாபிஸ்தானமாயியிருப்பதால் (குண்டலினீபீதம்) என்றும்,பூமிக்குமர்மஸ்தானமாயிருப்பதால்(ஆதிபௌதிகமர்மாங்கம்) என்றும்,சர்வசாமங்களு மிருப்பதற்கு ஓர் நகரமாயிருப்பதால்(காமநகரம்)என்றும்,எவ்வுலகத்தாராலுங்கொண்டாடப்படும் பிரகாசமுடைத்தாயிருப்பதால் (திவ்யம்) என்றும், பாவங்களைப் போக்கடிப்பதாயிருப்பதால்(அகக்னம்)என்றும்,சர்வசித்தியையுங்கொடுப்பதாயிருப்பதால்(சர்வசித்திதம்) என்றும்,இந்திரியகாமங்களை யடக்குவதால் (தபஸ்தானம்) என்றும், ஒருவராலு மறியக்கூடாத் பரமரகஸ்யமாயிருப்பதால் (சூக்ஷமம்பிலம்) என்றும், ஸ்ரீபுரம்,திரிமூர்த்திகள், ஈசசம்பந்தமான சொரூபங்கள்,திக்குகள், உலகங்கள், மேரு, கோ ரூபமாகியபூமி ஆகியஇவைகட்கு ஒன்பதுதுளையோடுகூடிய மார்க்கமாயிருப்பதால் (நவத்துவாரஸ்யமார்க்கம்) என்றும் ,பூமிக்குக் காரணமாகிய யோனிஸ்தானமாயிருப்பதால்(பூயோனி) என்றும்,

இஃது காமத்தையுத்தேசித்து யார் யார் எந்தெந்த விதமாகத் தருமங்களை யொருதரஞ்செய்தபோதிலும் அந்தத் தருமங்களை நல்லதருமங்களாகவாக்கி அவர்களுக்குஅந்தத் தருமம் ஒன்றுக்கு ஒரு பலஞ்சுகவல்லாமற் கோடிபலனைக் கொடுப்பதா யிருப்பதாலும், குபேரன்போல் சம்பத்துண்டாகவேண்டுமென்று திரவியத்தைவிரும்புவோருக்குஅத்திரவியத்தைக்கோடியாகக் கொடுப்பதா யிருப்பதாலும்,மோக்ஷமானது காமத்தின் கோடியி(முடிவி)லிருப்பதால் அந்த மோக்ஷவின்பத்தைக்கைவிட்டுக் காமத்தையே விரும்புவோருக்கு அந்தக் காமத்தைக் கோடியாகக் கொடுப்பதாயிருப்ப

தாலும், மோக்ஷமானது புருஷார்த்தத்தின் கோடியா (முடிவா)கவிருப்பதால் அந்தக்காமவின்பத்தைக் கைவிட்டு மோக்ஷத்தையே விரும்புவோருக்கு அந்தமோக்ஷவின்பத்தைக் கோடியாகக் கொடுப்பதா யிருப்பதாலும், இங்ஙனம் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கையும் தனித்தனியே விரும்புவோருக்கு அவ்வண்ணமே தனித்தனியாயும், அறம் பொருளின்பங்களை விரும்பாது மோக்ஷத்தை மாத்திரம் விரும்பும் மோக்ஷகாமிகளுக்கு அந்தமோட்சத்தோடு ஏனைய மூன்றையும், தருமம் அருத்தம், காமம் என்கிற மூன்றை மாத்திரம் விரும்புவோர்க்கு அவற்றையும், அவற்றோடுமோக்ஷ விருப்பத்தையும் கொடுப்பனவாக விருப்பதாலும், பரசிவமூர்த்திநெற்றிக்கண்ணினால்தகிக்கப்பட்ட காமனைப்போலக் காமாக்ஷிதேவி தன்னுடைய நேத்திரத்தினின்றும் லீலா மாத்திரமாய்க்கோடிகாமர்களை யுண்டாக்கியதாலும் (காமகோடி) என்றும்,

வீட்டை விரும்புவோர்க்கு அறம், பொருள், இன்பங்களோடு அவர்கள் விரும்பியவீட்டையும், அறம், பொருள் இன்பங்களை விரும்பு வோர்க்கு, அவற்றோடு அவர்விரும்பாதவீட்டையும் கொடுத்தற்கு அந்நான்கும் அப்பிலத்தை யிடமாகக் கொண்டிருத்தலால் (காமகோஷ்டம்) என்றுஞ் சொல்லப்படும்.

சிவபெருமான் முன்னொருகாலத்தில் தாருகாவனத்திற் சென்று ருஷிபத்தினிகளுடைய கற்பையழித்தகாலத்தில் அவர்கள் கணவர்களாகிய ருஷிகள் சிவத்துவேஷிகளாய் எவ்வுருவுந் தன்னுருவமாகவே யுடைய சிவபரஞ்சுடரைப் பலவாறான நிந்தைமொழிகளால் இகழ்ந்து,பின்னர் அநாதிநித்தியமாகிய அச்சியபரஞ்சுடரை அழிக்கவெண்ணிப்புலிபாம்பு மான் கொக்கு முயலகன் உடுக்கை அக்கினி முதலியவைகளை யேவியும் அவையெல்லாம் அவருக்கு அணிகலமாகவும் ஆடைமுதலியன வாகவும் ஆனமைகண்டு மனம்புழுங்கி இவரை இனிக்கண்டோரெல்லாம் நகைக்கும்வண்ணஞ்செய்ய

வேண்டுமென்று துணிந்து மிகவும் அகங்காரங்கொண்டு அலியாய்ப் போகவேண்டுமென்று சபித்துப் புலம்பிக்கொண்டிருந்தனர். சிவபெருமானார் (பெண்ணாகியாணாயலியாய்ப் பிறங்கொளிசேர் விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகி) அநாதியே நின்றருளும் தமதியல்புணராது கர்மபிரஹ்ம வாதிகளாய்க்கருமத்தையே கடவுளாகமேற்கொண்டிருக்கின்றனர் என்று அவர்களது அறிவின் சிறுமையைத் திருவுளத்தெண்ணித் தாம் அவர்கள் கண்டு நாணமடையும் வண்ணம் சிறிதுபொழுது ஆனந்தக் கூத்தாடிக் கைலாயத்துக் கெழுந்தருளிப் பார்வதியாரோடு வீற்றிருந்தனர்.

இச்செய்தி இங்ஙனநிற்க. பந்தகனென்னு மிராக்கதன் பிரமனனுக்கிரகத்தாற்சூரியசந்திரர்களிருக்குமளவும்சிரஞ்சீவியா யிருக்கும் வரத்தைப்பெற்று இந்திராதி தேவர்களுக்கு வைரியாயும், சித்தர் முனிவர் முதலியோர்க்குப் பிராணகண்டகனாயும் உலவி எல்லா வுலகங்களையும் வென்று, பின்னர் கைலாயத்திற்குச் சென்றனன். ஓராதாருள்ளத் தொளிக்கு மொளியானும், கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானுமாகிய இறைவன் அவன்கண்ணுக்குத்தோன்றாமல் தமதுகணங்களோடு மிருப்ப பந்தகாசுரன் தன்பரிவாரங்களோடு கயிலையிலிருந்து எல்லா வுயிர்களையும் பிடித்துக்கொண்டு வாழ்நாளைக் கழித்து வந்தனன்.

இவனது உபத்திரவத்தைச்சகிக்கமுடியாததேவர்கள் கைலாயத்திற்கு வடக்கிலுள்ள கோமுகமென்னுந் திவ்ய க்ஷேத்திரத்திலிருக்கும் பிலத்துட்சென்று காஞ்சிக்ஷேத்திரத்தில் காம கோடியாகியபிலத்தின்வழியாய் வெளியேவந்தனர். அப்பிலமூலத்தில்காமகோடீஸ்வரியாயும், மஹாதேவியாயும், திரிபுரசுந்தரியாயும் எழுந்தருளி விளங்கும் தேவியைத் தரிசித்து நமஸ்கரித்து தங்கள் தங்களுக்கு வேண்டியவைகளைப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கும்பொழுது சிவபெருமானார் அப்பிலத்தின் மகிமையைத் தேவர்களுக்குத்தெரிவிக்க அப்பிலத்தினின்றும் வெளிவந்து கோடிசூரியப் பிரகா

சமாய் திவ்யரூபத்தோடும் நின்று ஓ தேவர்காள்! கோரூபமாய் விளங்கும் பூமிக்குக் கோமுககே்ஷத்திரம் முகமென்றும், ஸ்ரீபுரம் சிரமென்றும், இமாலயம் கண்டமென்றும், கேதாரம் உதரமென்றும், காசி பிருஷ்டமென்றும், கமலாலயம் அதற்குமூலமென்றும், காஞ்சிஇடையென்றும், இக்காமகோட்டிபீடம் அதற்கு நடுவென்றும், அதிலுள்ளபிலம் துவாரமென்றும் சொல்லிவரும்பொழுது தேவர்கள் இறைவனைவணங்கித் தேவரீருடைய திருமேனி எக்காலத்துங் கண்டறியாத திவ்யதேஜசோடும் இப்பொழுது ஒளிவிட்டெரிகின்றதே இதன்காரண மென்னையோவென்று வினவினர்.

பெருமானார் ஓ தேவர்காள்! யான், பூமிதேவிக்கு முகமாகிய கோமுகமென்னும் க்ஷேத்திரத்தின் வழியாய்ப் பிரவேசித்துக் குண்டலினி மார்க்க மாய் இக்காமகோடி பிலத்துவாரத்தின்வழியாய் வெளிவந்தேனாகலான் இவ்வரியவுருவத்தோடும் விளங்குகின்றே னென்றறிவீர். சாதாரணமாய் உலகிலுள்ளவர்கள் பொன்னினால் ஒரு பசுவைப் பேழும் உருவமமைத்து அதன் கர்ப்பத்தில் வசித்துப் பின் வெளிப்படுவாராயின் அவர்கள் பிரமதேஜஸைப்பெற்று விளங்குவாரென்றால் சிற்சத்திசொரூபமாகிய இக்காமகோடிபிலத்தின் வழியாய் வெளிப்பட்ட யான் இப்பேரொளியோடும் விளங்குவது ஓர் ஆச்சரியமா? இப்பிலத்தின் பெருமையை யான் என்னென்று கூறுவேன்! ஓ தேவர்காள்! எவனொருவன் இக் காமகோடிபீடத்தை நாடோறுமாவது ஒருவாரமாவது ஒருபக்ஷமாவது, ஒருமாதமாவது பிரதக்ஷணஞ்செய்கின்றானோ அவன் மஹாபாதகனாயினும் முக்தனாவான். பிரதக்ஷணஞ்செய்யு ஒவ்வொரு அடிக்கு ஒவ்வொரு கோகர்ப்பத்தினின்றும் பிறந்தபலனை யடைவான். நாடோறும் பிரதக்ஷணஞ் செய்பவனடையும் பலன்கள் சொல்லமுடியா, பிரதணஞ் செய்யாதவன் தேவனாயினும் அவன் கழுதைக்குச் சமமாவனென்று காமகோடி பிலத்தின் பெருமைகளை யெடுத்துக் கூறி நீங்கள் இப்பீடத்தை வலம்வருவீராயின் பன்

தகாசுரனால் நீங்க ளடைந்திருக்குந் துன்பத்தைத் நீங்கப்பெறுவீர்கள். அவனது துன்பம் நிவிர்த்தியாகுமளவும் இப்பிலத் தருகிலுள்ள சண்பகவிருக்ஷத்தில் நீங்க ளனைவரும் கிளி வடிவங்கொண்டு வாழக்கடவீர்களென்று வரந்தந்து போயினர். பின்னர் தேவர்களெல்லாம் சிவபெருமானார் அருளியவாறே அப்பிலத்தை நடோறுந் தவறாமல் பிரதக்ஷணஞ்செய்து கிளியுருவங்கொண்டு சண்பகவிருக்ஷத்தில்பதினாயிரம் வருடம் வசித்திருந்தனர்.

மஹிமை.

நர்மதாதீரவாசியாகிய பலபத்திரனென்னும் ஓர் அந்தணன் (வஜ்ஜிரேஸ்வரி)என்னும் தனது பத்தினியை வெறுத்துத் திரஸ்கரித்துப் பரதாரவிருப்பங்கொண்டு அவர்கள்பால் தன்னிஷ்டப்படித் திரவியங்களை விரயப்படுத்திச்சுகித்துக்கொண்டிருந்தனன். விருத்ததிசை வந்தகாலத்தில் சரீரத்தில் கருங்குஷ்டமும், ஆண்குறியிலும் பீஜத்திலும் இரணமும், உண்டாகி நாட்செல்லச் செல்ல ஆண்குறி க்ஷீணப்பட்டு இரணம் மேலிட்டு மிகவும் வருத்தமுறச்செய்ய, அவனைக் கண்ணுற்ற பெரியோர்கள் அநேக ஔஷதப் பிரயோகங்கள் செய்தும் நிவிர்த்திக்கமுடியாமற் போயிற்று. அப்பெரியோர்கள் இது பாபத்தால் வந்த இரணமாதலால் ஔஷதங்களாற் போகாது பாபபரிகாரத்தாற் போக்குவதே முறைமையாமென்றெண்ணிப் பொன்னாற பசுவொன்றுசெய்து அதன் கர்ப்பத்தில் அவனை வசித்துவரச்செய்து அப்பொற்பசுவைப் பிராமணர்களுக்குத் தானஞ்செய்தனர். செய்தும் வியாதிநீங்குதலைக் காணாமல் வருந்திக்கொண்டிருக்குஞ் சமயத்தில் காஞ்சி காமகோடிபீடத்தின் பிரதக்ஷண மஹிமையைச் சிலமுதியோரால் கேட்டு அக்கணமே தன் மனைவியுடன் காஞ்சிப்பதியை யடைந்து ஒரு மாதம வரையில் நாடோறுந் தவராமற் பிலத்தை நூற்றெட்டுப் பிரதக்ஷணஞ்செய்துவந்தனன். நாளுக்குநாட் பிணிநீங்கப்பெற்றுச் சரீரகாந்தியையும் புத்திர பௌத்திராதி சம்பத்துக்களையு

மடைந்துப் புண்ணியசீலனும் வாழ்ந்திருந்து, பின் தேவியி னாலனுப்பப்பட்ட விமானத்திலேறி அம்பிகையின் சரணார விந்தத்திற் கலந்தனன்.

பதினொன்று மத்தியாயம் பிலாகாச பிரபாவம்.

முற்றிற்று.

உ

ஸ்ரீ திரிபுரசுந்தர்யைநம:

பன்னிரண்டாமத்தியாயம்.

மஹா த்ரிபுரசுந்தரி வர்ணனை.

காமகோட்டமென்கிற விடத்தில் காயத்திரிமண்டபத் தில் பிலாகாசமாகிய பீடத்தில் காயத்திரியாகிய ஓங்காரகோ ணத்தில் பராசத்திசொரூபிணியாகிய காமாக்ஷிதேவி எல்லா வுலகங்களையும் படைப்பதற்குக் காரணமாயுள்ளசகளவடிவ ங்கொண்டு பத்மாசனியாய், சதுர்ப்புஜையாய், முக்கண்ணு டையளாய், மூலசத்தி, ஆதிசத்தி, ஆதிலக்ஷ்மி, ஆத்மசத்தி, பிரஹ்மவித்தை, என்கிறநாமங்களாற் றுதிக்கப்பட்டவளாய், தாமரைமலர்போன்றகாந்தியுடையவளாய், சந்திரசூடாமணி யாகிய கிரீடந்தரித்துப்பாசம், அங்குசம், கோதண்டம், (கரு ம்புவில்) பஞ்சபாணம் என்கிற இவைகளைத்தரித்திருக்கின்ற திருக்கரங்களை யுடையவளாய், இருசெவியிலும் சூரிய சந் திரர்கள் காதோலையாய் ஒளிவீச, சிவந்தபட்டாடை புனை ந்து திவ்யாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, சகலசௌ பாக்கியங்களையுந் தரவல்ல மாங்கலியம் கண்டத்தில் விளங் கத் தாமரைமுதலிய மலர்மாலைக ளணைந்தாட ராஜராஜேஸ் வரியாய், ஸ்ரீவித்யாபரமேஸ்வரியாய், திரிமூர்த்திகளா லாரா திக்கப்பட்டவளாய், காமேசுரால் விரும்பப்பட்டதேவியாய் சிவசங்கரருக்கு ஆத்மசொரூபிணியாய், அச்சங்கரரால் வி ரும்பப்பட்டவளாய்சகலகலாரூபிணியாய், சர்வதத்வசொரூ பிணியாய், சகலபிரபஞ்சரூபிணியாய், சர்வப்பிராணிசொரூ பிணியாய், காலசக்கர ரூபிணியாய், ஸ்ரீகாஞ்சி நகரத்திற்கு நாயகியாய், அவ்விடத்தில் சரண்புகுவோர்க்கு சகலாபீஷ்

டங்களுந் தரும் பிரதானியாய், இலக்குமி சரஸ்வதி என்னும் இருவரும் இடம் வலம் என்னும் இரண்டுபக்கங்களினின்று வீசப்பட்ட சாமரங்களை யுடையவளாய், சதாசிவாதி மூர்த்திகளுக்கும் கௌரியாதி சத்திகளுக்குங் காரணியாய், காமகோடி என்றும், திவ்யமங்களரூபிணியாகிய காமாக்ஷி என்றும், சூதலிங்க காரணி என்றும், சூதபீஜ அர்த்தரூபிணி என்றும், சிவனுருக்கதிகை என்றும், சிவாங்கத்தி லிருப்பவளென்றும், சிவமூர்த்தி என்றும், சிவத்தைக் கொடுப்பவளென்றும், மஹா காமேசருக்கு மஹிஷி என்றும், மஹாத்ரிபுரசுந்தரிஎன்றும் சொல்லப்படுந் திருநாமங்களாற் பிரசித்திபெற்று ஸ்ரீசங்கரநாயகியாய் வீற்றிருக்கின்றனள்.

அங்ஙனம் வீற்றிருக்கின்ற தேவியை சிவாஞ்ஞையால் கிளிரூபமாய்ச் சண்பகவிருக்ஷத்தில் வசிக்கின்ற தேவர்கள் ஹிருதயகமலத்தில் தியானஞ்செய்து, பந்தகாசுரனை நாசப்படுத்தவேண்டித் தவம்புரிந்து வந்தனர். அம்பிகை அவர்களது தவத்துக்கிரங்கித் தயையுடையவராய்ப் பிரளயகாலாக்கினி சொரூபிணியாய் மிக்ககோபத்தோடும் பிலத்தினின்றும் வெளிப்பட்டு எல்லாவுலகங்களையும் பஸ்மீகரப்படுத்தி, பஸ்மீகரப்படுத்திய அவ்வெளியில் நிர்க்குணையாகிய தேவியானவள் சகுணமாகிய திருவுருவங்கொண்டு காயத்திரிமண்டபமத்தியில் தானொருத்தியாகவே யிருந்து தனது வாமநேத்திரத்தில் விஷ்ணுவையும், தக்ஷிணநேத்திரத்தில் பிரமனையும், பாலநேத்திரத்தில் உருத்திரமூர்த்தியையும் சொரூபமாக உண்டாக்கிப் பிரமனுக்குச் சிருஷ்டி வித்யாத்மகமாகிய பாலையும், விஷ்ணுவுக்கு ஸ்திதி வித்யாத்மகமாகிய பாலையும், உருத்திரமூர்த்திக்குலய வித்யாத்மகமாகிய பாலையும் ஊட்டிமறைந்தனள்.

திரிமூர்த்திகளும் பாலுண்டவளவில் யவ்வனரூபமடைந்து, உலகம் சூன்யமாயிருப்பதைப் பார்த்து ஆச்சரியமடைந்து சொப்பனத்திற்காணும் பொருள் மறைதல் போல் போயிற்றே என்று ஒருவர்க்கொருவர் பேசிப் பயமடைந்தவ

ர்களாய்ப் பின்னர் ஆலோசித்துத் தாம் செய்யத்தகுந் தொழில்களை யெண்ணிப் பிரமன் முன்னிருந்தவண்ணந் தாவரசங்கமமாகிய வுலகத்தைப் படைக்கவும், விஷ்ணுருத்திரர்கள் காத்தல் அழித்தலாகிய தொழில்களைச்செய்யவும், ஆரம்பித்தகாலத்தில் பந்தகாசுரனோடு உலகம் விருத்தியடைந்தது

சண்பகவிருக்ஷத்தில் கிளிரூபமா யிருந்த தேவர்கள் ஒரு ஜாமத்துக்குள் தேவி திரிமூர்த்திகளைப்படைத்து உலகத்தைச் சிருஷ்டிப்பித்த வதிசயத்தை யொருவர்க்கொருவர் பேசி இன்னும் என்ன அதிசயம் விளையுமோவென் றெதிர்பார்த் திருந்தனர். அவர்களிங்ஙனமிருக்க, திரிபுரசுந்தரியாகிய அம்பிகை திரிமூர்த்திகளைப் படைத்த பின்னாளாகிய மறுநாளிரவில் ஸ்ரீகைலாயத்தில் பந்தகாசுரன் நித்திரை செய்வதைப் பார்த்துக் கோபங்கொண்டவளாய் ஒருபாதத்தை யவனது கண்டத்திலும், மற்றொருபாதத்தை யவன்மார்பிலுமவைத்துப் பதினெட்டாயுதங்களோடுகூடிய பதினெண்புஜங்களையுடைய பைரவரூபிணியாய் அவனது சிகையைப்பலமாய்ப்பிடித்துக்கொண்டுசக்கராதி ஆயுதங்களால் அவனது புத்திர பௌத்திர பந்து மித்திர பரிவாரங்க ளிருக்குமிடங்களில் க்ஷணத்துக்குட் சென்று அவரவர்களை அந்தந்த க்ஷணமே கொன்று சூரியோதய காலத்தில் ஐந்து வயதுடைய கன்னிகையாய்க் காமகோடி பீடமாகிய பிலத்துவாரத்தை வந்தடைந்தனள்.

அப்பொழுது அங்கிருந்த தேவர்கள் கன்னிகை உருவமாகவிருந்த அம்பிகையினது திருக்கரத்தில் பர்வதாகிருதியாயிருக்கின்ற பந்தகாசுரனுடையசிகை சிக்குண்டிருக்குங் கோரத்தைக்கண்டுபயந்து பின்மரணமடைந்தானெனத்தெரிந்து, சகலலக்ஷணத்தோடுங்கூடிய அதிசுந்தரமாகிய திருமேனியுடையவளாயும், சர்வாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளாயும், நெருப்பிலிட்ட பொன்போலொளிவிடுந்திவ்யமாகிய பீதாம்பரந் தரித்தவளாயுங் காணப்படும் கன்னிகையைக்கண்டு துந்துபி, சங்கம், பேரிகை, படகம், காகளம், புள்

ளாங்குழல், தாளம், வீணை, மத்தளம், முதலிய பலதேவவாத்தியங்களை முழக்கி, தாமரை, மல்லிகை, முல்லை, பாரிஜாதம், சண்பகம்முதலிய தேவமலர்களையும், கஸ்தூரிமுதலியசுகந்தங்கள் கலந்த சந்தனக் குழம்பையும் மழைபோல் வாரியிறைத்து, உனக்கு ஜயமுண்டாகுக, மங்களமுண்டாகுகவென்று போற்றிப் பிரதக்ஷண நமஸ்காரங்கள் பலசெய்து, ஹே, கல்யாணீ! ஹே! தேவீ! நீயார் ? எங்கிருந்து வருகின்றாய் ? இந்தப் பந்தகனென்பவன் உன்னால் ஏன் கொல்லப்பட்டான் ? எவ்விதமாகக் கொல்லப்பட்டான் ? இவனிறந்தது மிக ஆச்சரியம் ! பிரமனுதியாகச் சொல்லப்பட்ட நாங்களனைவரும் இவனால் பீடிக்கப்பட்டிருந்தோம். இது நிற்க, எந்தககாரணத்தினால் பிலத்தினின்றுந் தோன்றிய அக்கினியினால் ஏல்லாவுலகங்களும் கொளுத்தப்பட்டன ? இவையாவும் சொல்லவேண்டுமென்று கேட்க, தேவி இக்காரணங்களைப பின்னர் கூறுகின்றேன் என்று பிலத்தைவிட்டு வெளியே வந்து நின்று, நீங்க ளிப்பொழுது இவ்விடத்தில் ஓர் பள்ளந் தோண்டி அதில் பிரேதரூபமாயிருக்கின்ற இப்பந்தகனைப் புதைத்து ஜயஸ்தம்பம் நாட்டி அவ்விடத்தினின்றும் பிலாகாசத்துக்குப் போக ஓர் துவாரமமைத்து, அதற்கருகான தெற்கில் பிலத்தின்வெளி எவ்வளவு இருக்கின்றதோ அவ்வளவும் வேதங்களையே நாற்சதுரங்களாக வமைத்து, அதில் காயத்திரியினுடைய வர்ணங்களையே இருபத்துநான்கு கால்களாக நாட்டி, வியாக்ருதியாகிற மூன்றக்ஷரங்களை மூன்று கண்டங்களாகச் செய்து, காயத்திரிமண்டபமென்று பெயரிட்டு, அம்மண்டபத்துள் பிரணவத்தை மாணிக்கமயமான சிங்காசனமாக வமைத்து, அப்பீடத்தின்மேல் கன்னியாரூபமாக விருக்கின்ற என்னைப்போல் ஒரு பிம்பப்பிரதிஷ்டை செய்து, ஷடாதாரங்களிற் காணப்படும் ஷட்தரிசன சொரூபிணியாயும், நவாவரணமத்தியி லிருப்பவளாயும், பிலத்துக் கதிபதியாயுமிருக்கிற பிராசக்தியை ஷடாம்நாய மென்கிற மந்திரமுறையில் அந்தரியாகமுறையின்படி யருச்சித்துப் பின்

ஆவாகித்துப் பால் தயிர் தேன் இளநீர்முதலியபலஅபிஷே தத்திரவியங்களால் அபிஷேகித்துச் செந்நிறமுள்ள புஷ்பங்க ளாலும், அக்ஷதைகளாலும், தூபதீபநைவேத்திய ஆர்த்தி ஜபமென்கிற பஞ்சோபசாரங்களால் விதிப்படி ஆராதித்து, சுகந்த சம்பந்தமாயுள்ள சகல திரவியங்களாலும் லேபனஞ் செய்து, பிலத்துவாரத்தில் கொடுக்கவேண்டிய பலிகளுங் கொடுத்து, கதவைமூடிவிட்டு வெளியேயிருந்து சூரியோத ய மாகுமளவும் மௌனமாயிருந்து என்னைத் தியானித்து ஸ்ரீவித்யா மந்திரத்தை ஜபித்து, ஜபசமர்ப்பணைசெய்து, உ தயமானவுடன் கதவைத்திறந்து என்னைத்தெரிசனஞ்செய் யுங்கள். அப்பொழுது நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு,வி டைகூறுகின்றேன். அதுவரையில் என்னை யொன்றுங் கே ட்கவேண்டாம் என்றனள்.

அதுகேட்டதேவர்கள் வணங்கித் தேவி கட்டளையிட் டவண்ணம் பந்தகளைப் புதைத்து, வெற்றிக் கொடியாகத் துவஜஸ்தம்பத்தை நாட்டி, காயத்திரி மண்டபபிரதிஷ்டை யும், அதன்பின் செய்யவேண்டிய பூஜையையும், அர்த்தரா த்திரியிற் செய்து, கதவைமூடி, அருணோதயம் வரையில் மந்திரத்தை ஜபித்திருந்து, பின் அருணோதய காலத்தில் ஆசாரத்தோடு கூடினவர்களாய்க் கதவைத்திறந்து பார்க் கும்பொழுது தாங்கள் பிரதிஷ்டைசெய்திருந்த விக்கிரகத் தைக் காணமல் ராஜராஜேஸ்வரியாகிய திரிபுரசுந்தரி நிஜரூ பத்தோடும் ஆவிர்ப்பவித்திருப்பதைக் கண்டனர்.

அந்த ஆவிர்ப்பவகாலமாவது சாவித்திரி கல்பம். சுவா யம்புமனுவினுடைய தாமசகாலம். கிருதயுக ஆரம்பம். விஷ் ணு மோகினியுருவங்கொண்ட சமயம். ஸ்ரீமுகவருடம். சூரி யன்கும்பத்திலிருக்கின்றபால்குனமென்கிற பங்குனிமாசம். கிருஷ்ணபக்ஷம். பிரதமை திதி. பூரநக்ஷத்திரத்தின் மத்திய காலம், ஐந்தாம் ஜாமம். சுக்கிரவாரம் உதயகாலம்.

அந்தச் சுபதினத்தில் காணப்பட்ட ராஜராஜேஸ்வரி யைத் தரிசித்து, இது வென்ன வாச்சரியமென்றும், தேவி

யினுடைய சரித்திரம் மிகவற்புதமென்றும், ஹே ஜெயதேவி! ஜகன்மாதா! திரிபுரசுந்தரீ! என்றுந் தோத்திரஞ் செய்து நமஸ்கரித்து, நாங்கள் பிரதிஷ்டைசெய்து பூசித்த அம்பிகை எங்கே? பந்தகாசுரனைக் கொன்று அவனைக்கொண்டுவந்து பிலத்தருகே நின்ற கன்னியாரூபமெங்கே? அந்த இரண்டுசொரூபங்களையுங் காண்கிலேம். இப்பொழுது உன்னைத்தான் காண்கின்றேம். நீ யாரோ அறியோம்? எங்களுக்கு அந்தக் காரணங்களைக் கிருபையோடு சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்க, திரிபுரசுந்தரி ஓ தேவர்களே! நான் அந்தக் காரணங்களைச் சொல்லுகிறேன். சாவதானமாய்க் கேளுங்களென்று சொல்லத் தொடங்கினள்.

ஓ தேவர்காள்! உங்களுடைய இதத்தின் பொருட்டுப் பிரளயகாலாக்கினி சொரூபமாய் அர்த்த ராத்திரியில் இந்தப்பிலத்தினின்றும் வெளிப்பட்டுச் சர்வசகத்தையும் பஸ்மீகரஞ்செய்து ககார, அகார, மகார சொரூபிகளென்று சொல்லப்பட்ட பிரம்ஹ, விஷ்ணு, உருத்திரர்களைச் சிருஷ்டியாதி தொழில்களை யுத்தேசித்து என்னுடைய மூன்று கண்களினின்றும், உண்டாக்கி, திரிபுரசுந்தரியாகிய நான் காபாலி என்கிற பெயர்பெற்றேன்.

அந்தத் திரிமூர்த்திகளும் தங்கட்குரிய தொழில்களைச் செய்ய வுத்தேசித்துப் பிரமன் சிருஷ்டிசெய்த பொழுது, உங்கள் பகைவனுகிய பந்தகாசுரன் முன்போல் தோன்றினன். அதைக்கண்ட நான் பைரவ ரூபங்கொண்டு, அந்தப் பந்தகனைக்கொன்று, அவனது பந்து மித்திரர்களையும் நாசஞ்செய்து பிரேதமாய்ப்போன பந்தகனைச் சிகைபிடித் திழுத்துக்கொண்டு கண்டார் பயப்படத்தக்க என்னுடைய பைரவ ரூபத்தைமாற்றிக் கன்னியாரூபங்கொண்டு, மஹாபிலத்தினின்றும்வெளிப்பட்டு நீங்கள் காணுமாறுவந்தேன். வந்த என்கையில் பந்தகன் பிரேதமாயிருந்தும் நீங்கள்கண்டுபயந்தபடியால் அந்தப் பயநிவர்த்தியின் பொருட்டும், பயநிவர்த்திசெய்வதில்வெற்றியுண்டயவள்யான் என்பதும் யாவரும்

அறியும்பொருட்டும் அவனைப்புதைத்துஜயஸ்தம்பநாட்டும் படி உங்கட்குக் கட்டளையிட்டேன். நீங்கள் என்னைப் புகழ்ந்து தோத்திரஞ்செய்து அன்பு பாராட்டியபடியால் இந்தப் பிலத்தைக் காயத்திரிமண்டபத்தால் மறைத்து, ஓங்கார சிம்மாசன மமைத்து, அதில் என்னைப் பிரதிஷ்டை செய்யுங்களென்று விதித்தேன். அதுபோலவேநீங்கள் செய்தபடியால் நீங்களனைவரும் ஆச்சரியானந்த சாகரத்திலழுழ்குநிமித்தமும், உங்களிஷ்டார்த்த சித்தியின் பொருட்டும், சித்சொரூபமாகிய பிலாகாசத்துள்ளே வசிக்கின்ற திரிபுரசுந்தரியாகிய நான் அதை விட்டு நீங்கள் பிரதிஷ்டைசெய்த பிம்பத்தில் இப்பொழுது பிரகாசிக்கின்றேன்.

இனி நான் இந்தத் திவ்யமாகிய மண்டபத்தில் நீங்காது எப்பொழுது மிருப்பேன். இந்த இடந்தான்மேலானது. இதுதான் எனக்கிடம். இதுதான் அழிவில்லாதது. எக்காலத்தும் அழிவில்லாத காரணத்தால் இதுபிரளயஜித்தெனப் பெயர்பெற்றிருக்கின்றது என்று திரிபுரசுந்தரியாகிய தேவிசொன்னதைத் தேவர்கள் கேட்டு, நமஸ்காரஞ் செய்து ஆராதித்து அத்தேவிக்குப் பிலம் உள்ளிடமா யிருப்பதால் அந்தப் பிலத்துவாரத்திற்கும் நீராஞ்சனமுதலிய உபசாரங்கள் செய்துப் பின்னர் அத்தேவியை அந்தணர்களுடைய ஹிருதயத்தி லிருப்பவளாகத் தியானித்து, அநேக விதமான பக்ஷிய வகைகளோடு கூடிய அறுசுவையுணவுகளையுண்ணும்படிச் செய்தலாகிய சமாராதனை செய்து, அவர்களுக் கெல்லாம் நல்ல சுகந்தமாகிய சந்தனம், புஷ்பமாலை, வஸ்திரங்கள், ஆபரணங்கள் முதலான இவைகளெல்லாம் இரண்டு பங்காகக் கொடுத்து, அவர்களைச் சந்தோஷிப்பித்து, யாவுந்தேவிக்கே அர்ப்பணமென்றுசொல்லி, தோத்திர வகைகளால் அம்பிகையைத் திருப்தி செய்வித்தனர்.

அதன்பின்னர் சிங்காசனத்தில் வீற்றிருக்கின்ற பரமேஸ்வரிக்குப் பட்டாபிஷேக வுற்சவஞ் செய்யவேண்டுமென்றெண்ணித் தேவசில்பி பல்லக்கையும், பிரமன் முத்

துக்கொண்டையும், விஷ்ணு விருத்தாகாரமாயுள்ள நவரத்ன மகுடமும், ருத்திரமூர்த்தி ஸ்ரீசக்கரமென்னும் பதக்கமுங் கொடுக்க, தேவர்கள் அலங்காரஞ் செய்து, அன்று மாலைக் காலம் மஹோற்சவமா யெழுந்தருளிவரச் செய்து, முன் போல் பீடத்தில் அம்பிகையை ஸ்தாபனஞ்செய்து, ஹே தேவி! இக்காஞ்சியில் சாந்நித்யமாயிருக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, அம்பிகை நான் க்ஷீரசமுத்திரத்தி லிருக்கும் ஸ்ரீபுரத்தில் எவ்வாறு சாமர்த்திய ரூபிணியாய், சக்தியென்கிற பெயருடையவளா யிருக்கின்றேனோ அவ்வாறே இவ்விடத்தில் காமாக்ஷி என்னும் பெயருடன் சந்தானதி வரங்களைத் தருபவளாய் வசித்திருக்கின்றேன். ஆகையால் நீங்கள் என்னை நாடோறும் தரிசித்துவாருங்கள் ஸ்ரீபுரத்தைக் காட்டிலும் இது அதிகம் என்று யாவருக்கும் ஆஞ்ஞைசெய்ய, உருத்திரர்முதலிய யாவரும் மிகவும் சந்தோஷிதவர்களாய் ஸ்தோத்திர நமஸ்காராதிகள் செய்து, எவர் அம்பிகை யுற்பத்தியான தினத்தில் பூஜிக்கின்றார்களோ அவர்கள் கோடி யஜ்ஞபலத்தை யடைவார்களென்று அனுக்கிரகித்து மறைந்து போயினர்.

பின்னர் உருத்திர மூர்த்தி தூர்வாசராய் அநேக சீடர்களுடன் கூடி, உள்ளே பிரவேசித்து விசுவாமித்திரர், கௌதமர், காசிபர், அத்திரி, பரத்துவாசர், அகஸ்தியர் முதலானவர்களையும், அவர்களுடைய புத்திரர்களையும், பஸ்மமும், பவளத்தினுற்செய்த மேருவோடுகூடிய சொர்ண ருத்திராக்ஷமும், சௌபாக்கியமான குங்குமமும் ; தேவி ஆஞ்ஞையினால் தரித்துக்கொள்ளும்படிச் செய்துப் பிரஹ்ம கல்ப பரியந்தம் சிந்தாமணி என்கிற தந்திரப்படி அம்பிகையைப் பூசித்து வரும்படி ஆஞ்ஞைசெய்து நான் இக்கிருத யுகத்தில் தூர்வாசமகருஷியையும், திரேதா யுகத்தில் பரசுராமரையும், துவாபரயுகத்தில் தௌம்மியாசாரியரையும், கலியுகத்தில் மூகாசாரியரையும் அதிஷ்டித்து, முறையே கிருதயுகத்தில் இரண்டாயிரமும், திரேதாயுகத்தில் ஆயிரத்

தைஞ்ஞூறும், துவாபரயுகத்தில் ஆயிரமும், கலியுகத்தில் ஐந்நூறுமாகத் தோத்திரஞ்செய்து, காமாக்ஷிஸ்தவம் என்கிற தாக உலகில் வழங்கச்செய்வேன் என்றுகூறி, பின் நம்மை அந்த மகருஷிகளெல்லாந் தூர்வாசரென் றறியும்படிச் செய்து, என்னை நீங்கள் ஆசாரியராகப் பூசித்து, நீங்களனைவரும் எனக்குச் சீடர்களாக இருத்தல் வேண்டுமென்று கட்டளையிட்டு, தேவியை ஆன்மார்த்தமாகப் பூசிக்கு நிமித்தம் பிம்பரூபமாகவே அங்கிருந்தனர். தேவியும் அவருடைய பூசையை ஏற்றுக்கொண்டிருக்கு நிமித்தம் அவரெதிரில் வீற்றிருக்கின்றனள்,

மஹிமை.

கோதாவரி தீரத்தில் ஜமதக்னிகுலத்துதித்த கிருஷ்ண வேதியான ஜயதேவரென்னும் பிராஹ்மணன் பஞ்சவடிதீரத்தில் அநேக நாள்வாசஞ்செய்துவருநாளில் ஊழ்வகையால் வந்த வறுமையால் மிகவும் பீடிக்கப்பட்டுப்பூர்வபுண்ணியப் பிரேரேபணையால் யாத்திரை செய்துவரத் தொடங்கி அநேகக்ஷேத்திர யாத்திரைகள்செய்து கடைசியில் காஞ்சிகோடிக்ஷேத்திரத்தை யடைந்து அம்பிகையினுடைய தரிசனவிசேஷத்தால் வறுமை நீங்கப் பெற்று மீண்டுந் தன் தேயத்தைப்போய்ச் சேர்ந்து சகலசம்பத்துடன் வாழ்ந்திருந்தனன்.

பன்னிரண்டாம் அத்தியாயம்.

பந்தகாசுரவதை

முற்றிற்று

திரிபுரசுந்தர்யைநம:

பதின்மூன்றும் அத்தியாயம்.

பூதபந்த வரலாறு.

காமகோட்டமாகிய மஹாபிலத்தில் வீற்றிருக்கும் திரிபுரசுந்தரியாகிய தேவிக்கு மிகவும் சமீபஸ்தானமாகிய மேற்கில் திருமால் மூன்றுவிதமான திருக்கோலமாய் வீற்றிருக்கின்றனர்.

பூர்வத்தில் திரிபுரசுந்தரியாகிய தேவி தேவர்களுடைய ஹிதத்தை யுத்தேசித்துக் கொன்ற பந்தகனைப் புதைப்பதற்கு ஓர் பள்ளந் தோண்டவேண்டுமென்று தன்னுடைய காற்பெருவிரலால் தன்னைக்கண்டு தோத்திரஞ்செய்த தேவர்களுக் கிடங்காட்டிய காலத்தில் அத்தேவர்கள் அவ்விடத்தில் பள்ளந்தோண்டுங்கால் மல்லகனென்னும் அசுரன் எங்கும் த்வாக்கினி வீச அதியுக்ரமாகத் தவஞ் செய்வதைப் பார்த்தோடினர். அப்பொழுது அத்தேவர்களுக்குள் தீரராகிய விஷ்ணுமூர்த்தியானவர் அவன் தவஞ்செய்கின்றானென்பதை யெண்ணாமல் அவனைக் கொல்லும் பொழுது அவ்வசுரனுடைய சரீரத்தினின்றும் வெளிப்பட்ட ஒவ்வொரு ரக்தபிந்துவினின்றும் அநேக அசுரர்கள் ஒருக்ஷணத்துக்குட் டோன்றிப் பெருங்கூட்டமாய்ப் போர்க்கெழுந்தனர்.

அதுகண்ட விஷ்ணுமூர்த்தியானவர் சிறிதும் இளைக்காதவராய் அந்தக் கூட்டங்களோடு போர்செய்து வரும்பொழுது அவைகள் மாளாது சிதறுகின்ற ரக்தத்துளிகளினின்றும் விருத்தியாய் வருதலைப் பார்த்து உருத்திரமூர்த்தியைத் தியானிக்க அக்கணமே அவ ரங்கெழுந்தருளித் தம்முடைய சடையை விரித்துப் பூமியிற்றட்டி ஆண் பெண்ணாகிய இரண்டு பூதங்களையுண்டாக்கி மேன்மேல் அசுரவிருத்தி

களாகாவண்ணம் சிதறுகின்ற ரத்த பிந்துக்களை யெல்லாம் உண்டுவரக் கட்டளையிட்டுப் போயினர்.

அதுபோலவே அப்பூதங்கள் அந்தரக்தபிந்துக்களை விடாமலுண்டுவரவே அவ் வசுரக்கூட்டங்கள் தோன்றாதொழிந்தன. அவைகளொழியவே அவர்களுடைய உதிரபானஞ் செய்துவந்த பூதங்களிரண்டும் வெறிகொண்டு மதிமயங்கி அசுரத்தன்மை யடைந்து விஷ்ணுமூர்த்தியோடு போர் செய்யத் தொடங்கின. அதுகண்டவர் இதுவும் ஆச்சரியாதானென்றெண்ணி அப்பூதங்களைப்பிடித்துக் கீழேதள்ளித் தாம் மிகவும் திடமுள்ளவராய் அவைகளின்மீது காலை வைத்தழுத்திநின்றனர். அப்பூதங்களிரண்டும் அவ்விஷ்ணுவைக்கீழேதள்ளிமேலேநின்றன. விஷ்ணுமூர்த்தி அதுகண்டு உக்கிரங்கொண்டு அவைகளை மீண்டும் கீழேதள்ளி அவைகளெழுந்திராவண்ணம் மிகவும் பலங்கொண்டு தொடைகளின்மீதுட்கார்ந்தனர். பின்னரபபூதங்கள் விஷ்ணுவைக் கீழேதள்ளிவிட்டு மேலுலகம்போகத் தலைப்பட்டன. விஷ்ணுமூர்த்தி அவைகளைக் கீழேதள்ளிக் கால்களால் மிதித்து மேலே படுத்துக் கொண்டனர்.

பின்னரவை மதமொழியப் பெற்றுச் சுபாவகுணமடைந்து விஷ்ணுவைப் பார்த்து ஓ திருமாலே! நாங்கள் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்றுப் பிரார்த்திக்க அவைகளை விஷ்ணுமூர்த்தி பார்த்து நீங்கள் ராக்ஷசர்களுடைய உதிரபானஞ் செய்தபடியால் மதமேலிட்டு வெறிகொண்டு சுபாவ அறிவுங்கெட்டு என்னோடு போர்செய்யத் தலைபபட்டீர்கள். யானும் உங்களுக் குண்டாகிய மதத்தைப் போக்க உங்களைக் கீழேதள்ளி நின்றும் இருந்தும் கிடபபவனாயினேன் நீங்கள் என்னோடுபோர்செய்ய வந்ததுங் குறறமே, சிவபெருமானார் சடையில் வந்தவுங்களை நான் பங்கப படுத்தியதுங் குற்றமே என்று தயையோடுசொல்லிவிட்டுத் திரியம்பகராயும், உமாநாதராயும், சங்கரராயும், பஞ்சானனராயு மிருக்கின்ற சதாசிவமூர்த்தியைத் தியானிக்க

அவர் பிரத்தியக்ஷமாய்த் தனது சடைமுடியிலுள்ள லோக பாவனியாகிய ஜான்னவியை ஐந்து சடைமுடியினின்றும் பெருகிவரக் கட்டளையிட்டனர்.

அக்கங்காதேவியும் சடைமுடியினின்றும் மகாப்பிரவாகமாய்ப் பெருக்கெடுத்து நதிரூபமாய்வந்து காமகோட்டத்தில் ஐந்துமுகமாய் விழுந்தனள். விழவே சிவபெருமானார் விஷ்ணுவை நோக்கி இப்பூதங்கள் இதில் ஸ்நானஞ்செய்யுமாயின் என்னாணையைக்கடந்து உன்னோடுபோர்செய்தபாவத்தினின்றும் விடுபடுமென்று கட்டளையிட, விஷ்ணுமூர்த்தி என்பொருட்டுத் தேவரீருண்டாக்கிய இப்பூதங்களை யான் துன்வத்தும அடித்தும் பலவாறான அபராதங்களிழைத்தேனாதலால் அச் சிவாபராதம் நீங்குமாறு எனக்கும் அனுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று பிரார்த்திப்ப அவரையும அதில் மூழ்கிவரச்செய்து அத்தீர்த்தத்தின் மகிமையைக் கூறத் தொடங்கினார். ஹேவிஷ்ணுவே! இத்தீர்த்தம எனது பஞ்சமுகத்தினின்றுந் தோன்றினமையான் இது பஞ்சதீர்த்தமென்னப் பெயர்பெறுக இத்தீர்த்தத்தில் எவனொருவன ஸ்நானஞ் செய்கின்றானோ அவன் எல்லாப பாவங்களினின்று நீங்கி முத்தியடையக்கடவன. பொன் திருடினவன் ஆக்னேயதிக்கிலும, சுராபானன் தக்ஷிணத்திலும, பரதாரகமனன் மேற்கிலும, பிரமஹத்தி புரிந்தவன் உத்தரத்திலும், இவர்கள் சிநேகிதன் பூதங்கள்மத்தியிலும ஸ்நானஞ்செய்வாரளாயின் அவர்கள் அவ்வபபாதகங்களினின்றும விடுபட்டவர்களாய்ச் சர்வகாமங்களையும குறைவின்றி யடையப்பெறுவர் இதிற் சந்தேகமில்லை.

நீ ஆண்பெண்ணாகிய இந்த இரண்டு பூதங்களையும இத்தீர்த்தத்தைக் காப்பவைகளாக ஈசானதிக்குக்கும அக்னிதிக்குக்கு நடுவில பிரதிஷ்டை செய்து அவைகட்கு ஸ்ரீகாமாக்ஷிதேவியினுடைய அபிடேகதீர்த்தக் கிரஹணத்தால திருப்தியுண்டாகும வண்ணம் நியமித்து இப்பூதங்களின் மத்தியபாகத்தின் மேலிடத்தில் முன்பூதங்களுக்காக நின்றும இருந

துங் கிடந்தும் இருந்ததுபோல் மூன்றுபேத ரூபங்களாகவேயிருந்து உனக் கெதிரில் என்னை இலிங்க ரூபமாகப் பிரதிஷ்டைசெய் தருச்சித்து யாவர்களுக்கும் நீதர்மார்த்த காம மோக்ஷங்களைக் கொடுக்கின்றவனாக விருக்கக்கடவாய். நான் உன்னிடத்தில் பிரீதியுடையவனாகிறேன் என்று கட்டளையிட அவ்வாறே அம்பிகையும் கட்டளையிட்டனள். விஷ்ணுமூர்த்தி இருவருடைய கட்டளைப்படியே பூதங்களைப் பிரதிஷ்டைசெய்து அவைகளின் மத்தியிலுள்ளவிடத்தைத் தன்னிடமாகக்கொண்டு மூன்று லிங்கங்களைப் பிரதிஷ்டைசெய்து அன்போடுவழிபட்டுப் பின் தேவர்களையும் ருஷிகளையும் பார்த்து இந்தஇரண்டு பூதங்கட்கும்பிரீதியாக வருடந்தோறும பூதங்களின் மத்தியிலுள்ள என்னுடைய சமீபத் தானத்திலிருக்கும் சிகரத்தின்மேனின்று கர்ப்பிணியாகியவொருதாசியானவள் பஞ்ச தீர்த்தத்தில் வீழ்ந்து வருவாளாயின் கர்ப்பத்திலிருந்த சிசுவானது பிழைத்துக் கரையேறும், அவள் விண்ணுலகம்போய் மறுஜன்மத்தில் பிராஹ்மண ஜென்மத்தையடைவாள். இதைக்காணப்பெற்றவர்களுக்குப் பிரதிபந்தக பாதகமும் பூதப்ரேத பிசாச முதலான கிரகதோஷங்களும் நசித்து விடுமென் றனுக்கிரகஞ்செய்தனர். இப்பூதங்களினுடைய மத்தியஸ்தானத்தின்மகிமையைக் கேட்டயாவரும்நமஸ்கரித்து அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து விஷ்ணுவினால் கொடுக்கப்பட்ட வரங்களைப் பெற்றுத் தங்களிடம்போய்ச் சேர்ந்தனர். ஆகையால் யாரொருவர் இதில் ஸ்நானஞ்செய்து விஷ்ணுமூர்த்தங்களையும் பூதங்களையும் தரிசனஞ்செய்கின்றார்களோ அவர்கள் ஸ்வேத த்வீபத்திலும் திருப்பாற்கடலிலும் வைகுண்டத்திலும் விஷ்ணுசேவை செய்தவர்கள் அடையும்பலனை அடையப்பெறுவர்.

மஹிமை.

கிருஷ்ணா தீரத்தில் ராமாபுரியில் கிரீந்திரர் என்பவர் மூன்று பெண்களைக் கலியாணஞ்செய்துகொண்டும் புத்திரப பேறின்றி காமகோடியை யடைந்து பஞ்சதீர்த்தத்தில் ஸ்நா

னஞ்செய்து திரிபுர சுந்தரியையும் பூதயந்த ஜனார்த்தனராகிய விஷ்ணுவையுந் தெரிசித்து அந்த விஷ்ணு சந்நிதானத்திலிருந்து அவரைத்தியானஞ்செய் திருக்கின்றபொழுது மந்தை(தேனை)க்கொடுத்தனர். அதனாலவர்பாவமகன்றினவராய் நூறுபிள்ளைகளைப் பெற்றுச் சுகமாய் வாழ்ந்திருந்தனர். இவ்வண்ணம் பேறுபெற்றவர்கள் பலர்.

பதின்மூன்றுமத்தியாயம் பூதயந்த வரலாறு

முற்றிற்று.

உ

ஸ்ரீ காமாக்ஷிதேவ்யைநம:

பதினான்காம் அத்தியாயம்.

சுவர்ன காமாக்ஷி வர்ணனை.

காமகோட்டமென்கிற காமாக்ஷிதேவியினுடைய ஆலயத்துள்ளிருக்கும் பஞ்சதீர்த்தமென்னும் தீர்த்தத்துக்குக்கிழக்கில் திருக்கோயில கொண்டிருக்கும் பராசக்தியினுடைய நெற்றிக்கண்ணினின்றும் சுவர்னச்சாயையாக ஒரு ஜோதிசொரூபமான்று தோன்றியது. அத்திருவுருவம் இரண்டுநேத்திரமும், இரண்டுபுஜமும், சாமளநிறமும், கிளிதாங்கியிருக்கும் வலக்கரமும், தொங்கவிட்டிருக்கும் இடக்கரமும், திரிபங்கியும், குஞ்சிதமாய் நிற்கும் வலப்பாதமும், தனுராகாரமாய்(வில்போலும் சிறிதுவளைந்து)தோன்றும் திருமேனியும் அன்றலர்ந்த தாமரைபோன்ற திருக்கண்களும், பொன்போலும் நிறமுள்ள மஞ்சளாடையும், இரத்னகுண்டலமுதலிய ஆபரணவிகைகளால் அலங்கரிக்கப்பட்ட அழகியகோலமும் உடையது.

இவ்வண்ணம் விளங்கும் ஜோதிசொரூபத்தைக் கண்ட பிரஹ்மா அக் கோலத்தைப் போலும் சுவர்னத்தால் ஓர்விக்ரகஞ்செய்தனர். அந்தப் பிம்பத்தில் மனோன்மனியாயும் சூதலிங்கநாயகியாயு மிருக்கின்ற பராசக்தியானவள் சாந்நித்தியங்கொண்டு பிரசன்னையாயினள்.

வரலாறு.

பூர்வத்தில் சிவபெருமானுடைய நெற்றித்தீப் பொறியால் அனங்கனாய்ப்போன மன்மதன் முன்போல் அங்கம் பெறவேண்டுமென்கிற விருப்பத்தினால் காமகோட்டத்தையடைந்து திரிபுரசுந்தரியாகிய அம்பிகையைவணங்கி இருதயகமலத்தில் தியானித்துப் பூசனைசெய்து மிகவும் உக்கிரமானதவத்தையுஞ் செய்து வந்தனன். திரிபுரசுந்தரியாகிய அம்பிகை பிரத்தியக்ஷமாய் வர, அவரது கடாக்ஷவீக்ஷண்ணிய மாத்திரத்தில் மன்மதன் மனோகரமாகிய திவ்வியதேகத்தைப் பெற்று பக்தியோடு பிரதக்ஷண நமஸ்காரத்தோத்திரத்தியானாதிகள் செய்து தேவியைப்பார்த்து யான் உனது கடாக்ஷ வீக்ஷண்ணியத்தினால் சரீரமுடையவனாயினேன் இனிச் சரீரம் பெற்றதற்குரிய பிரயோசனத்தை யானடையும் வண்ணம் தேவரீர் அனுக்கிரகஞ்செய்ய வேண்டும் அது என்னையெனின ? சிவபெருமானார் மேல் முன் பார்வதியாருடைய கலியாணத்தை யுத்தேசித்து நான் விட்டபாணங்கள் அவலமாய்ப் போனபடியால் இப்பொழுது அந்தப் பாணங்களை நான் அவர்மேல் பிரயோகஞ்செய்யவும், செய்யுங்காலத்தில் எனது சரீரத்துக்கு நாசம்வருமாயின் இப்பொழுது கொடுத்ததுபோல் மீண்டுஞ் சரீரங்கொடுக்கவும், அந்தச்சரீரம் நரை திரை மூப்பின்றி அழிவில்லாமல் வாழவும், நான் விடும்பாணங்களாலேயே சிவனார்மோகிதராய்த் தேவி எங்கே எங்கே என்று தேடவும், அப்பொழுது தேவரீர் இடங்கொடாமல் என்னை அவர்வேண்டும்படியாகவும், பின்னர் என்னுடைய வேண்டுகோளால் அவருக்குக் காமசாந்தி உண்டாகும் வகையைத் தேவரீர் சொல்லவும் வேண்டுமென்று பிரார்த்தித்தனன்.

அம்பிகை மன்மதனைப்பார்த்து ஓ மன்மதா! நீ வேண்டியபடியே வரந்தந்தேன், யான் சிவனாருடைய பக்ஷமாயிராமல் மவுனியாய் உன் பக்ஷமாகவேயிருந்து உனக்குவேண்டியவற்றைச் செய்கிறேன், இனி நீ சிவனாரிடத்துச் சென்று

செய்யவேண்டியவற்றைச் செய்வாயென்று கட்டளையிட, அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு நமஸ்கரித்து விடைபெற்று ஸ்ரீகயிலாயத்தை விரைவிலடைந்து சிவசந்நிதானத்தை நோக்கி நெருப்பைச்சிந்தும் பாணங்களையெடுத்துக் கருப்புவில்லிற்பூட்டி விடுத்தனன். அப்பாணங்களைக்கண்ட மஹாதேவர் அநங்கனென்றுணர்ந்து இவன் பராசத்தியினுடைய அநுக்கிரகம்பெற்று அவளுடைய பிரேரேபணையால் வந்தானென்று மகிழ்ந்து தேவியார் தேகஹீனனுக்குக்கூறிய லீலானுக்கிரகத்துக்குத் தானும் உடன்பட்டவராய் அந்தலீலையைச் செய்யவெண்ணி நெற்றிக்கண்ணைத் திறந்து பார்த்தனர். அந்தநேத்திராக்கினி முன்போல் அவனை எரிக்காமல் அவனது முடியில் இரத்னம்போற் பிரகாசித்தது. அதனைக் கண்டு சூலாயுதத்தை எறிந்தனர்; அது அவனது வெற்றிக்கொடிபோல் நின்றது. பின்னர் பாசுபதாஸ்திரத்தைப் பிரயோகஞ் செய்தனர்; அது அவனது கண்டத்தில் வெற்றிமாலையாய் விழுந்தது. அதுகண்ட சிவபெருமானார் நமது சத்தியானவள் இந்த மன்மதனை ரக்ஷிக்கவேண்டுமென்றெண்ணியிருக்கின்றாளாதலால் நாம விட்டநேத்திராக்னி முதலியவற்றிற் கலந்து சுடாமலும், உபத்திரவிக்காமலும், கொல்லாமலும் போயினர். இப்பொழுது நம்மை அவனெண்ணியபடி யாட்டுவிக்க அவனிடத்தில் கலந்திருக்கின்றாளாதலால் அவன் சுந்தரமான உருவமுடையவனும், நாசமடையாதவனும், சுகமுடையவனுங் காணப்படுகிறான். சத்தியின்வழி நாம் யாவும் செய்வதேயன்றி அவள் வேறாய வழி நாம்யாதுஞ் செய்யவலும். ஆகலான் இனி அவளெண்ணத்துக்கு மாறாக நாம் யாது செய்தபோதினும் அதுவீணாகுமென்றெண்ணி மன்மதன் வழியாய் நின்றியற்றும் காமசத்திக்குள்ளானவராய்க் காமமுடையார்போன்று அந்தக்ஷணத்திற்றானே சிங்காதனத்தை விட்டிழிந்து அந்தப்புரஞ் சென்று கதவையடைத்துவிட்டு உள்ளேசென்று தேவியைப் பார்க்க அவளங்கில்லாமையைக் கண்டனர்.

தேவியங்கில்லாமைக்குக் காரணமென்னையெனின்? காஞ்சிபுராதீசையான திரிபுராம்பிகை கைலாயமுதலிய தலங்கள்தோறும் இருக்கின்ற தனது அம்சமான கவுரி அம்சமாயிராநின்ற சக்திகளையெல்லாம் ஆகரிஷித்துக் கொண்டு காமாக்ஷி என்கிற ஏகசக்தி சொரூபமாக வீற்றிருந்தனளாதலால் ஸ்ரீகயிலாயத்தில் சிவபெருமானுருக்குத் தேவி கா்ணுமற் போயினர்.

பின்னர் பெருமானுர் கைலாயத்தை விட்டுத் தமதுநிலயமாகிய க்ஷேத்திரங்கடோறுஞ் சென்றுதேவியைப் பார்க்க எங்கும் இல்லாமையைக் காண்டலும் தேவிக்கு ராஜஸ்தானமாகிய காஞ்சி காமகோடிபீடத்திலு மில்லாதிருப்பளோவென்று காஞ்சிக்கு வந்து காமாக்ஷிதேவி அங்கு கவுரியாயிருத்தலைக்கண்டு அதிசயமுற்று இவள் சாக்ஷாத் கவுரிஎன்று நினைத்துத் தமக்குண்டாயிருக்குஞ் சத்திகாமந் தணியுமாறு சமீபித்தனர். மகா சிருங்கார மோகினி வடிவுடையவளாயும், தவரூபியாயும் அரியதவத்தைச் செய்பவளாயுமிருக்கின்றகவுரி பெருமான் சமீபித்துவருதலைக் கண்டு பிணக்குடையாள்போன்று அவரைப்பார்த்து, நீ யார் காமாதுரனுயிருக்கினுய்? இங்கு நீ யாது காரணமாய் வந்தனை? நீசங்கரனு? என்றுகேட்க, காமசத்திக்கு ஐக்கியராய்க் காமலீலையைவிரும்பியிருக்கின்ற பெருமானுர் ஹேகவுரீ! நீஎனக்கு மனேன்மனியாகிய பத்தினியல்லவா? நீஎனக்கு இஷ்டமான க்ஷேத்திரங்களையெல்லாம் விட்டு இவ்விடத்தில் பிரஹ்ம விஷ்ணுருத்திரர்கட்குக் காரணமான ஆதிசத்திபீடத்தில் மாத்திரம் வந்திருக்கிற காரணமென்னை? எனது குடும்பினியாயும், பிரியையாயும், எனது இதமானகாமங்களுக்கெல்லாம் சமனையாயும் இருக்கின்ற நீ இப்பொழுது என்னிடத்தில் கோபங்கொண் டிருப்பவள்போல வருந்துகின்ற காரணமென்னை? இவைகட்குக் காரணங்கூறி உன்னுலுண்டாகிய என்னுசையைத் தணிவிப்பாயென்று கூற, திரிபுராம்பிகை சிவபெருமானைப் பார்த்து உமக்கிப்போதுண்டாகிய

காமத்தைத் தணிவிக்கும் கவுரி நானன்று, காமசாந்திக்கு என்னை வேண்டு வதைவிட்டு மன்மதனை வேண்டுவீராயின் அந்தக்காமசாந்தி அவன்செய்துவைப்பானென்றபொழுது பெருமானுர் தேவி மன்மதனுக் குபகாரார்த்தமா யிருக்கும் மாறுக்கருணையை நினைந்து அவள் கருணையை மறப்பவர் போன்று மன்மதன்பால் யான் செல்லேன் என்று அம்பிகையினுடைய திருக்கரத்தைப் பற்றச் செல்லும் பொழுது அவ்வம்பிகை கோடிமன்மதர்களைத் தனது கடாக்ஷ வீக்ஷண்யத்தா லுண்டாக்கிப் பெருமான்மேல் ஏவினுள், அவர்கள் அச்சிவபெருமானைச் சூழ்ந்து போர்செய்யத் தொடங்கும் பொழுது அவர் ஒருக்ஷணத்துக்குள் கோடி உருத்திரர்களை யுண்டாக்கி அவர்கள்மேற் றூண்டினுர். அவர்கள் அந்தக் கோடிமன்மதர்களையும் பஸ்மீகரப்படுத்தினுர்கள். அதுகண்ட தேவி முன் மன்மதன் "இந்தப் போரில் நான்மடிய வருமாயின் என்னைமீட்டும் படைக்கவேண்டும்" என்று வேண்டிய வரத்தை எண்ணி மறுபடியும் கோடிமன்மதர்களைப் படைத்தனள். பெருமானும் மீண்டும் கோடி உருத்திரர்களைப் படைத்தனர். இவ்வண்ணம் பெருமானும் பெருமாட்டியும் உருத்திரகோடிகளையும், மன்மதகோடிகளையும் படைத்து இருவருக்கும் போர்மூட்டித் தாமிருவரும் சாக்ஷியாகவிருந்தனர். பின்னர் அவ்விருகோடியரும் அளவிடற்கரிய போர்புரியும்போது தேவியினுடைய லீலாசங்கற்பத்தால் மன்மதகோடிகள் உருத்திரகோடிகளை வென்றனர். அதுகண்ட மன்மதன் சந்தோஷித்தவனுய்த் தனது பஞ்சபாணங்களையும் உருத்திரதிபர்மேல் பிரயோகஞ்செய்யவெண்ணினன், அவனது எண்ணத்தையும் அவனெண்ணத்தை முடிக்கவெண்ணி யிருக்கும் தேவியினுடைய திருவுள்ளத்தையும் பெருமான் அறிந்தவராய் இருவரெண்ணம்போல் இசைவாராயினர்.

ஆகவே, மன்மதன் தானெண்ணியபடியே தாமரை அசோகு மா மல்லிகை நீலோற்பலம் என்னும் ஐவகைமலர்க

ளையும் முறையாக ஏவினான். அம்மலர்களைப் பெருமான் அழிக்கவேண்ணுமல் அங்கீகரிக்க வெண்ணித் தாமரையைத் தமக் காசனமாகவும், அசோகைத் தமது மேனிக்கழகு செய்வதாகவும், மாந்தளிரைப் பீதாம்பரமாகவும், மல்லிகையை மாலையாகவும், நீலோற்பலத்தை நெற்றிக்கண்ணுக்குககுளிர்ச்சிசெய்வதாகவுங்கொண்டு வீற்றிருக்க,மன்மதன் அன்று தாருகாவனத்தில் உம்மைவணங்காத முனிவர்களின் பத்தினிகளிடத்துப் பலிபாத்திர மேந்திச்சென றபொழுது நீர் பெற்றது என்னை ! இன்று அப்பலியேற்று அம்பிகைபாற் செல்வீராயின் நீர்வேண்டிய வற்றைப பெறலாமன்றோ என்று சொல்லவும் பெருமான்மகிழ்ந்து அது யான் இப்பொழுது செய்யத்தக்கதே நன்றுகூறினுயென்று அந்தக்ஷணமே மன்மதனுடன் அம்பிகைபால் பலியேற்கச்சென்றனர் அவரது கோலத்தைத் திரிபுராம்பிகை பார்த்து மன்மதனபீஷ்டம் நிறைவேறிற்றென்று திருவுளமகிழ்ந்து பெருமானே மன்மதனை யுத்தேசித்துச் செய்த நம்மிருவர் லீலைகளுமுடிந்தன. இனித் தேவரீர் கவுரியோடுகூடிக் காஞ்சாந்தியுடையவராயிருக்கலாம் என்று சொல்லித் தம்மாலுண்டாக்கப்பட்ட மன்மதர்களையும் அங்கமபெற்ற மன்மதனையுந்தம்முடைய காமகோடிபீடத்துக்கு நேராக ஆகாயத்தில் நக்ஷத்திரரூபமாக வசிக்கச் செய்து பராசத்திசொரூபத்தில் மறைந்தனள். பெருமானும் ஒட்டியாணபீடத்தில் காமரூபத்தைப் போய்ச் சேர்ந்தனர்.

மன்மதர்கள் நக்ஷத்திரரூபமாய்ஆகாயதத்தில் அவ்விடத்தில் வசிக்கின்றார்களாதலால் சூரியன்முதலிய நவக்கிரகங்களும் அந்தமன்மத மண்டலத்துக்கு நேராகவரும்பொழுது அவ்வழியாய்ப் போகாமல் பிரதக்ஷணமாய்ப் போகின்றனர். அக்காரணத்தால் காஞ்சிமண்டலம் நிசைமய்க்குடைய தென்றும்அம்பிகையினுலுண்டாக்கப்பட்டமன்மதர்களால் உருத்திர கோடிகள் ஜயிக்கப்பட்டார்களாதலால் ருதத்ரஜித்க்ஷேத்திரமென்றுஞ் சொல்லப்பட்டது.

இந்தச்செய்திக ளிங்ஙனமிருக்க, ஓர்காலத்தில் பிரஹ்மதேவன் பூலோகத்திலுள்ள ஸ்ரீகைலாயமுதலியசிவக்ஷேத்திரங்களைத் தெரிசிக்கவெண்ணித் தன்னுலகைவிட்டு பூவுலகை வந்தடைந்து கயிலாயமுதலிய க்ஷேத்திரங்களைத் தரிசிக்கும்பொழுது அம்பிகை ஓரிடத்தும் இல்லாமையைக் கண்டு இது வென்னகாரணமென்று தனது ஞானதிருஷ்டியால் எண்ணிப்பார்க்க இது காமாக்ஷிதேவிசெய்த லீலையென்று ஒருவாறுணர்ந்து அந்தக்ஷணமே காஞ்சி மண்டலத்துக்கு வந்து சிவக்ஷேத்திரங்க டோறும் சிவபெருமான் சாந்நித்தியமாயிருப்பது போல் அம்பிகையும் சாந்நித்தியமா யிருந்து காக்ஷிகொடுக்க வேண்டுமென்று திரிபுராம்பிகையைப் பிரார்த்தித்து வந்தித்துப் பலவாறாகத் துதித்து வழிபட்டு இருதயகமலத்தில் அம்பிகையைத் தியானித்துப் பன்னிரண்டு வருடம அரிய தவஞ்செய்துவந்தனன். இராஜராஜேஸ்வரி பிரமன்பால் கருணையுடையவராய்ப் பிரசன்னராய் ஓ பிரமனே! நாம மன்மதன் வேண்டியவாறே அனுக்கிரகஞ்செய்த அனுக்கிரகத்தைப் பரிபாலிக்கும் பொருட்டுச் சிவபெருமானுருக்குப் போகசக்தி உருவங் காணாதிருக்கச் சிவாலயங்கடோறும் கவுரியை இல்லாமற் செய்தோம். நீ தெரிசிக்க வேண்டுமாயின் எல்லா க்ஷேத்திரங்க டோறும் நீயேசென்று கவுரிபிரதிஷ்டைசெய்து சிவதெரிசனத்தோடு அம்பிகை தெரிசனமுஞ்செய்து மகிழக்கடவா யென்றனுக்கிரகஞ் செய்தனர்.

பிரமன் தேவியின் திருவாக்கைக்கேட்டுத் திருவடியில் வீழ்ந்து வணங்கி ஓ ஜகன்மாதாவே! இப்பொழுது இந்த க்ஷேத்திரத்தில் சிவாலயங்கடோறும் கவுரியாகிய அம்பிகையைத் தெரிசித்தல்லவோ ஏனையக்ஷேத்திரங்களுக்குப்போய் அம்பிகையைப்பிரதிஷ்டைசெய்து நான்தெரிசித்தல்வேண்டும். இங்குதெரிசிக்கும்வகை எப்படியென்றுவிண்ணப்பஞ் செய்யத் தேவி, இந்த க்ஷேத்திரத்தில் முன்னர் உருத்திர கோடிகட்கும் மன்மத கோடிகட்கும் நேர்ந்த யுத்தத்தில்

அவர் இங்குள்ள சூத விருக்ஷத்தடியில் கவுரி சகிதமாய்ச் சிவபெருமானுர் ஒட்டியாண பீடத்தில் சென்றனராதலால சோதிலிங்க சொரூபராய்வெளிப்படுவர் அப்பொழுது உன க்குக் கவுரியானவள் சூதலிங்கசகிதமாகக் காணப்படுவர்ள் என்றனர். அதுகேட்ட பிரமன் ஹே அம்பிகே! வருடந் தோறும் இந்த க்ஷேத்திரத்தில் சூதநாதருக்குத் திருக்கலி யாண மஹோற்சவம் நடத்தவேண்டுமே அதனை எந்த உபா யத்தினுல் நடத்துவது என்று விண்ணப்பஞ்செய்ய மஹா தேவி ஒருமுகூர்த்தகாலம் ஒன்றுஞ்சொல்லாது மவுனமா யிருந்து பின் சொல்லத் தொடங்கினுர்.

ஓ வாக்பதியே! இந்தக்ஷேத்திரத்திலுள்ள சிவாலயங்க டோறும் இருக்கத்தக்கசத்திகளெல்லாம்என்னிடத்திற் கல ந்திருக்கிற படியால் அச்சத்திகளெல்லாம் ஒரு சத்தியாய் ஒருருவாகி ஏகாம்பிகை என்னும நாமத்துடன் எனது நெற்றிக்கண்ணினின்றும் ஒரு க்ஷணத்துக்குள் சித்சோதி சொரூபமாய்த் தோன்றப் போகின்றுள். அந்த அம்பிகை பூர்வத்தில் ஏகாம்பரநாதரை ஏகாக்ர சித்தத்தோடும் தியா னிக்கவேண்டிய பாவனையால் அதிலாவண்ய சவுந்தரியத்து டன் தபோரூபியாய்த் தவஞ்செய்து பின்னர் நாயகனைக் கலந்து நித்திய கலியாணியாய் விளங்கினவள். ஆகலான் நீ என்னிடத்திற் றோன்றும் அந்தச் சோதிசொரூபமாகிய அம்பிகைபோலும் சுவர்ண்த்திலுற் செய்து என்னுடைய இந்த ஆலயத்தில் ஸ்திரமானவிடத்தில் ஸ்திரமாகத்தாபி தது விவாக காலங்கடோறும் அந்தஏகாம்பரநாதருக்கு அந்த அம்பிகையை விவாகஞ்செய்து வருவாய். அந்த அம்பிகையைப் போலவே விக்ரகங்கள் நிர்மாணஞ்செய்து அவைகளில் அந்த ஏகாம்பிகையை ஆவாகித்து இங்குள்ள சிவாலயங்க டோறும் மூலலிங்க சத்திகளாக அமைத்துச் சிவதெரிசனத்தோடு அம்பிகையையும்தெரிசித்துமகிழ்வாய் அந்தவிக்கிரக ரூபமா யிருக்கின்ற அந்த அம்பிகைகளன்றி வேறு மூலசத்திகள் இந்த க்ஷேத்திரத்தில் பிரதிஷ்டைசெ

ய்தல் கூடாது

ஓ கமலாசனனே! சுவர்னகாமாக்ஷியை ஏகாம்பரநாதருக்குக் கலியாணஞ்செய்தல் வேண்டுமென்று சொன்னேனல்லவா! அந்த முறைமையைக் கேட்பாய். ஏகாம்பரநாதருடைய கலியாணதினத்தில் இந்த ஆலயத்திலிருக்கும் சுவர்ணம்பிகையை ஏகாம்பரநாதருடைய ஆலயத்தில் எழுந்தருளச்செய்து விதிமுறையாக இருவருக்குங் கலியாணம் நடத்தி மறுநாள் சாயங்காலம் உற்சவகோலமாய் வீதியில் வலமாகவரச்செய்யும்போது கலியாணகோலத்துடன் விளங்கும் சுவர்ணம்பிகையை என்னுடைய ஆலயத்தில் எழுந்தருளச் செய்துவிட்டு அதன்பின்னர் கலியாணமூர்த்தியாகிய ஏகாம்பரநாதரை அவருடைய ஆலயத்தில் எழுந்தருளச் செய்தல்வேண்டும். பின்னர்சுவர்னகாமாக்ஷிதேவிக்கு அவளுடைய ஸ்தானமாகிய திருவஸ்தானத்தில் இரண்டுநாள் பூஜை முதலியவைகள் நடவாமற் போனபடியால் அதனுடைய பரிகார நிமித்தமாயுள்ள சாந்தியை யுத்தேசித்து வைதிக தந்திரானுசாரமாய்ச் சிடர்களோடு கூடியிருக்கும் தூர்வாச மகருஷிமுகமாகச் சஹஸ்ரகலசாபிஷேகமுதலிய பூஜோபசாரங்களை விசேடமாகச்செய்து அதன்பின்னர் நித்திய பூஜையை நடத்தி உனக்குவேண்டிய மனோரதங்களைப் பெறுவாயாக அதுபோலவே வருடந்தோறும் உற்சவம்நடந்து வரும்படியான மார்க்கத்தையும் தேடிவைத்துப் பின்னர் உனது உலகத்தையடைவாய் என்றனுக்கிரகஞ்செய்து பராசத்திசொரூபத்தில் ஐக்கியமாய்த் தம்மிடத்தில் ஐக்கியமாயிருந்த சகல க்ஷேத்திரவாசினிகளாகிய சர்வசத்திகளையும் அந்தந்த க்ஷேத்திரங்களிலும் எழுந்தருளியிருந்து யாவருக்குங் காக்ஷிகொடுக்கும் வண்ணம் செய்தனர். அதுபோலவே அந்தச் சத்திகளெல்லாம் அந்தந்த மூலபிம்பங்களிற் கலந்து பிரகாசித்தன.

சுவர்ன காமாக்ஷி ஆவிர்ப்பவம்.

கவுரியாகிய அம்பிகைக்குச் செய்யவேண்டிய கலியா

ணச்சடங்கு முதலியவற்றைப் பிரமதேவனுக்குத்திரிபுராம்பிகைகூறியபின்னர் அருளுடையநெற்றியினின்றும்சித்ஸ்வரூபிணியாய்க் கவுரி என்னும் அம்பிகை சோதிசொரூபமாய்ப் பிரசன்னையாயினள். அவ்வம்பிகையைப் பிரமதேவன்கண்டு அதிசயித்துப் போற்றி வணங்கி அந்தக்ஷணத்திற்றனே திரிபுராம்பிகை ஆஞ்ஞைசெய்த வண்ணம் சுவர்ணத்தினால் அந்த அம்பிகையைப் போலவே விக்ரஹ நிர்மாணஞ் செய்தனன்.

திருவுருவம்.

அன்றலர்ந்த தாமரைமலர் போன்ற இரண்டுகண்களையுடைத்தாயும், இரண்டுபுஜங்களையுடைத்தாயும், அவற்றுள் வலது திருக்கரம் கிளியைத்தாங்கி யிருப்பதாயும், இடது திருக்கரம் தொங்கவிட் டிருப்பதாயும், உதரம் திரிபங்கி (மூன்றுமடி)யோடு கூடினதாயும், தென்பாரிசம் வில்போலும் சாயலுடைத்தாயும், இடை நுண்ணியதாயும், ஏனைய உறுப்புக்களெல்லாம் தத்தமக்குரிய ஆபரண வகைகளாலே பிரகாசிப்பனவாயும், பீதாம்பரதரையாயும் விளங்கச்செய்தனன். இந்தக் கோலமாகத்தான் திரிபுராம்பிகையினுடைய நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய கவுரி என்னும் அம்பிகையினுடைய கோலமும் விளங்கிற்றென்று அறிதல் வேண்டும்.

ஆவிர்ப்பவித்த காலம்.

சுவேதவராககல்பம், ஏழாவதாகிய வுசுபம் என்கிற மன்வந்தரம்; தாமசகாலம், கிருதயுகம், ஹயக்கிரீவர் அவதாரகாலம், ஸ்ரீமுகவருஷம், சூரியன்துலாத்தி லிருக்குஞ் சமயம், கார்த்திகை மாதம், கிருஷ்ணபக்ஷம், தசமிதிதி சுக்கிரவாரவுதயம், பூர்வபல்குனிநக்ஷத்திரம், மத்தியபாகம், சூரியோதயகாலம் இந்தச்சுபதினத்தில் பராசக்தியினுடைய நெற்றிக்கண்ணினின்றுங் கவுரிதோன்றினள்

பிரதிஷ்டைசெய்தவரலாறு.

பிரமன் தனக்குக் காக்ஷி கொடுத்த அம்பிகையைப் போலவே சுவர்ணத்தினால் விக்ரஹஞ்செய்தமைத்த பின்னர்

அந்த விக்ரஹ மூர்த்தியைப் பிலத்துக்குத் தென்பக்கத்தில் த்ருவஸ்தானம் (நிலையாயுள்ளவிடம்) என்று ஒருபெயரிட்டு அந்த விடத்தில் பிரதிஷ்டை செய்து, பிரதிஷ்டை செய்த அந்த மாதமாகிய ஐப்பசி மாதந் தொடங்கி அந்த மாதத்துக்கு ஆறுவது மாதமாகிய பங்குனி மாதம் வரையில் விசேஷ நியாச பூர்வகமாய் மஹாபிஷேக நைவேத்திய பூஜோபசாரங்களை விசேடமாகச் செய்து வந்து ஏகாம்பர நாதருடைய கலியாண தினத்தில் சூதநாதருடைய ஆலயத்தில் எழுந்தருளச் செய்து இந்த அம்பிகைக்கும் அந்த ஏகாம்பர நாதருக்கும் வேதாகமோக்த விதிமுறையாக விவாக நடத்தி மறுநாள் கலியாண கோலத்துடன் உற்சவ நடத்தி ஏகாம்பரநாதரை அவருடைய ஆலயத்தில் எழுந்தருளும்படியாக அவருடைய பரிவாரங்களுடன் அவரை அனுப்புவித்து சுவர்ண காமாக்ஷியை அவருடைய ஆலயமாகிய த்ருவாலயத்தில் எழுந்தருளச் செய்து முன்சொல்லியவாறு சாந்தி அபிஷேக ராதி உபசாராதிகளை நடத்திப் பின்னர் ஓர்தாமரை மலரை எடுத்து அம்பிகையைத் தியானித்து ஆகாயத்தில் விட்டெறிந்தனன். அந்த மலர் ஆகாயத்திற் பட்டவுடன் சந்திரனுடைய அம்சமாக ஒரு சக்கரவர்த்தி வெளிப்பட்டு வந்தனன் அவனிடத்தில் அந்தப் பிரமதேவன் தான்செய்த கலியாணமஹோற்சவம் வருடந்தோறும் நடத்திவரும் வண்ணம் நாசமில்லாத தாகிய (தனபாத்திரம்) ஒன்றைக் கொடுத்து நீ இந்த உற்சவத்தை நடத்தி வர வேண்டுமென்று ஆஞ்ஞை செய்து ஆகாசபூபாலன் என்கிற நாமத்துடன் இந்த நகரத்தில் வர்ழக்கடவா, யென்று ஆசீர்வதித்து அவ்வரசனை அங்கிருக்கச் செய்து ஸ்ரீகாஞ்சி மண்டலத்திலும் பூமண்டலத்திலுமுள்ள சிவாலயங்க டோறும் சென்று அங்கங்கும் அம்பிகைகளைப் பிரதிஷ்டை செய்து சிவபெருமானுடனோடு அம்பிகைகளையுந்தெரிசனஞ் செய்து மகிழ்ந்து தன்னுலகமடையச் சேர்ந்தனன்.

இனிப் பிரமனுக்கு அந்தகத்வம் வர அதற்குக் கலைமகள் கூறிய பரிகார வியல்வருமாறு:—

பிரமதேவன் சத்தியலோகம் போய்ச் சேர்ந்தவுடன் இரு கண்களும் ஒளிமழுங்கிப்போய் அந்தகனாயினன். அதனால் அவன் மனவருத்த முற்றிருக்கும் பொழுது கலைமகள் எனது நாயகனே! உமக்கு நேத்திர பங்கம் வந்ததற்குக் காரணம் கூறுகின்றேன் கேளும். என்னையெனின் காஞ்சி க்ஷேத்திரத்தில் காமகோடி பீடத்தில் காயத்திரி மண்டபத்துக் கடியில் எதுவரையில் பிலாகாசமோ அதுவரையில் குண்டலினிக்கிரகமென்கிற நாமத்தால் பூர்வத்தில் சிவபெருமானால் நிர்மிக்கப் பட்டுள்ளது. அந்தவிடத்தை நீர் காலால் மிதித்து வந்தமையால் அந்தகத்துவம் வந்தது. இனி நீர் முன்போலவே அவ்விடத்துக்குப் போய் ஸ்ரீசக்கரபூஜையைச் செய்வீராயின் நிவிர்த்தியாய்விடும். இல்லாவிடின் இந்தக்கண் குருடு ஒருநாளும் நீங்காது. இதிற் சந்தேகமில்லையென்று கலைமகள் சொல்லியபொழுது பிரமன் இந்தவிதி உனக்கு எப்படி தெரியவந்ததென்று கேட்டனன். கலைமகள் ஓ சிருட்டிகர்த்தரே! சிவபெருமான் ஸ்ரீசக்கரபிரதிஷ்டை செய்யும் பொழுது இந்தஸ்ரீசக்கரபூஜையைருத்திரயாமளமென்னும் தேவி தந்திரத்திற் சொல்லியிருக்கும் முறையாகப் பூஜிக்கவேண்டுமென்றும் இந்தவிடத்தை மிதிப்பவர் கண்குருடாய்ப் போவார்களென்றும், அதற்குப் பரிகாரம் மீளவும் வந்து பூஜித்தால்தானென்றும் கூறியிருக்கின்றனர் ஆகலான் நீரும் போய்ச் செய்யுமென்று சொல்லப் பிரமதேவன் மகிழ்ந்தவனாய் அந்தக் கலைமகளுடன் காமகோட்டத்தை யடைந்து ஸ்ரீ சக்கரபூஜைசெய்து அந்தகத்துவம் நீங்கப் பெற்றுச் சுவர்ணகாமாக்ஷியைக் கண்ணாரக்கண்டுக் களிப்படைந்து எவனொருவன்காமகோடிபீடஸ்தானத்தில்காலை யதனை ஊன்றுகிறானோ அவன் குருடாகும் பாவத்தை யடைகின்றானோ அவன் இந்தச் சுவர்ணகாமாக்ஷி தேவியைத் தெரிசனஞ் செய்தமாத்திரத்தில் அந்தப் பாவத்தினின்றும் நீங்குவான். அந்தத் தெரிசனம் கிட்டாமற் போமாயின் ஸ்ரீசக்கரபூஜையை ருத்ரயாமள தந்திரத்திற் கூறியுள்ளபடிச் செய்வானாயின் அந்த

ப் பாவத்தினின்றும் நீங்குவான். என்று வரங்கொடுத்துத் தன்னுலகம் போய்ச் சேர்ந்தனன்.

இனிப் பிரமதேவன் தன்னுத்ம தேவியாகப் பூசித்த சர்வா ' னுக்கிரகமூர்த்தியாய் விளங்கும் சுவர்ணும்பிகைக்கும், த்ருவாதேவியாகிய தபஸ்காமாக்ஷிக்கும், பராசத்தியாகிய திரிபுராம்பிகைக்கும் காரணப் பெயர்களாயுள்ள பஞ்சநாம விவரணம் வருமாறு.

தேவிபேத பஞ்சநாம விவரணம்.

சுவர்ணுங்கி, சுகஹஸ்தை, சூதலிங்கவல்லபை, காமாக்ஷி தேவி, தர்மதேவி, இவ்வைந்து நாமங்களும் சுவர்ன காமாக்ஷி தேவியினுடைய நாமங்களாகும்.

தபஸ்வினி, கனஸ்யாமா (நல்லபசசை நிறமுள்ளவள்) சர்வ சைவாலயேஸ்வரி, காமாக்ஷி, சாளி, இவ்வைந்து நாமங்களும் தபஸ் காமாக்ஷி தேவியினுடைய நாமங்களாகும்.

திரிபுரை, ராஜராஜேஸ்வரி, மஹா காமேச வல்லபை, காமாக்ஷி, காமகோடி, இவ்வைந்து நாமங்களும திரிபுராம்பிகையாகிய பராசத்தியினுடைய நாமங்களாகும்.

இதனுல் பராசத்தியானவள் மூன்று விதமான கோலத்துடன் ஸ்ரீகாமகோடி பீடமாகிய ஆலயத்தில் வீற்றிருக்கின்றுள் என்றறிதல்வேண்டும்.

இனி அந்தப் பராசத்தியாகிய திரிபுராம்பிகையி னுடைய ஆத்ம நாதராகிய சோதிசொருபரான சூதலிங்க நாதருக்கும் அவர் அம்சமாகிய தழுவக்குழைந்த பெருமானுக்குங் காரணப் பெயர்களாகவுள்ள நாம விவரணம் வருமாறு.

சிவபேத பஞ்சநாம விவரணம்.

சூத ஜ்யோதி, நிர்க்குணுத்மா, சிவனுர், காமேஸ்வரர் ஏகாம்பரநாதர். இவ்வைந்து நாமங்களும் சூதலிங்கப் பெருமானுடைய நாமங்களாகும்.

இரசால லிங்கம், உருத்திரகோடி, சதாசிவனார், சகுண ர், ஏகாம்பர நாதர். இவ்வைந்து நாமங்களும் தழுவக்குழை ந்த பெருமானாருடைய காரணப் பெயர்களாகும்.

இனித் தேவியினுடைய அர்த்தாம்சமாகிய வரதராஜ ருடைய காரணப் பெயர்கள் வருமாறு.

விஷ்ணு பஞ்சநாம விவரணம்.

டஜ்ஞோத்பவர், புண்ணியகோடி, கஜேந்திரவரதர், தேவராஜர் அபீஷ்டவரதர். என்பனவாம.

காஞ்சி க்ஷேத்திரத்தில் பராசத்தியானவள் சததிசம்ப ந்தத்தால் மூன்று விதமான சத்தியாகவும், சிவசம்பந்தத தால இரண்டுவிதமான சிவலிங்க சொரூபமாகவும, விஷ்ணு சம்பந்தத்தால் * ஒருவிதமான விஷ்ணு சொரூபமாகவும் ஆக ஆறு விதமாகத தன்னுடைய லீலாவிநோதததால் வீற் றிருக்கின்றனள்.

இனிச் சிவசத்தி ஐக்யபூஜாவிதியின் வரலாறு.

லலிதாதேவி யானவள் சிவசத்தி ஐக்யரூபிணியாதலா ல் அந்தத் தேவியை நிர்க்குண பரமான சிவபாவனையாகவும சகுணபரமான சத்தி பாவனையாகவும் தியானிததுச் சிவசத் தியாத்மகமாக அருச்சிததல் வேண்டும். இவ்வண்ணம் பூஜி ப்பதே மேலான சாஸ்திரங்களுடைய சம்மதமும, அந்த லலிதாம்பிகைக்கு எப்பொழுதும் பிரியமாயுள்ளது மாகும. இவ்வுண்மை யறிந்து பூசிப்பவர் மங்கலத்தைப பெறுவர் இவ்வுண்மையறியாது சிவசத்திகளைப் பேதபாவனை பண்ணி, அந்த லலிதாம்பிகையி னிடத்தில் சிவ ஐக்கியபாவனையை யொழித்து சத்திபாவனை மாத்திரங் கொண்டு பூசிப்பவர் அமங்கலத்தைப் பெறுவர்.

தவ கோலமுடைய ஸ்ரீ காமாக்ஷி தேவியும், சிவசத்தி ஐக்ய பாவமாயிருக்கின்ற லலிதா தேவியுமாகிய திரிபுராம் பிகை யினுடைய சகுண சொரூபமாகலான் அத்தேவியைச்,

---

* வரதராஜர் சத்திசொரூபமென்பது முதலததியாயததிற்காண்க.

சிவசக்தி ஐக்கிய சொரூபமாகவே பூஜித்தல் வேண்டும். அவ்வண்ணம் பூஜிப்பதே அந்தத் தேவிக்கும் பிரியம். அதனையறிந்து அவ்வம்பிகையை அவ்வண்ணமாகத் தியானித்துப் பூஜிப்பவர் தாங்கள்வேண்டும் இஷ்டசித்திகளைப் பெறுவர்.

இதனால் லலிதாதேவியாகிய திரிபுராம்பிகையையும், அவளிடத்திற் றோன்றிய தபஸ் காமாக்ஷியையும் சிவசக்தி ஐக்கிய பாவனையாகவே தியானித்துப் பூஜித்தல் வேண்டுமென்றும், அங்ஙனம பூஜிப்போர் சர்வ மங்களத்தையும் சகலமான இஷ்ட சித்திகளையும் பெறுவரென்றுந் தெரிவித்தவாறாயிற்று.

பிரமதேவனால் நிர்மிக்கப்பட்ட மூன்றாவது திருவுருவமான கவுரியாகிய சுவர்ன காமாக்ஷி தேவி ஏகாம்பரநாதருடைய பத்தினியாய்த் தனித்து அவரது வாமபாகத்தில் உடனிருக்கப் பெற்றவரா தலால் இவ்வம்பிகையைச் சிவத்தோடு ஐக்கிய மாகவும், அந்தச் சிவரூபத்தை இந்தச் சத்தியோடு ஐக்கியமாகவும் பாவித்து இருவரையும் ஒன்றாகப் பூஜனை செய்தல்கூடாது. முன்னர் ஏகாம்பரநாதரையும் அதன்பின்னர் அம்பிகையையும் அருச்சித்தல்வேண்டும. இவ்வுண்மையுணராது கவுரியினிடத்தில் சங்கருடையபாவனையும், சங்கரரிடத்தில் கவுரிபாவனையும் செய்து பூசிப்பவர் ஜன்மங்கடோறும் நரகத்தை யனுபவிப்பவராவர் இருவரையுந் தனித்தனி அந்தந்தப் பாவனையாகவே செய்பவர் மங்களப் பிரதத்தை யடைவர்.

இதனால் சுவர்ன காமாக்ஷியாகிய கவுரியை சிவ ஐக்கியமாகப் பாவித்துப் பூஜனை செய்யாது தனியாகச் சத்திபாவனை யமாத்திரஞ்செய்து பூஜித்தல் வேண்டுமென்றும், அங்ஙனம் பூஜிப்பவர் மங்களத்தை யடைவாரென்றும், ஐக்கிய பாவனையாற் பூஜிப்பவர் நரகமடைவாரென்றும் தெரிவித்தவாறாயிற்று.

இனி இரண்டு சத்திகளை ஒருவிதமாகவும், ஒருசத்தியை மற்றொருவிதமாகவும் பூஜித்தற்குக் காரணம் வருமாறு.

பூஜையாகிய ஆராதனை - நிர்க்குணபரமான ஆராதனை, சகுணபரமான ஆராதனை என இருவகை. நிர்க்குணாராதனை சிரேஷ்டமெனவும் சகுணாராதனை கவுண மெனவுஞ் சொல்லப்படும். நிர்க்குணமாயுள்ளது சிவமாதலால் அந்தச் சிவபரமாயுள்ள சத்தியைச் சிவசத்தி ஐக்கியமாயாராதித்தல் நிர்க்குண ஆராதனை எனவும், சகுணமாயுள்ளது சத்தியாதலால் அச்சத்தி பரமாயுள்ள சத்தியை யாராதித்தல் சகுண ஆராதனை எனவுஞ்சொல்லப்படும். எங்ஙனமெனின், லலிதா தேவியாகிய திரிபுராம்பிகை நிர்க்குண சொரூபமாயுள்ள சோதிலிங்கத்தோடு ஐக்கியமா யிருப்பவளாதலாலும், தபஸ் காமாக்ஷியானவள் நிர்க்குண சோதிலிங்க ஐக்கியமாயுள்ள அந்தத் திரிபுராம்பிகையி னுடைய நெற்றியிற் றோன்றின வளாதலாலும் அவ்விருசத்திகளும் நிர்க்குண சோதிலிங்க பரமாயுள்ளவர்கள். அவ்விரண்டு சத்திகளையும் சிவசத்தி ஐக்கியபாவனை யாகிய நிர்குண ஆராதனையால் பூஜித்தல் வேண்டும். சுவர்னகாமாக்ஷி, விவாக வுற்சவத்திற்கு அங்கமாக லலிதாதேவியாகிய நிர்க்குணசத்தியினின் றுந் தோன்றிய சகுண ரூபியாகிய தபஸ்காமாக்ஷியே சுவர்ணகாமாக்ஷியாக வந்தனளாதலால் அந்தக் காமாக்ஷியைச் சகுண ஆராதனையால் பூஜித்தல் வேண்டும்.

இதனால் காஞ்சிகாமகோடி பீடத்துக்கிசையாய் வீற்றிருக்குந் தேவியார் இருவினைப் பட்டுழலும் ஆன்மகோடிகள் வேண்டும் போகங்களைக்கொடுத்து அவர்கட்கு அவ்விருவினை யொப்புவருவித்தற்குப் போகமூர்த்தியாகிய சுவர்ன காமாக்ஷியாகியும், இருவினை யொப்புவாய்ந்த ஆன்மாக்கள் வேண்டும் தவநெறிகளைக் கொடுத்து அவர்கட்கு மலபரிபாகம் வருவித்தற்கு யோகமூர்த்தியாகிய தபஸ்காமாக்ஷியாகியும், மலபரிபாகம் வந்தஆன்மாக்கள் வேண்டும் மெய்ஞ்ஞான முறைகளைக்கொடுத்து அவர்கட்குச்சத்திநிபாதம் வருவித்தற்குஞானமூர்த்தியாகியலலிதாதேவியாகியதிரிபுராம்பிகை யாகியும் இவ்வண்ணம் ஆன்மாக்கட்கு உண்டாகவேண்டிய

இருவினையொப்புமலபரிபாகம் சத்திநிபாதம் என்னுமூன்று, மிருட்டிப்பட்டுள்ள எல்லாவான்மாக்கட்குமேககாலத்தில் உண்டாவதன் றாகலான்; இருவினையொப்புவருவதற் கேது வான ஆன்மாக்கள் சிலவாயும், மலபரிபாகம்வருவதற் கேது வான ஆன்மாக்கள் சிலவாயும், சத்திநிபாதம்வருவதற்கேது வான ஆன்மாக்கள் சிலவாயும் இருப்பன. ஆகவே எவ்வவ் வான்மாக்கள் எவ்வக் காலங்களின் எவ்வவற்றை வேண்டு கின்றார்களோ அவ்வவற்றை அவ்வவர்களுக்கு அருளிக் கொண்டேவரப் போகமூர்த்தியாயும், யோகமூர்த்தியாயும், ஞான மூர்த்தியாயும் விளங்கு கின்ற ளென்றும், இந்த மூன்றனுள் யோகமும் ஞானமும் ஒன்றுக்கொன்று சம்பந்தமாய் நிற்பவாகலானும், போகம் இவற்றின் வேறாய் நிற்பதாகலானும், இம்மூன்றும் நிற்குமுறை போலவே யோகப்பிர தமாகிய தபஸ்காமாக்ஷியும், ஞானப்பிரதமாகிய திரிபுராம்பி கையும் ஒரு சம்பந்தமா யுள்ளாரென்றும், போகப் பிரதமா கிய சுவானகாமாக்ஷி வேறாய்த் தனித்து நிற்பவளென்றும், இதுபோலவே சிவமும்யோகஞானபரமான சத்திகளிடத்தி ல் வேறாகாமற் கலந்தும், போக பரமான சத்தியினிடத்தில் கலவாது வேறாயும் இருப்பதென்றும் உணர்த்தி அக்காரண த்தால் யோகஞான சத்திகளைச் சிவசத்தி ஐக்கியபரமான நிர்க்குணவாராதனையால் பூஜித்தல் வேண்டுமென்றும், போ கசத்தியைச் சிவசத்தி பேதபரமான சகுண வாராதனையால் பூஜித்தல் வேண்டுமென்றும் விதித்ததெனக் கொள்க.

அதனால் வேதவித்துக்களா யுள்ளவர் போக யோக ஞா னப் பிரதமான மூவித சத்தி பிம்பங்களையும் இதுகாறுங்கூ றிவந்த முறைப்படி அந்தந்தப் பேதமாகவே பூசிப்பார்களே யல்லாமல் எல்லாம் ஒரு சத்திதானென்று எல்லாப் பிம்ப ங்களையும் நிர்க்குண பரமான ஆராதனையாலாவது, சகுண பரமான ஆராதனையாலாவது செய்யார்.

இதுவுமன்றி பிம்பபேதம் போலவே யந்திரபேதங்களு முண்டு. ஆகலான் இவைகளை அந்தந்தப் பிம்பங்களுக்குப்

யந்திரங்களுக்கும் உரிமையாய் விதித்திருக்கும் மந்திரபேதங்களையும் தந்திரபேதங்களையும் நன்றாயுணர்ந்து பூசைகளையாவது உற்சவங்களையாவது செய்தல் வேண்டும். அங்ஙனம் செய்வாராயின் அவை அவர்களுக்கு மங்களத்தையே செய்யும்.

மந்திரபேதங்களையும், தந்திரபேதங்களையும் அறிந்து செய்ய வேண்டு மென்பது என்னை யெனின்? பராசத்தியானவள் காஞ்சிக்ஷேத்திரத்தில் மூன்றுவிதமான சத்திபேதமாகவும், இரண்டுவிதமான சிவபேதமாகவும், ஒருவிதமான விஷ்ணு பேதமாகவும், காணப்படும் ஆறுவிதமான பிம்ப பேதங்களில் ஆறுவிதமான பேதங்களாகவே கலந்திருக்கின்றா ளாதலால் அருச்சனை செய்யுங்கால் அந்தப்பேதங்களையறிந்து மந்திரதந்திரங்களைச் செய்யவேண்டு மென்று விதித்ததென்க.

ஆறுவிதமாவன:— திரிபுராம்பிகையில் சோதிரொரூபமாயிருக்கின்ற பூரணசத்திஸ்வரூப மாகவும், தபோரூபிணியாகிய காமாக்ஷியினிடத்தில் கலாரூபமாகவும், கலியாண கவுரியினிடத்தில் கலியாணகோலத்துக்குரிய அங்கஸ்வரூபிணியாகவும், நிர்க்குண சூதசோதிலிங்கத்தில் நிர்க்குணையாய் நிர்க்குண சிவசொரூபிணியாகவும், தழுவக்குழைந்த பெருமானாய் வந்த சகுணலிங்கத்தில் சகுணையாய்ச் சகுண சொரூபிணியாகவும், பிம்பசத்தி வடிவத்தினுடைய அர்த்தாம்ச சொரூபமாயிருக்கின்ற வரதராஜ மூர்த்தியினிடத்தில் புருஷரூபமாகவும பராசத்தியானவள் விளங்குகின்றாள்.

இந்த ஆறுவிதமான மூர்த்திபேதங்களிடத்தில் ஆறுவிதமானஅம்சங்களாகவிருக்கும் பூரணம்சமான பராசத்தி வீற்றிருக்கும் காமராஜ பீடமாகிய காமகோடி பீடத்தை எவன் தெரிசிக்காமற் போகின்றானோ அவன் வியர்த்தனாய் நரகாஸ்ரய மடைகின்றான். எவன் தெரிசிக்கின்றானோ அவன் தன்யனாய்ச் சீவன்முக்தனாகின்றான். இதிற் சந்தேகமில்லை.

மந்திர தந்திர பேதங்களை யறிந்து மூர்த்தி பேதங்களை ஆராதனை செய்ய அசக்தனாகிற பக்ஷத்தில் கவுளாகமத்திற் சொல்லியபடி திரிகோணாகாரமாயிருக்கிற ஸ்ரீ சக்ரத்தில் பூர்வ கோணத்தினுடைய அக்ரத்தில் குரு, பரமகுரு, பரமேஷ்டிகுரு, பராத்பரகுரு, என்கிற மானவெள்ளகாளாகிய, ஆசாரியர்களைப் பாவித்துப்பூஜனைசெய்தும், மஹா காமேஸ்வரி கூடத்தில்ஸ்ரீ வித்தைதனையநினைத்து அஷ்டோத்தரசஹஸ்ரநாம முதலிய அர்ச்சனைப் பேதங்களால் அர்ச்சனைகளைச் செய்தும், வாக்பவகூடத்தில் ஸ்ரீ வித்தியா மந்திரத்தைஜபித்தலையுஞ் செய்வானாயின் அவன் அந்தத் தரும நெறிகளால் அன்னபானாதிகளுக்கு யாதொரு குறைவின்றிச் சந்தோஷசித்தனாய் வாழ்வான். இந்த விதமாய் ஸ்ரீசக்கர பூஜையுஞ் செய்யக் கூடாதவன் அந்தரங்க பக்தியுடன் ஸ்ரீகாமாக்ஷி தேவியினுடைய சரணகமலங்களைத்தியானஞ் செய்யக்கடவன்.

இங்ஙனம் சொல்லிவந்த முறைமையில் ஒருவன் சன்மமெடுத்து மரணமடைவதற்குள் யாதானும் ஒருமுறையில் ஸ்ரீ காஞ்சியில் காமகோடி பீடத்தில தேவியை வழிபடல வேண்டும். வழிபடுவானாயின் அவனுக்குப் புனர் ஜன்மமும் மரணாவஸ்தையும் உண்டாகா. அவ் வழிபாடில்லாதவன் ஒரு பிரம கற்பபரியந்தம் கிரிமியாகவே பிறப்பான். ஆகலான் தனதிற்சிறந்த அரசன் முதலாயினோர் ஸ்ரீ வித்தையினுடைய அருச்சனையை அவசியஞ் செய்தல்வேண்டும. அங்ஙனஞ் செய்வோர்க்கு வேண்டியவை கொடுக்கவே ஸ்ரீகாமாக்ஷி தேவியானவள் காஞ்சி க்ஷேத்திரத்தில் காமகோடி பீடத்தில் பிரசன்னையாயிருக்கின்றாள்.

பூர்வத்தில் மஹாலக்ஷ்மி, ஹயக்கிரீவ முனிவர், மநுச்சக்ரவர்த்தி, தசரதச்சக்ரவர்த்தி, துண்டீரமஹாராசன், காந்தாரமஹாராசன், சோழமஹாராசன், உருத்திரார்ஜுனந்தன் முதலாயினோர் தேவியினுடைய பூஜை அருச்சனை ஜபங்களைக் கர்த்தவ்யமாகக் கொண்டு செய்திருக்கின்றனர்.

ஆராதனை செய்தவர் விரலாறு.

இலக்ஷுமி.

பூர்வம் அமிர்தங் கடைந்தகாலத்தில் வெண்ணிற மா யிருந்த விஷ்ணுமூர்த்தி விஷமுண்டான பின்னர் நீலநிற முடையராயினர். அப்பொழுது அவர்மார்பிலிருந்த இலக்ஷுமிதேவி அவருடைய கருமைநிறத்தைப்பார்த்தும்பொன்னிறமாயிருக்கின்ற எனக்குக் கருமை நிறமடைந்திருக்கும் நீர் இனிப்பிரியமாக மாட்டீர். என்று பரிகாசமாகச் சொல்ல அவர்கோபங்கொண்டவராய் ஹே லக்ஷுமி! நீ மிக அழகியோ ! சிகப்பியோ! இனி நான் வெறுக்கதக்க கரம்பியாயும், கிழவியாயும் போகக்கடவாய் என்றுசபிக்க, லக்ஷிமி அந்தச்சாப மேற்றவளாய்க் காஞ்சியில் காமகோடி பீடத்தையடைந்து மகாலக்ஷுமியாகிய மஹாதேவிக் கெதிராக வந்து பணிந்து நின்றனள். அந்த லக்ஷுமியைத் தேவிபாரத்து உனக்கு இரதநிறமும் கிழத்தனமும் எங்கிருந்து வந்தது? நீ விஷ்ணுவினுடைய இருதயத்திலிருந்து பூஜிக்கப்பட்டது போல் இனி எனக்கு அங்கமாயிருக்கிற இந்தக்காயத்திரிமண்டபத்தில் வடது பக்கத்தில் சாந்நித்யமாயிருந்து பக்தாபீஷ்டப் பிரதாயினியாக விருப்பாய். அன்றியும் எனக்குப் பிரியையாயிருக்கிற உன்னை யாரொருவர் பாதமுதல் உச்சிவரையில் தொட்டுந் தியானித்துந் தெரிசித்துஞ் செல்கின்றார்களோ அவர்களுக்கு நீ அஷ்டைஸ்வரியமுங் கொடுத்துவருவாய் என்று ஆஞ்ஞைசெய்ய அந்த ஆஞ்ஞையைப்பெற்று எப்பொழுதும் அவ்விடத்திலேயே இருப்பவளாக அந்த லக்ஷுமிதேவியாயினள்.

ஹயக்கிரீவர்.

பூர்வத்தில் ஹயக்கிரீவமுனிவர் விஷ்ணுரூபத்தை யடைய வேண்டிக்காமகோட்டத்தை யடைந்து காமாக்ஷிதேவியைப்பூஜித்து இருதயத்தில் தியானித்துத்தவம் புரிந்துவந்தனர்

அந்தச்சமயத்தில் பதுமநாப னென்னும் ராக்ஷசன் அங்கு வர அவன் அவரைக் குதிரை என்று நினைத்துத் தனக்கு வாகனமாகக் கொள்ளவெண்ணிப் பாதலத்துக்குக்கொண்டு போயினன். அவனை அம்பிகைகொன்று அவர்வேண்டியவண்ணம்விஷ்ணுமுகத்தைக் கொடுத்தனள். பின்னர் ஹயக்கிரீவர் பாதாளத்திலிருந்த ராக்ஷசர்களையெல்லாங்கொன்றுசுக்கிராசாரியரால் நிர்மிக்கப்பட்டிருந்தகுறைவுபடாத அமிர்தகலசத்தைக்கிரகித்துக்கொண்டு, உடனே காமகோட்டத்துக்குவந்து திரிபுராம்பிகைக்கு அபிஷேகஞ் செய்து ஆராதித்து அம்பிகைக்குத் தக்ஷணபாகத்தில் இருந்துவிட்டனர்.

மநுவின்.

பூர்வத்தில் எட்டாவதாகிய மநு, சூரியபகவானால் கொடுக்கப்பட்ட பூவுலகைப்பெற்று அரசுபுரிவதற்கு அறியவேண்டுவனவாகியபுண்ணிய பாவங்களைமுன்னர் நன்குணரவேண்டுமென் றெண்ணி இராஜ்யத்தைச் சுமந்திர னென்கிற மந்திரியினிடத்தில் ஒப்புவித்து வசிட்டமுனிவரிடத்தில் விடைபெற்று, காமகோட்டத்தை யடைந்து அங்கிருந்த தூர்வாச முனிவரிடத்தில் தேவிமந்திரோபதேசம் பெற்று அந்த மந்திர முறைப்படியே தேவியினுடையஆராதனமும் தியானமுஞ்செய்தலாகிய அரியதவத்தைஇயற்றிவந்தனன். ஒருநாள் காமாக்ஷிதேவி கலைமகளுருவங் கொண்டு ஓர் கும்பத்தில் உலகாணிதீர்த்தமாகிய பஞ்சதீர்த்தத்தை நிறைத்து அந்த மநுவுக்கெதிரில் பிரசன்னையாய் அந்ததீர்த்தத்தை அவன் சிரசின்மேல் அபிஷேகஞ்செய்துசகலகலைகளும் உணரும் வண்ணமநுக்கிரகஞ்செய்து அந்தர்த்தான மாயினர். பின்னர்மநுச்சக்ரவர்த்தி கலைமகளுக்குச் சமானமாகச் சர்வசாஸ்திரபாரங்கதனாய்த் தன்னகரம்போய்ச் சேர்ந்து நீதிவழியே செங்கோல் செலுத்தி வாழ்ந்திருந்தனன்.

தசரதச் சக்ரவர்த்தி.

தசரதச்சக்ரவர்த்தி யானவர் புத்திரப் பேறு வேண்டி வசிட்டருடைய ஆஞ்ஞையின் பிரகாரம் தீர்த்தயாத்திரை

யை விதி முறையாக நடத்திக் காமகோடி பீடத்துக்கு வந்து திரிபுராம்பிகையைத் தரிசித்துப் போற்றி வணங்கிப் பூசித்து வந்தனன். ஓர்நாள் ஆகாசவாணியானவள் ஓ அரசனே ; உனக்கு இன்னும் ஒரு வருஷத்தில் நன்மக்கட் பேறுண்டாகும் என்று கூற அதனை அரசன் கேட்டு மகிழ்ந்து தநநகரம்போய்ச் சேர்ந்து மக்கட்பேறு பெற்றனன்.

துண்டீர மகாராஜன்.

பூர்வத்தில் பிரமதேவனால் ஆகாயத்தினின்றும் சந்திராம்சமாக வருவித்த (ஆகாயபூபதி) யானவன் தருமத்துக்காக நியமித்திருந்த திரவியங்களை யபகரித்துக் கொண்டு புத்தமதத்திற் புகுந்து தெய்வ பக்தியிழந்து போயினன். அந்தப் பாவத்தால் புத்திரப் பேறற்றவனாயினன்.

பின்னர் பூர்வ புண்ணிய விசேடத்தால் கோரக்ஷ சித்தரை யடையப் பெற்று வேதபாஹ்ய மாகிய புத்ததருமங்களைக் கை விட்டு வேதத்துக்கு அந்தரங்க மாகிய தருமங்களை யுபதேசஞ்செய்யப் பெற்றுப் பின்னர் புத்தக்கூட்டங்களையும் அவர்களுக்குக் குரு க்கண்மாரா யுள்ளவர்களையுந் தனது நாட்டிலிரா'வண்ணம ஓட்டி நீதிவழியே செங்கோல் செலுத்தி அம்பிகையின் மந்திரோபதேசமும்பெற்றுக் காஞ்சிமண்டலத்திலுள்ள சகலக்ஷேத்திரங்களையும் ஜீர்ணோத்தாரணஞ் செய்து தேவியினிடத்தில் மிகுந்த அன்பும் ஆராதனையு முடையவனாய் அந்தத் தேவிபரமாகவே தனது வாழ்நாளைச் செலுத்தி அந்தத் தேவியினுடைய சகலதருமங்களையும் மிகச்சிறப்பாகநடத்தி வந்தனன். மஹாதேவியாகிய காமாக்ஷி தேவியானவள் அந்த அரசனுடைய தருமபரிபாலனத்துக்கு மகிழ்ந்தவளாய்த் தனது மூத்தபிள்ளையாகிய கணேச மூர்த்தியைப பார்த்து எனது அன்பனாகிய ஆகாசபூபதி அபுத்திரவான் என்கிற வசையைப் பெற்றுள்ளானாகையால் அவ்வசை நீங்குமாறு நீ அவனுக்குப் புத்திரனாகப்

போவாயென்று கட்டளையிட, கணேசமூர்த்தி யான் உலகி லே யாவராலும் பிள்ளையார் - பிள்ளையார் என்றே துதிக்கப் பட்டவனா யுள்ளேன். அப்பேரையுடையவனா யிருக்கின்ற யான் உனக்கன்பனா யிருக்கின்ற அவனிடத்துப் பிள்ளையா ய்ப் போயிருத்தலடாதா? யான்போகின்றேனென்று விடை பெற்று அவன்பால் வந்து ஓ அரசனே! ஸ்ரீகாமாக்ஷிதேவியி னுடைய கிருபையினால் நான் உனக்குப் புத்திரனாகவிருக்க வந்துள்ளேனென்று சொல்ல, அரசன் அம் மதுரமொழி யைக்கேட்டு அடங்காப் பேரின்பமுற்றுத் தன்மனையாள்பா ல் நடந்தசெய்தியைக் கூற அவள் ஈன்றவளினும் பெரிதுவ ந்து அணைத்து மார்போ டணைக்கும் போழ்து கணேசப்பெ ருமான் அன்றுபிறந்தபிள்ளைபோலாயினர். அரசன்அக்கு ழந்தைக்குச் செய்யவேண்டிய சடங்குகளனைத்துஞ் செய்ய வெண்ணி அன்றுமுதலாக நடத்திவந்து பன்னிரண்டாநாள் சாத கன்மாதிகளை நடத்தவேண்டித் தமபதிசமேதனாய் ஸ் நானாதிகருமங்களைமுடித்துக்கொண்டு தேவிசந்நிதானத்துக் குச் சென்று அவ்விடத்தில் முன் நடத்தவேண்டிய பூஜை அர்ச்சனை ஓமம முதலிய யாவும் விதிமுறையாகவும் அதிக சிறப்பாகவும் நடத்திப் பின்னர் பிராஹ்மணன் உண்டு மகி ழும ண்ணம உச்சிபொழுதில் சமாராதனை நடத்திவரும் பொழுது அகஸ்மாத்தாய்ப பொன்மாரி ஒரு முகூர்த்தகா லம பொழிநதது. அநத அதிசயத்தைக் கண்ட அரசன் அதன காரணம் இன்னதென அறிய வேண்டி அங்குவந்தி ருந்த ஸ்ரீவதஸர் என்கிற முனிவர் முதலாயினாரைப் பணிந் து இது என்ன அதிசயம் என்று கேட்க, அம்முனிவர்கள் அதன் காரணத்தைச் சொல்லமுடியாமல் மயங்கிக் கொண் டிருக்கும்பொழுது மஞ்சத்தில் பன்னிரண்டுநாள் குழந்தை யாகவிருந்த கணேசமூர்த்தி மஞ்சத்தைவிட்டுக் கீழேதவழ்ந் து போஜனஞ்செய்து கொண்டிருக்கும் பிராஹ்மண ஸ்திரீ களுடைய மத்தியிற்போய்த் தன்பிதாவாகிய அரசனுடை ய முகத்தைப்பார்த்து ஓ தந்தையே! இதன்காரணத்தை யான் சொல்லுகிறேன்.. பிராஹ்மண போஜனத்துக்காக உ

ன்னால் (பார)அளவாக வைக்கப்பட்டிருந்த பயரில் உனது சொத்தாயுள்ள பொன்னில் ஒரு பயரளவுபொன் கலந்துவிட்டது. சமையல்காரர் அதனையறியாமல் பயருடன் அந்தப்பொன்னையுஞ் சமைத்து மோதகமாகச்செய்து பிராஹ்மணபந்தியிற் படைத்தார்கள். உன்னுடைய இஷ்டதெய்வமாகிய ராஜராஜேஸ்வரி என்னும் காமாக்ஷிதேவியானவள் ஸ்திரீகளுடைய பந்தியில் தானும் ஒருஸ்திரீயைப்போல் உருவங்கொண்டு புசித்துவரும்பொழுது அவளுடையஉதரத்தில பொன்கலந்திருந்த மோதகமொன்று போயிற்று. அந்த மகிமையினால் உன்னுடைய ராஜ்யமாகிய இந்தக் காஞ்சிக்ஷேத்திரத்தில் பொன்மாரி பொழிந்தது. அந்தத்தேவியும பந்தியில் போஜனஞ் செய்து கொண்டிருக்கிறாள். நீயும்பார்க்கலாம் என்றனர். அரசன் அகமகிழ்ந்து ஆனந்தபரவசனாய்க் குழந்தை யுருவாயிருக்கும் கணேசமூர்த்தியை அழைத்துக் கொண்டு ஸ்திரீகளுடைய பந்தியிற போய்த் தேவியினுடைய சமீபத்தினின்றபொழுது அம்பிகை அரசனோபாததவுடன் மறைந்துவிட்டனள். கணேசமூர்த்தி அம்பிகையுண்டருளிய பரிகலத்தி லிருந்த சேடங்களை யுண்டு சர்வசாஸ்திர பாரங்கதராய்ப் பிரகாசிக்க, ஏனைய அந்தணரும் அரசரும் அம்பிகையினுடைய சேடமேயலலாமல் கணேசருடைய சேடமுங் கலந்திருந்த அந்தசசேடத்தையுண்டு சகலகலா வல்லியினுடைய கிருபைக்குப் பாத்திரராய்ச் சகலகலா வல்லபராயினர்.

அதன் பின்னர் யாவரும் தேவியினுடைய கடாக்ஷம் பெற்றிருக்கிற ஆகாச பூபதியினுடைய குமாரராகிய கணேசரிடத்திற் குருபாவனையுடையவராய் அவருக்குத் "துண்டீரப்பிரபு" என்கிற திவ்ய நாமகரணஞ் செய்து, அதன் பின்னர் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்துமுடித்து அந்தப்பொழுதே இனி இந்தத் துண்டீரமகாராஜாவுக்கு ராஜ்யபட்டாபிஷேகமுஞ் செய்ய வேண்டுமென் றெண்ணி காமாக்ஷி வீற்றிருக்குங்கநிதானத்தில் பஸ்சிமாபி (மேற்கு)

ரூபமாகக் கணேசமூர்த்தியாகிய துண்டீரரை எழுந்தருளிவி த்து இராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்து காஞ்சிமண்டலத் தை அவர் வசமாக்கினர்.

இனித் துண்டீரருடைய சந்நிதானத்துக் கெதிரில் போகும்போது மவுனமாய்ப் போகவேண்டிய வரலாறு,—

காஞ்சி மண்டலாதிபதியாய் அரசாள வந்த கணேச மூர்த்தி துண்டீரனென்னும ராஜகோலத்துடன் தேவியினு டைய ஆலயத்தில் இரண்டாவது ஆவரணத்தில தேவியினு டைய தரிசனவிசேஷமாகச்சந்நிதானத்தில்வீற்றிருந்துகிரு தயுகத்திலசாக்ஷாத்கணேசமூர்த்தியாகவே இருந்தும, திரே தாயுகத்தில் தேவயோனி சம்பந்தமான அம்சத்திற் கலந்து ம், துவாபரயுகத்தில மநுக்களுடைய அம்சத்திற் கலந்தும், ராஜ்யபரிபாலனஞ் செய்துவந்து கலியுகத்தில் விக்கிரகரூப மாய்ப் பிரதிஷ்டை செய்திருக்குந் தனது பிம்பத்திலயாவா கண்ணுக்குந் தோன்றாத தேஜோரூபமாகக் கலந்து தேவி யைத தியானித்துக் கொண்டிருக்கின்றாராதலால் அந்த இ ரண்டாவது ஆவரணத்தில் அவருக்கெதிரிற் போகும்போது அவரது தவத்துக்குவிரோதமில்லாவல் ராஜசமுகத்திற் போ கும்போது மவுனமாய்ப் பயந்து போவதுபோல் மவுனமாய்ப் போதல் வேண்டும. மவுனமாய்ப் போகாமல் வசனித்துக் கொண்டு போவாராயின் காமாக்ஷி தேவியைத தெரிசனஞ் செய்த பலனை யிழந்தவராவர். மவுனமாய்ப் போவாராயின அந்தத் தெரிசன பலத்தையும், அரசாங் கத்தாற் சுகமும் பெறுவர்.

சோழராஜன்.

பூர்வம் காவேரி தீரத்தில் சோழ நாட்டில் அரசாண் டிருந்த விருஷ வம்சத்தில் உற்பவித்த வீரசோழ மகா ராஜ குமாரனாகிய விக்கிரம சோழன் சல்லியாபிதன் என்கிற சகோதரன் தன்னுடைய ராஜ்யத்தை யபகரித்துக் கொள் ளத் துக்கமடைந்தவனாய் ராஜ்யம் ஆளுவதில் அன்பற்று அரசாக்ஷியை வெறுத்துத் தன்பத்தினியை யழைத்துக்

கொண்டு தேசசஞ்சாரியாய் வரும்போழுது தெய்வக்தியா க் காமகோட்டம் வந்துசேர்ந்து நந்தனவனங்கள் வைத்து விர்த்திசெய்து நாடோறுந் தவராமல் மலர்களைக் கொய்து யானைத் துதிக்கைபோலும் மாலைகளைக்கட்டிக் காமாக்ஷிதேவிக்குச் சமர்ப்பித்துத் தியானித்து வழிபட்டு வருதனன் தேவியினுடைய கிருபையால் பெண்குழந்தையொன்று பிறந்து நாளொருமேனியாய் வளர்ந்து அங்கங்களெல்லாம் அழகுநிறையப் பெற்றிருக்கு நாளில் பாண்டிநாடாளும் குலசேகர பாண்டியன் தன் மகனுக் குரியபெண் வேண்டுமென்று எல்லாவரசர்கட்குந தெரிவித்தனன். ஒருநாள் அவனுடைய கனவில் காமாக்ஷி தேவியானவள் சென்று, ஓ அரசனே! என்னுடைய காஞ்சி நகரத்தில் விக்கிரமசோழனென்றஅரசன் தன்ராஜ்யத்தைவிட்டுத்தன்பத்தினியுடன் தேசசஞ்சாரியா யிருந்து பின்னர் காமகோட்டத்தை யடைந்து எனனிடத்தில் பக்கவன்புடன் வந்தனை வழிபாடுகள் செய்து வருகின்றனன். அவனுக்கு என்னுடைய கிருபையினால் ஒரு புத்திரி யுண்டாயிருக்கின்றாள். அவளுடைய ரூபலாவண்ய சுந்தரங்களை நானிப்பொழுது சொல்லவேண்டியதில்லை நீயே காணப்போகிறாய் ஆகையால் நீ அந்தப்பெண்ணை உன் மகனுக்குக் கலியாணஞ் செய்துவைப்பாய். அதுவுமன்றி அந்தவிக்ரமசோழனை அவனுடைய ராஜ்யத்துக் கழைத்துக்கொண்டுபோய்ப் பட்டாபிஷேகஞ் செய்து வைப்பாயென்று கட்டளையிட்டுப் போயினள். இந்தக் கனவைக்கண்ட அரசன் மகிழ்ந்தவனாய்த் தனது பரிவாரங்களுடன் காஞ்சிநகரத்துக்கு வந்து விக்கிரமசோழமகாராஜனைக் கண்டு இவன் சாக்ஷாத தேவியினுடைய அருளை பெற்றிருப்பவனாதலால் இவன் நம்மால் பணியத் தக்கவனென்று சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து தேவியினுடைய கட்டளையைத் தெரிவித்து, அதன்பின் தேவிக்குச் செய்யவேண்டிய பூஜோபசாரங்களை விசேடமாகச் செய்து வணங்கி யோறறி விடைபெற்று அந்தச் சோழனை யழைத்துக்கொண்டு, அவனுடைய ராஜ்யத்துக்குப் போய், அவனுக்குப் பட்டா

ஷேகஞ்செய்து, அதன்பின் அவன்மகளைத் தன்மகனுக்கு விவாகஞ்செய்து முடித்துத் தன் நகரம் போய்ச் சேர்ந்தனன். விக்கிரமசோழமகாராசன் குலசேகரபாண்டியன் சென்றபின்னர் தனது ராஜ்யத்தைத் தன்மகனிடத்து ஒப்புவித்து முன்போல் காஞ்சிநகரத்துக்கு வந்தனன். அப்பொழுது அந்தக் காஞ்சிநகரம் காடாக விருத்தலைக் கண்டு அக்காட்டையழித்து முன்போல் எங்கும் புஷ்பவனங்களுண்டாககித் தேவி ஆலய ஜீர்ணோத்தாரணஞ்செய்து பசுக்கள், பூமிகள், வேண்டியதனங்கள், ஆபரணவகைகள், பொன்னுடைகள் முதலிய எல்லாச்செல்வங்களையும் தேவிக்கு அர்ப்பணஞ்செய்து வைராக்கிய சீலனாய் அரியதவங்களைச்செய்து வந்து யாவராலும் * காந்தாரச்சோழனென்று அழைக்கப்பட்டவனாய்த் தேகாந்தத்தில் தேவியினுடைய பதத்தையடைந்தனன்.

† குணருத்திரரும், ஆதிசேஷனும், கலியுகத்தில் தேவியை விதிமுறைபாகப பூஜித்து முடிவில் முடிவில்லாத முத்திபதத்தை யுடைந்தனர்

இவ்வண்ணம் யுகங்கடோறும தேவர்களே யன்றிச் சோம சூரியாக்கினிக ளென்கிற மூன்று வம்சத்தரசர்களும ஸ்ரீ காமாக்ஷிதேவியை வழிபட்டுப் போகமோக்ஷங்களை யடைந்துள்ளார்.

இங்ஙனம எக்காலத்துங் காஞ்சியில் காமகோடி பீட வாசினியாய் வீற்றிருக்கின்ற சுவர்ணகாமாக்ஷியை ஒருதரந் தெரிசிக்கப் பெற்றவர்கள் யாரோ அவர்கள் கோடி கோதான பலனை யடைவார்கள்.

நூற்பயன்.

இந்தக் காமாக்ஷி லீலா பிரபாவத்தைப் படிப்போருங் கேட்போருஞ் சுவர்ணகாமாக்ஷியைத் தெரிசனஞ்செய்யும்பலனை யடைவார்கள். அன்றியும் இதனைப் பங்குனிமாதம் திருக்

* காடுவெட்டிய சோழன், † பிரம விஷ்ணுக்களாகிய இருவரோடு ஒருவராயுள்ள உருத்திர மூர்த்தி.

கலியாண மகோற்சவதினமாகிய உத்திர நக்ஷத்திர தினத்திலும், காமாக்ஷிதேவியினுடைய ஆவிர்ப்பவ தினமாகிய ஐப்பிசிமாதம் பூரநக்ஷத்திரத்திலும், காமாக்ஷி ஸ்வரூபராய் விளங்கும் வரதராஜமூர்த்தியினுடைய அவதாரதினமாகிய சித்திரைமாதம் அஸ்தநக்ஷத்திரத்திலும் ஆசார்ய முகமாய்க் கேட்டுவந்து முடிவுசெய்வார்களாயின் அவர்களுடையபலனைச்சொல்லிமுடியாது. அன்றையதினங் காமாக்ஷிபிரபாவத்தைச் சொல்லிவந்தவராகிய அவரைச் சாக்ஷாத் வியாசராக நினைத்து அவருக்கு வஸ்திராபரண சந்தன புஷ்பாக்ஷதை பூமாலை முதலியவை சாத்தி தூபதீபங்காட்டி திவ்யமான ஆகாராதிகளால் திருப்தி செய்வித்துப் பின்னர் தாம்பூலம் மங்களார்த்தி முதலியன நடத்தி வேதபாராயணாதி கோஷங்களுடன் சகல வாத்தியங்களுங் கோஷிக்க அவருடைய கிருகத்தை யடைவித்து அவரைச் சிறந்த ஆசனத்திலிருத்தி நமஸ்காரஞ் செய்து அவரிடத்தில் ஆசீர்வாத அக்ஷதைபெற்று சிரசிற்றரித்துத் தங்களிடம் போய்ச் சேரக்கடவர் என்று சுரதமகாராஜனுக்கு மார்க்கண்டேயமுநிவர் சொல்ல அவன் அவரை பிரதக்ஷண நமஸ்காரஞ் செய்து துதித்து நிற்ப, மார்க்கண்டேயமுநிவர் அரசனை ஆலிங்கனஞ்செய்துக் கொண்டு, ஸ்ரீ காமாக்ஷிதேவியானவர் தமது இளந்தளிர்போன்ற மாணிக்கக் கங்கணமணிந்த சுவர்ணத்திருக் கரமாகிய அகப்பையால் சகல சௌபாக்கியங்களையு முகந்து முகந்து கொடுத்தருளல் வேண்டும், நீ சத்ருஹீனனும், அகண்ட சாம்பிராஜ்ய முடையவனும் தீர்க்கமான ஆயுளைப் படைத்தவனும், புத்திர பௌத்திர விருத்தியையுடையவனும், சர்வ காம சமர்த்தியுடையவனும், இம்மையில் வாழ்ந்து, அம்மையில் அனந்த குணகணமணியாய், தேஜோமணியாய் விளங்கும் ஸ்ரீ தேவியினுடைய சரணாரவிந்தநிழலில் வாழக்கடவாயென்று ஆசிபுகன்றனர்.

ஸ்ரீ காமாக்ஷி லீலா பிரபாவம்.

முற்றிற்று.

அத்தியாய அகராதி.

அத்தியாயம்.	பக்கம்.
முதலாமத்தியாயம்.	
பீடத்திரயவிவரணம்	௧
காஞ்சிமண்டலத்தினெல்லை	௨
எல்லைகளின்மகிமை	௩
இரண்டாமாவரண வரலாறு	௪
க்ஷேத்திரநாமவிவரணம்	௬
பாலாற்றின்வரலாறு	௮
பராசத்திமூன்றுவித சொரூபமானது	௧0
இரண்டாமத்தியாயம்.	
விஷ்ணுக்ஷேத்திரவெல்லை	௧௩
ஷை க்ஷேத்திரவரலாறு	௧௫
ஷை - எல்லையிலுள்ள தீர்த்தங்களின் வரலாறு	௧௭
விஷ்ணுக்ஷேத்திரமகிமை	௧௯
மூன்றாமத்தியாயம்.	
அத்திகிரிவரலாறு	௨௧
அத்திகிரிமகிமை	௨௫
நான்காமத்தியாயம்.	
வரதராஜமூர்த்தி வரலாறு	௨௬
ஐந்தாமத்தியாயம்.	
வேகவதிவரலாறு	௩௩
வேகவதிமகிமை	௩௫
ஆறாமத்தியாயம்.	
சிவக்ஷேத்திரவெல்லை	௩௬
ஷை - எல்லையிலுள்ள சிவாலயம்	௩௮
ஷை - எல்லையிலுள்ள விஷ்ணுவாலயம்	௩௯
முத்திரை - தீர்த்தம்	௪0
தீர்த்தபலன் - மகிமை	௪௧
ஏழாமத்தியாயம்.	
ஆம்பரவிருக்ஷபிரபாவம்	௪௨
எட்டாமத்தியாயம்.	
ரசாலேசபிரபாவம், தபஸ்காமாக்ஷி வரலாறு	௪௭
ஒன்பதாமத்தியாயம்.	
சர்வதீர்த்தவரலாறு	௫௭
பத்தாமத்தியாயம்.	
காமகோட்டத்தினெல்லை	௬௧
துர்க்காலயம்	௬௨
விஷ்ணுவாலயம்	௬௩
சிவாலயவரலாறு	௬௪
தீர்த்தம்	௬௫
காமகோட்டமகிமை	௬௭
பதினொன்றாமத்தியாயம்.	
பிலாகாசப்பிரபாவம்	௬௮
பன்னிரண்டாமத்தியாயம்.	
மஹாத்ரிபுரசுந்தரிவர்ண	௭௪
பதின்மூன்றாமத்தியாயம்.	
பூதபந்தவரலாறு	௮௩
பதினான்காமத்தியாயம்	
சுவர்ணகாமாக்ஷிவர்ண	௮௭
சுவர்ணகாமாக்ஷிவரலா	௮௮
ஷை காமாக்ஷி ஆவிர்ப்பவ	௯௫
சுவர்ணகாமாக்ஷிபிரதிஷ்டைவரலாறு	௯௬
பிரமனுக்கு அந்தகத்துவம் வந்தவரலாறு	௯௮
பஞ்சநாமவிவரணம்	௯௯
சிவசந்நிதிஜக்கியநாம பூஜாவிதி	௧00
ஸ்ரீசக்கரபூஜாவிதி	௧0௫
ஆராதனைகள்செய்தவர்கள் வரலாறு	௧0௯

உ

ஸ்ரீ காமாக்ஷிதேவ்யைநம:

புத்தக விளம்பரம்.

இப்பொழுது அச்சிட்டு முடிந்திருக்கும் நூல்கள்

தேவீபாகவதம் முதலாவதுஸ்கந்தமுதல் நான்காவதுஸ்கந்தம் வரையில்முடிந்துள்ள வசனபுத்தகம் (க)க்கு	2	8	0
காஞ்சிப்புராணம்மூலமும்உரையும்வால்யம்உக்கு.	10	0	
ஷை புராணம் நாடுநகரம்தனி மூலமும் உரையும்	1	0	
திருப்போரூர்ச் சந்நிதிமுறை மூலமும் உரையும்	2	0	0
காமாக்ஷி லீலா பிரபாவ வசனம். காஞ்சி க்ஷேத்திர மஞ்சரி வசனம்.	0	12	0
காஞ்சிப்புராணம் வடமொழி சதாத்தியாயம் வசனம். திருவுருப்படத்துடனும் கச்சியப்பமுனிவருடைய செய்யுள்களுடனும்.	2	8	0
திருக்குறள் முதலதிகாரம் பரிமேலழகர் உரைக்தெளிபொருள் விளக்கம்	0	4	0
காஞ்சி க்ஷேத்திர தேவாரத்திரட்டு இரட்டையருலா, பட்டினத்தடிகள் பாடல்	0	4	0
திருப்போரூர்ச் சந்நிதிமுறையில வேதாந்தப் பதிகத் தெளிபொருள் விளக்கம்	0	3	0
சிவஞான போத அதிகரண விளக்கம்	0	4	0

இங்ஙனங் குறித்த நூல்களின் விஷயசூசனைகள் வெளியிட்டிருக்கும் சூசனைபத்திரத்திற் காண்க.

இன்னுஞ் சிலநூல்கள் அச்சிட்டுவருகின்றோம். அவை முற்றுப் பெற்றவுடன் தெரிவிக்கின்றோம்.

தேவீபாகவதம் இரண்டு மாதத்துக்கொருமுறை ஒவ்வொரு ஸ்கந்தமாக முடித்து வெளியிடப்படும். இன்னும் உள்ள ஸ்கந்தங்களொட்ட எட்டுஸ்கந்தங்களும் மொழிபெயர்த்திருக்கின்றன.

வேண்டியவர்கள் சென்னை வேப்பேரி ரெண்டால்ஸ் ரோட் 19-வது நெம்பர் வீட்டிலுள்ள எமக்கெழுதி வி-பி மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். இங்ஙனம்.

கா - ஏ - ஆலாலசுந்தரம் பிள்ளை